பக்கங்கள்: பதினெட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 18 வள்ளுவர் ஆண்டு 2034 கார்த்திகை 08 திங்கட்கிழமை(24-11-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:361

## கருத்துக் கணிப்பில் வெளியான தகவல்கள்:

## பிரபா மீது யாழ். மக்கள் பெருநம்பிக்கை! அவநம்பிக்கையில் ஜனாதிபதி முன்னணி!!

கொழும்பு,நவ.24

யாழ்ப்பாணத்திலுள்ள தற்போதைய நிலை குறித்து அண்மையில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பொன்றில் அங்குள்ள தமிழ் மக்கள், விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மீதும் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதும் பலத்த நம்பிக்கை வைத்துள்ளனர் என்பது தெரியவந்திருக்கிறது.

பிரமுகர்கள், அமைப்புக்கள் மீதும் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை பற்றிய இந்த சமூக கருத்துக்கணிப்பில் புலிகளின் தலைவர் 78 சதவீத மக்களின் நம்பிக்கையைப் பெற்று முதலிடத்தில் இருக்கிறார். விடுதலைப் புலிகள் இயக்கம் மீது 71 சதவீத மக்கள் நம்பிக்கை வைத்திருக்கின்றனர்.

யாழ். பல்கலைக்கழகத்தின் சமூகவியல், அரசியல், விஞ்ஞான துறைத் தலைவரான கலாநிதி என்சண்முகலிங்கன், இலங்கை தேசிய சமாதானச் சபையின் இயக்குநரான கலா

(18ஆம் பக்கம் பார்க்க)

## முரசொலிமாறன் காலமானார்!



சென்னை,நவ.24

மத்திய அமைச்சரும் தி.மு.கவின் மூத்த தலைவர்களுள் ஒருவருமான முரசொலிமாறன் ஞாயிறு மாலை காலமானார். இத்தகவலை அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

உடல் நலக்குறைவிற்காக மாறன், மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். முதலில் அப்போலோ மருத்துவமனையிலும், சிறிது காலம் அமெரிக்காவில் ஹூஸ்டன் மருத்துவமனையிலும் மறுபடியும் அப்போலோ மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றுவந்தார்.

'தி.மு.கவின் மூளை' என்றும் 'எனது மனசாட்சி' என்றும் தி.மு.க தலைவர் கருணாநிதியால் வர்ணிக்கப்பட்ட மாறன் தி.மு.க. தலைவர் கருணாநிதியின் மருமகனும் ஆவார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# சங்கரியின் தலைமை நீடிக்குமா?

# கூட்டணியின் முடிவு ஞாயிறன்று!

## மத்திய செயற்குழு கொழும்பில் கூடுகின்றது

கொழும்பு,நவம்பர் 24

**பெரும் அரசியல் சர்ச்சைக்கு உள்ளாகிவரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, தலைமைப் பதவியில் தொடர்ந்து நீடிப்பாரா என்பது அடுத்த ஞாயிற்றுக்கிழமை முடிவாகும்.**

**இவ்விவகாரம் குறித்து ஆராய்வதற்காகக் கட்சியின் மத்திய குழு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் கூடுகின்றது.**

வீ.ஆனந்தசங்கரியை கூட்டணித் தலைவர் பதவியிலிருந்து நீக்கும்படி கோரும் தீர்மானங்களை கட்சியின் திருகோணமலை, மட்டக்களப்பு அம்பாறை மாவட்டக் குழுக்கள் நிறைவேற்றியுள்ளன. இத்தீர்மானம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும்படி கட்சியின் தலைமைப்பீடத்தையும் அவை கோரியுள்ளன.

இந்நிலையில், எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்குக் கூடும் கட்சியின் மத்திய குழுக்கூட்டத்தில் இந்த விவகாரம் முதன்மையாக எடுக்கப்பட்டு ஆராயப்படவிருப்பதாகவும் தெரியவருகின்றது.

இக்கூட்டத்திற்கான அழைப்பை கட்சியின் செயலாளர் நாயகம் இரா. சம்பந்தன் எம்.பியும், நிர்வாகச் செயலாளர் என்.ரவிராஜ் எம்.பியும் கூட்டாக விடுத்துள்ளனர்.

இந்தக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் இடம்பெறும் முக்கிய விடயங்கள் வருமாறு:-

(18ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் தலையிட்டு தடுத்ததால் அலங்கார வளைவு இடம்மாற்றம்

கரவெட்டி,நவ.24

வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு சமீபமாக நேற்று மாவீரர் அலங்கார வளைவு அமைக்கப்பட்டபோது அங்கு வந்த படையினர் அதற்குத் தடைவிதித்தனர்.

படையினரின் தடைக்கு பொதுமக்கள் தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்ததையடுத்து அங்கு இருதரப்பினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

சம்பவம் குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகள் சிலர் அங்குவந்து படை அதிகாரிகள், விடுதலைப் புலிகளின் வடமராட்சி பிரதேச பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் ஆகியோருடன் கலந்துரையாடினர்.

முன்னர் அமைந்த இடத்திலிருந்து

(18ஆம் பக்கம் பார்க்க)

## மாங்குளம் முகாம் தகர்ப்பின் 13ஆவது நினைவு நாள் நேற்று

முல்லைத்தீவு,நவ.24

மாங்குளம் படைமுகாம் அழிக்கப்பட்டதன் 13ஆம் ஆண்டு நினைவு தினம் நேற்று முல்லைத்தீவில் அனுஷ்டிக்கப்பட்டது.

முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முகுந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை தளபதி கேணல் சொர்ணம் ஏற்றிவைத்தார்.

தமிழீழ தேசியக் கொடியினை தளபதி கேணல் ஜெயம் ஏற்றினார். வெற்றிச்சுடரை தளபதி பாண்டியன் ஏற்றினார். கரும்புலி லெப். கேணல் போர்க்கின் திருவுருவ சிலையினை தளபதி கேணல் பால்ராஜ் திறந்து வைத்தார். நினைவுக் கல்லை போர்க்கின் தந்தையார் திரை நீக்கம் செய்தார்.

(18ஆம் பக்கம் பார்க்க)

## எரிமலையாகக் கொதிக்கும் பிரச்சினை தற்போது மலையகத்துக்கும் பரவிவிட்டது

### ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறுகிறார்



கொழும்பு,நவ.24

நாட்டில் தீர்க்கப்படாமல் உள்ள தற்போதைய பிரச்சினையால் வடக்கு முதல் தெற்கு வரை வியாபித்திருக்கும் குழப்பநிலை, இப்பொழுது மலையகம் உட்பட நாடு முழுவதும் பரவி வருகிறது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அபாய அறிவிப்பு விடுத்துள்ளார்.

இலங்கை தொழில்சார் நிபுணர் சங்க சம்மேளனத்தின் வருடாந்த நிறைவேற்றுக் குழுவின் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார். இந்த நிகழ்வில் சிறப்பதிதியாக அமைச்சர் கரு ஜயசூரிய கலந்துகொண்டார்.

இங்கு ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:-

உலகில் 200 நாடுகள் இருந்தாலும் அவற்றில் இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குச் சமமான பிரச்சினைகளை எதிர்நோக்கும் 10 நாடுகள் கூட இருக்காது. சில சந்தர்ப்பங்களில், நம்நாட்டுப் பிரச்சினைகள் குறித்து வேற்று நாட்டுப் பிரதிநிதிகளுடன் நான் கலந்துரையாடியுள்ளேன். சிலர் இலங்கையின் பிரச்சினைகளுக்கு வழங்கவேண்டிய தீர்வு குறித்து தமது ஆலோசனைகளையும் உபதேசங்களையும் வழங்கியுள்ளனர். இவ்வாறானவர்களுக்கே தற்போது பாரிய பொறுப்பு இருக்கின்றது.

நாட்டை நல்ல வழியில் இட்டுச் செல்வதற்காக அரசியல்வாதிகள் என்ற ரீதியில் நாம் பெரும் பிரயத்தனம் மேற்கொள்கிறோம். எனினும், இன்னும் இலக்கை அடைய முடியாதவர்களாகவே நாம் உள்ளோம். எம்மில் சிலர் இதுவிடயத்தில் கடும் பிரயத்தனம் மேற்கொண்டனர். எனினும், இவர்களுடைய இலக்கை நோக்கிய

(18ஆம் பக்கம் பார்க்க)

### வளைவு அமைக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,நவ.24

பலாலி வீதியில் - பரமேஸ்வராச் சந்தியில் தமிழீழ மாணவர் பேரவை அலுவலகம் முன்பாக இராணுவத்தினரின் ட்ரக்கினால் மோதி வீழ்த்தப்பட்ட மாவீரர் வளைவு நேற்று அப்பகுதியில் மீண்டும் அமைக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் இரவு இந்த வளைவை படையினர் ட்ரக் வண்டியினால் இடித்து வீழ்த்தியிருந்தமை தெரிந்ததே. நேற்று அந்த வளைவு

(18ஆம் பக்கம் பார்க்க)

## ஜெயலலிதாவுக்கு எதிரான வழக்கு: டில்லி நீதிமன்றம் இன்று தீர்ப்பு!

புதுடில்லி,நவ.24

தமிழ்நாட்டில் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் டான்சி வழக்கில் உச்ச நீதிமன்றம் 'இன்று' தனது தீர்ப்பை வழங்கும். முதல்வர் ஜெயலலிதா, தோழி சசிகலா உட்பட "டான்சி" நிலபேர வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அனைவரையும் விடுதலைசெய்து சென்னை உயர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து தி.மு.க. தரப்பில் உச்சநீதிமன்றத்தில் கடந்த ஆண்டு ஜனவரி மாதம் மேன்முறையீடு செய்யப்பட்டது.

இந்த வழக்கை நீதிபதிகள் ராஜேந்திரபாபு, பி.வெங்கட்ராமரெட்டி ஆகியோர்கொண்ட மன்று விசாரித்தது. விசாரணை முடிந்து கடந்த ஆண்டு செப்ரெம்பர் 26 ஆம் திகதி தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது.

(18ஆம் பக்கம் பார்க்க)



இலவச ஆயுள் காப்புறுதிக் காப்பு!

NSB இன் சேமிப்புக் கணக்குகள் ஒன்றில் ரூபா.10,000/- அல்லது அதற்கு மேற்பட்ட தொகையை பேணுவதனூடாக ரூபா.300,000/- வரையிலான இலவச ஆயுட் காப்புறுதியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

(இதற்கான வயது எல்லை 18 முதல் 70 வரை)

NSB தேசிய சேமிப்பு வங்கி

# தமிழீழ மாணவர் பேரவை அலுவலகம் சோதனையிடப்பட்டதற்கு கண்டனம்

## பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,நவ.24

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் அமைந்திருக்கும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகம் நேற்றுமுன்தினம் இரவு பொலீஸாரால் சோதனையிடப்பட்டதை யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடுமையாகக் கண்டித்திருக்கிறது.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கை வருமாறு:-

சிங்கள இனவெறியிலும், தமிழ் விரோதப் போக்கிலும் ஊறித்திளைத்த சிறிலங்கா இராணுவத்தினரும், பொலீஸாரும் தமிழ்மக்களின் அபிலாஷைகளுக்கு ஒருபோதும் மதிப்பளிக்கப் போவதில்லை என்பது மீண்டும் மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது.

தமிழீழத் தேசிய மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வுகள் தொடர்பில் சிறிலங்காவின் ஆயுதப்படைகள் கடந்த சில நாள்களாக நடந்துகொள்ளும் விதம் இதனையே உணர்த்துகின்றது. கடந்த வாரம் சிறிலங்கா இராணுவத்தரப்பு இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு முன்னிலையில் வழங்கிய உறுதிமொழி சிங்களப் படையினரால் மீறப்பட்டுவருகின்றது.

யாழ். குடாநாடெங்கும் தமிழ்மக்கள் நலனுக்காகப் போராடி வீழ்ந்த வீரர்களை நினைவுகொள்ள அமைத்து வரும் அலங்கார வளைவுகள், கொடிகள், பதாகைகள் என்பன அறுத்தெறியப்படுகின்றன. இதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் மக்கள் ஆயுதமுனையில் மிரட்டப்படுகின்றனர். படை உயர் அதிகாரிகள் சில வர்த்தக நிலையங்களுக்கும் வாகனத்தரிப்பிடங்களுக்கும் சென்று மாவீரர் கொடிகளை அறுத்தெறியுமாறு மிரட்டப்படுகின்றனர். தொடர்ந்தும் மாவீரர் நினைவு அலங்காரங்களைச் செய்பவர்கள் கவனிக்கப்படுவார்கள் என வர்த்தகர்கள், சாரதிகள், மாணவர்கள் போன்றோர் படை அதிகாரிகளால் மிரட்டப்படுகின்றனர். முக்கிய சந்திகள், வீதிகள் என்பவற்றில் அமைக்கப்பட்ட அலங்கார வளைவுகளை பலாத்காரமாக எக்காரணமும் இன்றி அகற்றி வரும் படையினர், மிலேச்சத்தனமான-காட்டுமிராண்டித்தனமான - நடவடிக்கையின் உச்சத்தை நேற்று (சனிக்கிழமை) பரமேஸ்வராச் சந்தியில் நிகழ்த்தியுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் அமைக்கப்பட்டுக்கொண்டிருந்த மாவீரர் நினைவுவளைவை அகற்ற நேற்றுமுன்தினம் நூற்றுக்கணக்கில் திரண்ட படையினர் முயன்றனர். எனினும், போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னிலையில் விதிப்போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில் அதனை அமைக்க இணக்கம் காணப்பட்டது. இதற்கு சிறிலங்காப் பொலீஸாரும், படையினரும் உடன்பட்டிருந்தனர்.

இதற்கமைய நேற்றையதினம் (சனிக்கிழமை) யாழ். திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் எம்மால் அமைக்கப்பட்டிருந்த அலங்காரவளைவை இரவு 11 மணிக்கு வந்த 150 இற்கும் மேற்பட்ட சிங்களப் படையின் பலவந்தமாக அகற்றமுற்பட்டனர். இதனைத்தடுக்கமுற்பட்ட எமது மாணவர்களுக்கும் படையினருக்கும் இடையில் வாக்குவாதம் முற்றி பதற்றநிலை உருவாகியது. சுமார் ஒரு மணிநேரம் இழுபறியின் பின்னர் இராணுவ வாகனத்தால் வேகமாக மோதி அலங்கார வளைவை அழித்தனர். இதனை ஆட்சேபித்துத் தடுக்கமுற்பட்ட எமது மாணவர்களை வாகனங்களால் மோதிக் கொலை செய்வதற்கு முயன்றனர்.

அதிலிருந்து மாணவர்கள் சாதுரியமான முறையில் மயிரிழையில் தப்பியதை அடுத்து சந்திரிகா அம்மையாரின் ஏவல் நாய்களான படையினரும், பொலீஸாரும் துப்பாக்கிப் பிரயோகத்தை மாணவர்கள் மீது மேற்கொண்டனர். அதிலிருந்தும் மாணவர்கள் தம்மைத் தற்காத்துக்கொண்ட நிலையில் படையின் சிலரே இதில் படுகாயமடைந்தனர்.

அங்கு வரவழைக்கப்பட்ட சிறிலங்காப் பொலீஸார் இராணுவ வாகனத்தால் சேதமாக்கப்பட்ட சிகரத்தின் பகுதிகளை தமது வாகனத்தில் ஏற்றியபின் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தினுள் பலவந்தமாகப் பிரவேசித்தனர். உள்ளே நின்ற எமது மாணவர்களை மிகமோசமாகத் தாக்கியதுடன் ஒரு மருத்துவ பீட மாணவனை வீதியில் வைத்துக் கடத்திச் சென்றனர். அம்மாணவன் கடும் சித்திரவதைகளின் பின்னர் இன்று அதிகாலையில் (ஞாயிற்றுக்கிழமை) விடுவிக்கப்பட்டுள்ளார். சர்வதேச தமிழீழ மாணவர் அலுவலகத்தினுள் ஆயுதங்கள் உள்ளன என்ற மாயைத்தோற்றத்தை ஏற்படுத்தி, உள்ளேயிருந்த ஆவணங்கள், புத்தகங்கள் என்பவற்றை சேதப்படுத்தின. 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தயாராவதற்காக அங்கு தங்கியிருந்த சிறுவர்களை சிறுவர் உரிமைகள் பற்றி அதிகம் பற்றிக்கொள்ளும் சிறிலங்கா அரசின் பொலீஸார் காட்டுமிராண்டித்தனமாக அச்சுறுத்தியுள்ளனர்.

பொலீஸ் சீருடை இன்றியும், பொலீஸ் குறியீட்டு இலக்கங்கள் இன்றியும் ஆயுத முனையில் அத்துமீறி மாணவர் பேரவையினுள் வந்த பொலீஸார், கணினிகள் புகைப்படக்கருவிகள் மற்றும் தளபாடங்கள் என்பவற்றை அடித்துச் சேதப்படுத்தியுள்ளனர். பெறுமதிவாய்ந்த இலத்திரனியல் உபகரணங்கள் சிலவற்றைக் களவாடியும் சென்றுள்ளனர்.

தமிழ மாணவர்களின் பாதுகாப்பிற்காகவும், மாணவர்களின் நலனுக்காகவும் பல்கலைக்கழக மாணவர்களால் உருவாக்கப்பட்ட சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினுள் சோதனையிடுவதற்கான நீதிமன்ற அனுமதி எதுவுமின்றி பலவந்தமாக உள்ளே பிரவேசித்து மேற்கொண்ட அடாவடித்தனங்களை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம். இது மாணவர்களின் உரிமையை மீறும் செயல் என்பதாலும் அனைத்து மாணவர்களினதும் பாதுகாப்பிற்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்பதாலும் நாம் இதனைக் கண்டிக்கிறோம்.

இத்தனைக்கும் முன்பாக சர்வதேச போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு இது பற்றி அறிவிக்கப்பட்டபோதும் அவர்கள் ஸ்தலத்துக்கு வருகை தராமல் தமது அலுவலகத்தில் கண்மூடி மௌனமாக இருந்துள்ளனர். இது சிங்கள இனவெறியாட்டத்துக்கு அவர்களும் துணைபோயிருப்பதாகவே கருதச் செய்கின்றது.

மண்ணுக்காகவும், எமது வாழ்வுக்காவும் தமது உயிர்களைத் தியாகம் செய்த மாவீரர்களை நினைவுகொள்ளும் ஏற்பாடுகளிற்கு எதிராக மாணவர்களைக் கடத்திச் சென்று சித்திரவதை செய்வதும், அவர்களின் அலுவலகத்தினுள் அத்துமீறிப் பிரவேசித்து அவற்றைச் சேதப்படுத்துவதும் நாகரிகமான செயற்பாடல்ல. ஒரு நாட்டினது அரசின் படைகளில் காட்டுமிராண்டிகளே கூலிக்கு அமர்த்தப்பட்டுள்ளதன் வெளிப்பாடே இது ஆகும்.

இந்தப் பயங்கரமான ஆத்திரமூட்டும் சம்பவத்துக்கும் இதனால் இனிமேல் ஏற்படக்கூடிய விளைவுகளுக்கும் சிங்கள இனவெறியர் படைகளும் அவற்றை இப்போது கையாண்டு வரும் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவுமே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

கடந்த காலங்களில் பொங்கு தமிழ் நிகழ்வை ஒடுக்க சந்திரிகாவும், படைகளும், கைக்கூலிகளும் மேற்கொண்ட அநாகரிகமான செயற்பாடுகள் எத்தகைய பின் விளைவுகளை ஏற்படுத்தினவோ அவையே மாவீரர் நாள் நிகழ்வுகளை குழப்ப முற்படும் போதும் ஏற்படும் எனச்சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

- இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மட்டக்களப்பு நகரில் 25 அலங்கார வளைவுகள்; நாளை மாவீரர் துயிலும் இல்லங்களில் அஞ்சலி

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாவீரர் தினம் மிகச் சிறப்பாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. மட்டக்களப்பு நகரில் 25 இற்கும் மேற்பட்ட அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. வீதிகள் சிவப்பு மஞ்சள் நிறக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தின் பிரதான நிகழ்வுகள் தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெறும் நாளை செவ்வாய்க்கிழமை காலை துயிலும் இல்லங்களில் புலிக்கொடி ஏற்றப்படவுள்ளதுடன், மலரஞ்சலியும் செலுத்தப்படும்.

தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் மூத்த தளபதி கேணல் கருணா, விசேட தளபதி தரமேஷ் ஆகியோரும் கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில், தளபதி ராம், தளபதி உமாராம், பாவா ஆகியோரும் மாவடிமுன்மாரி துயிலும் இல்லத்தில் மாவடி முன்மாரிக் கோட்டதுணை இராணுவத்தளபதி பவான், தாண்டியடி துயிலும் இல்லத்தில் இ.கௌசல்யன், சுதா, கண்டலடி துயிலும் இல்லத்தில் ஆண்டான்குளக் கோட்ட இராணுவத் தளபதி மார்க்கன், தோத்திரன் ஆகியோரும் நிகழ்வுகளில் கலந்துகொள்ளவுள்ளனர்.

எதிர்வரும் 27ஆம் திகதி மாலை 6.35 மணிக்கு சகல மாவீரர் துயிலும் இல்லங்களிலும் ஈகச் சுடர் ஏற்றப்படும். இந்நேரத்தில் மக்கள் தமது வீடுகள், கடைகள், ஆலயங்கள் ஆகியவற்றில் தீபங்களை ஏற்றி மாவீரர் நாளை அனுஷ்டிக்குமாறு விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இன்று காலை 9 மணிக்கு மட்டக்களப்பு உன்னிச்சைப் பகுதியைச் சேர்ந்த மாவீரர்களின் குடும்பங்களை விசேட தளபதி த.ரமேஷ் கௌரவிக்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

# தீவகத்தில் பல இடங்களில் மாவீரர் கௌரவிப்பு நிகழ்வுகள்

மாவீரர் எழுச்சி நாளை முன்னிட்டு தீவகப்பகுதியில் மாவீரர்களின் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வுகள் இடம் பெற்றுவருகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை கரம்பனில், ஊர்காவற்துறை பகுதிகளில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

கரம்பன் தேசிய எழுச்சிப் பேரவை மற்றும் சனசமூக நிலையம் [illegible] கரம்பனில் [illegible] பொதுச் சுடரினை [illegible] சிறப்புப் பொறுப்பாளர் [illegible] நினைவுரைகளை தமிழ் மாணவர் அமைப்பு பொறுப்பாளர் [illegible], தேசிய எழுச்சிப் பேரவையின் தீவக கோட்ட இணைப்பாளர் செல்வம் ஆகியோர் நிகழ்த்தினர். தம்பாட்டி ஊரதீவு கிளையினரால் தம்பாட்டி பொதுமண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில், கல்விக் கழகப் பொறுப்பாளர் தாயகன் பொதுச் சுடரினை ஏற்றினார். சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் எஸ். கஜேந்திரன், மாணவர் அமைப்பு பொறுப்பாளர் ராணிமைந்தன் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர்.

நாரந்தனைப் பகுதி மாவீரர் பெற்றோரைக் கௌரவிக்கும் நிகழ்வு நாரந்தனை றோ.க. வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது. (ஐ-4)

# பட்ட நிறைவுச் சான்றிதழ்: 120 ஆசிரியர்கள் பெற்றனர்

[illegible] கல்லூரியின் [illegible] டிப்ளோமா [illegible] பூர்த்திசெய்த 120 ஆசிரியர்களுக்குப் பட்ட நிறைவுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

[illegible] தேசிய கல்லூரி கலைமண்டபத்தில் நேற்று மாலை இந் வைபவம் இடம்பெற்றது.

முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், அதிபர்கள் சங்கத் தலைவர் எஸ்.சேதுராசா, யாழ். கல்வியற்கல்லூரி [illegible] உதவிப் [illegible] உபதலைவர் மற்றும் பதிவாளர்கள், விரிவுரையாளர்கள் கோல உடையில் கல்லூரியின் ஆலய முன்றலில் இருந்து மங்கள வாத்தியத்துடன் பட்டமளிப்பு மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். மங்கள விளக்கேற்றல், இறைவணக்கம், வரவேற்புரை, தலைமையுரை என்பவற்றைத் தொடர்ந்து தேசிய டிப்ளோமாவைப் பூர்த்திசெய்த ஆசிரிய மாணவர்களுக்கும் அவர்களுக்குரிய உள்ளக பயிற்சி வழங்கிய கல்லூரி அதிபர், ஆசிரியர்களுக்கும் பிரதம விருந்தினர் சான்றிதழ்களை வழங்கினார். (ஐ-150-5)

# நம்பியோர் முதுகில் குத்தமாட்டோம்; பிரதமர் ரணிலுக்குப் பூரண ஆதரவு

## தலவாக்கலை கூட்டத்தில் அமைச்சர் ஆறுமுகன்

தலவாக்கலை,நவ.24

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஒரு போதும் நம்பியவர்களின் முதுகில் குத்தாது. நம்பியவர்களை ஒரு போதும் கைவிடாது. சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு பூரண ஆதரவு வழங்குவோம் என்று அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித்தார்.

தலவாக்கலை நகரச் சந்தியில் நேற்றுக்காலை நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பெருந்தொகையானோர் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் அமைச்சர் தொடர்ந்து பேசும்போது கூறியதாவது-

தேசிய அரசொன்று அமைக்கப்பட்டால் சிறுபான்மைக் கட்சிகளை இணைத்துக்கொள்ளக் கூடாது என்ற நிலைப்பாட்டில் தென்பகுதிக் கட்சிகள் இருக்கின்றன என்று தெரிகிறது. இதனால்தான் நான் நாவலப்பிட்டிக் கூட்டத்தில் பேசியபோது, தேசிய அரசொன்று அமைக்கப்பட்டால் நாங்கள் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் இணைந்து அரசொன்றை அமைப்போம் எனத்தெரிவித்தேன். சகல ஊடகங்களும் இச்செய்தியை வெளியிட்டன.

பிரதமர் சமாதானத்தை முன்னெடுத்துச்செல்வதை சில சக்திகள் விரும்பவில்லை. சமாதானத்தை ஏற்படுத்துவதில் பிரதமர் வெற்றி பெற்றால் தம்மால் அரசியல் நடத்த முடியாது என பாதாலேயே இவ்வாறு அவர்கள் குழப்ப முயற்சிக்கின்றனர்.

- இவ்வாறு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் சொன்னார். (ஐ)

# வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக சந்திரிகாவின் நடவடிக்கை

## பாட்டாளிபுரம் மாவீரர் நினைவுத் தூபி திறப்பு நிகழ்வில் உரை

மூதூர்,நவ.24

அரசுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருக்கிறது. அபிவிருத்தித் திட்டங்கள் ஆக்கம் தராத நிலையில் வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய கதையாக சந்திரிகாவின் நடவடிக்கை இன்று அமைந்திருக்கிறது.

மூதூர் கிழக்கிலுள்ள பாட்டாளிபுரத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற விடுதலைப் புலிகளின் மாவீரர் தின நினைவுத் தூபித் திறப்பு நிகழ்ச்சியில் மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி காருண்யா உரையாற்றும் போது இவ்வாறு கூறினார்.

ஆரம்ப நிகழ்வாக பொது ஈகச் சுடரினை திருமலை மாவட்ட தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் தமிழரசன் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து மாவட்டப் புலிகளின் போர்ப் பயிற்சி ஆசிரியர் கில்மன் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி மரியாதை செலுத்தினார். ஒரு நிமிட அகவணக்கத்தின் பின் மாவீரர் நினைவு தூபியை மாவட்டத்தின் கட்டளைத் தளபதி பதுமன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

பாட்டாளிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட லெப்டினன்ட் வில்வன், வீரவேங்கை புலேந்திரன், லெப்டினன்ட் ரமணி, லெப்டினன்ட் குணபாலன், 2ஆம் லெப்டினன்ட் கவிதா ஆகியோரின் உருவப்படங்களை கட்டளைத் தளபதி பதுமன் திரைநீக்கம் செய்து வைத்தார்.

புலிகளின் மாவட்டத் தளபதி உதயன் மாவீரர்களுக்கான மலர் மாலை வைச் சாத்தினார். அதனைத் தொடர்ந்து முதலாவது மலரஞ்சலி வணக்கத்தை புலிகளின் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திலக் செய்தபின்னர், போராளிகள், மாணவர்கள், பொது மக்கள் உட்பட பல்லாயிரக்கணக்கானோர் மலர்வணக்கம் செய்தனர்.

மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி காருண்யா மேலும் உரையாற்றுகையில்:-

மாவீரர்களின் வரலாறு எமது இனத்தை வாழவைக்கின்றது. இன்று சுமுகமான ஓர் இயல்புநிலை ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் இந்த மாவீரர்கள். சமாதானம் நிலைத்து நிற்பதற்குக் காரணமாக இருக்கின்றவர்கள் இந்த மாவீரர்கள். இந்த மாவீரர்களை நம்பி இருக்கின்றோம். அவர்களுடைய இலட்சியத்தை அடைவதற்கு உறுதியாக இருக்கின்றோம் - எனக் கூறினார்.

இந்த நிகழ்வில் புலிகளின் நிர்வாகப் பொறுப்பாளர் தேவன் உட்பட பலர் உரையாற்றினர். (ஐ)

# 'டான்சி' வழக்கில் இன்று தீர்ப்பு

சென்னை,நவ.24

தமிழக முதல்வர் ஜெயலலிதா சம்பந்தப்பட்ட டான்சி வழக்கில் இன்று உயர் நீதிமன்றம் தீர்ப்புக் கூறுகிறது.

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அரசுக்குச் சொந்தமான நிலத்தை குறைந்த விலையில் வாங்கினார் என்று முதல்வர் ஜெயலலிதா மீது புகார் கூறப்பட்டது.

இது தொடர்பான வழக்கில் சென்னை நீதிமன்றம் ஜெயலலிதா மற்றும் அவரது தோழி சசிகலாவை விடுவித்து தீர்ப்பு அளித்திருந்தது. இதை எதிர்த்து சுப்பிரமணிய சுவாமி மற்றும் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்தனர்.

இந்த வழக்கில் இன்று தீர்ப்பு கூறப்படுகிறது. காலை 11 மணியளவில் நீதியரசர்கள் தீர்ப்பு கூறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



பிலிப்பைன்ஸில் தீவிரவாதமும் போதைப்பொருள் உற்பத்தியும் அதிகரித்து வருகிறது. போதைப்பொருளையும், போதைக் கும்பலையும் தடுக்க அந்த நாட்டுப் பொலீஸார் அதிரடி சோதனையை முடுக்கிவிட்டுள்ளனர். சில நேரங்களில் சோதனைக்கு போகும் பொலீஸாருடன் பெண் அதிபர் குளோரியா அரோயாவும் உடன் செல்கிறார்.

மணிலா நகரில் ஒரு வீட்டில் 'மெத்தாம் பீதாமைன் ஹைட்ரோ குளோரைட்' என்ற போதை மருந்து தயாரிப்பில் ஒரு கும்பல் ஈடுபட்டது தெரியவந்தது. அங்கு குளோரியாவும் பொலீஸாரும் சென்று அந்த போதைப்பொருள்களை கைப்பற்றினார்கள். இது தொடர்பாக மூன்று சீன நாட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்களின் மதிப்பு பலகோடி பெறும்.

# ஜோர்ஜிய அரசியல் பிரச்சினை; தீர்வுகாண முனைகிறது ரஷ்யா

ரிபிலிசி,நவ.24

முன்னாள் சோவியத் ஒன்றிய நாடான ஜோர்ஜியாவில் எழுந்துள்ள அரசியல் குழப்பத்தை முடிவுக்குக் கொண்டுவர ரஷ்யா முனைந்துள்ளது.

இதற்காக ஜோர்ஜிய அதிபர் எடுர்ட் ஷேவட்நட்ஜ் உடன் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் இகோர் இவானோவ் நேற்று பேச்சு நடத்தினார். ஜோர்ஜியத் தலைநகர் ரிபிலிசியில் இச்சந்திப்பு இடம்பெற்றது. ஜோர்ஜியா சென்ற ரஷ்ய வெளிவிவகார அமைச்சர், அதிபரைச் சந்திப்பதற்கு முன்னதாக எதிர்க்கட்சித் தலைவர்களைச் சந்தித்தார்.

ஜோர்ஜியாவின் அரசையும், அதிபரையும் அமைதியான முறையில் மாற்றுவதற்கு உதவும்படியும் -

எக்காரணம் கொண்டும் ரஷ்யா தனது படை பலத்தை ஜோர்ஜிய அரசியல் பிரச்சினையில் பிரயோகிக்கக் கூடாதென்றும் -


ரஷ்ய அமைச்சரிடம் தாம் வலியுறுத்தியதாக எதிர்க்கட்சியான தேசிய இயக்கத்தின் தலைவர் மிகைல் சாக்ஷ்விலி பேச்சுக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இதேசமயம், அவசர கால நிலையை பிரகடனப்படுத்தியுள்ள அதிபர், தனது அரசியல் அதிகாரத்தை நிலைநிறுத்த இராணுவ பலத்தைப் பயன்படுத்தப் போவதாகவும் எதிர்க்கட்சிகளை எச்சரித்துள்ளார்.

ஆனால், இராணுவ பலத்தைப் பயன்படுத்தும் அவசியம் எதுவும் தற்போது அரசுக்கு இல்லை என்று ஜோர்ஜிய பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையிலேயே ஜோர்ஜிய பிரச்சினையில் ரஷ்யா தலையிட்டுள்ளது.

இம்மாத ஆரம்பத்தில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் அதிபர் மற்றும் அவரது கூட்டணிக் கட்சியினர் பெரும் மோசடிகளில் ஈடுபட்டு வென்றதாக எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டினார்கள் என்பதும் -

நேற்றுமுன்தினம் நாடாளுமன்றம் கூடியபோது, அவர்கள் முற்றுகையிட்டு நாடாளுமன்றச் செயற்பாடுகளை முடக்கினார்கள் என்பதும் - தெரிந்தவையே. (ஒ)



ஜோர்ஜிய நாடாளுமன்றத்தை நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சியினர் முற்றுகையிட்டபோது எடுக்கப்பட்ட படம்.

# ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது ஆப்கானில் துப்பாக்கிச் சூடு!

காபூல்,நவ.24

ஆப்கானிஸ்தானியத் தலைநகர் காபூலில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது ஆப்கான் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் குறைந்தது 4 ஆப்கானிஸ்தானியர்கள் காயமடைந்தனர். இதில் ஒருவர் உயிரிழந்ததாக உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவித்தன. பாதுகாப்பு அமைச்சின் தலைமை அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீதே ஆப்கான் படையினர் கண்மூடித்தனமாக சுட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

ஆப்கான் இராணுவத்தை மறுசீரமைக்கும் பணியை எதிர்ப்பவர்களே பாதுகாப்பு அமைச்சின் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் ஆயுதங்களை ஏந்தியிருந்ததாகவும்-

அமைச்சு அலுவலகக் கட்டடத்தைச் சேதமாக்க முற்பட்டதாகவும்-

அதனால், வேறு வழியின்றி துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகவும் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார்.

தலிபான்களின் ஆட்சி அகற்றப்பட்ட பின்னர் ஆப்கானில் ஆயுதமேந்திய இனக்குழுக்களை சேர்த்து அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர் ஆப்கான் இராணுவத்தை உருவாக்கினர்.

தற்போது ஆப்கான் இராணுவத்தினரில் இனங்களிடையேயான சமநிலையைப் பேணும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதற்காக படையில் அதிகம் உள்ள இனத்தவர் விலக்கப்பட்டு வருகின்றனர். இவ்வாறு பணிநீக்கம் செய்யப்பட்டவர்கள் பரவலாக போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். (ஒ)

உலக அரங்கில்

## இஸ்ரேல் மீது தடை விதிக்க கோரிக்கை

பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் ஐ.நா. ஒப்புதலுடன் நிறைவேற்றப்பட்ட திட்டத்தை நடைமுறைப்படுத்த இஸ்ரேல் மறுப்பதால், அதன் மீது பொருளாதாரத் தடையை விதிக்கும்படி ஐ.நா. சபையை பலஸ்தீனம் வலியுறுத்தியது.

பலஸ்தீனத் தலைவர் யஸீர் அரபாத்தின் தலைமை ஆலோசகரான நபில் அபுருடினா இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இஸ்ரேல் எதிர்த்தபோதும், அமெரிக்கா ஆரம்பத்தில் ஆட்சேபக் குரல் எழுப்பியபோதும் ரஷ்யா கொண்டு வந்த திட்டம் ஐ.நா. பாதுகாப்பு சபையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

## கென்னடியின் நினைவு தினம்

அமெரிக்க முன்னாள் அதிபர் ஜோன் எவ்.கென்னடி சுட்டுக்கொல்லப்பட்ட 40ஆவது நினைவு நாள் அமெரிக்காவில் நேற்றுமுன்தினம் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

அமெரிக்காவின் 35 ஆவது அதிபரான கென்னடி அமெரிக்கர்களின் ஆதர்ஷபுருஷர்களில் ஒருவராக விளங்கினார்.

1963ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22ஆம் திகதி அவர் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது கொலை தொடர்பாக பல சர்ச்சைகள், சந்தேகங்கள் வெளிக்கிளம்பின. இன்றும் கென்னடியின் கொலைக்கான காரணம் குறித்து அமெரிக்காவில் விவாதங்கள் தொடர்கின்றன.

ஆயினும், கென்னடியின் கொலைக்குப் பின்னர்தான் தமது அரசாங்கம் தம்மை ஏமாற்றவும், பொய்களைக் கூறவும் தயங்குவதில்லை என்று அமெரிக்கர்கள் உணரத் தலைப்பட்டனர். அதுமட்டுமன்றி, அமெரிக்க அரசியலில் இருண்ட பக்கங்கள் கென்னடியின் மரணத்தைத் தொடர்ந்துதான் அம்பலமாகின.



கென்னடியின் சமாதிக்கு அஞ்சலி செலுத்தும் அமெரிக்கர்கள்

# அசாம் கலவரப் பின்னணியில் பாக்., பங்களாதேஷ் உள்ளன

## இந்தியா குற்றச்சாட்டு

கவுகாத்தி,நவ.24

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் குடியமர்ந்த பீஹார் மாநில மக்களுக்கு எதிரான கலவரம் தொடர்ந்து நீடிக்கிறது. இதன் பின்னணியில் பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷின் சதி இருப்பதாக இந்திய அமைச்சர் சி.பி. தாக்கூர் கூறியுள்ளார்.

இதுவரை இப்பிரச்சினையில் பஹார் மாநிலத்தவர் 50 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கலவரம், கொள்ளை, கொலை என மாநிலம் முழுவதும் பிரச்சினை நிலவுகிறது.

இது தொடர்பாக பிரதமர் வாஜ்பாய் குடியரசுத் தலைவருடன் விவாதித்தார். இதையடுத்து, கலவரத்தை அடக்க கூடுதல் இராணுவம் வரவழைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

அசாமில் கலவரப் பகுதிகளை பார்வையிட்ட மத்திய அமைச்சர் சி.பி. தாக்கூர் கூறுகையில், 'அசாமில் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டு வரப்படாது. இந்தக் கலவரத்தின் பின்னணியில் பாகிஸ்தான் மற்றும் வங்கதேசம் இயங்கி வருகிறது' என்றார்.

# பெட்டியில் மறைந்து ஹொங்கொங் பயணம்

லண்டன்,நவ.24

சூட்கேஸுக்குள் பதுங்கியபடி ஹொங்கொங் நாட்டுக்குள் ஊடுருவ முயன்ற பாகிஸ்தான் பிரஜைக்கு 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவருக்கு உதவிய இரு இந்தியர்களுக்கும் 10 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

பாகிஸ்தானைச் சேர்ந்தவர் அப்துல் பாஸிட் (வயது 32). இவர் ஹொங்கொங்கிற்குள் நுழையத் திட்டமிட்டார்

அதற்கு ரவீந்தர் சிங் ( வயது 23), அமர்ஜித் சிங் (வயது 37), என்ற இருவர் உதவினர்.

இருவரும் தங்களது பெரிய சூட்கேஸுக்குள் பாஸிட்டை நுழைத்தனர்.

பிறகு இருவரும் ஹொங்கொங் பயணமாகினர். ரவீந்தர் சிங் அந்த சூட்கேஸை எடுத்துக்கொண்டு ஹொங்கொங் புறப்பட்டார். அவரைச் சுங்கத் துறையினர் மடக்கினர் . சூட்கேஸ் உப்பி கிடந்ததால், சந்தேகம் தோன்றியது. அதுகுறித்து விசாரித்த போது உண்மை புலப்பட்டது.

பெட்டியைத் திறந்தால், உள்ளே மடங்கி அமர்ந்திருந்த பாஸிட் பிடிபட்டார்.

இவ்வழக்கை குவூன்டாங் மாஜிஸ்திரேட் விசாரித்தார். அவர் மூவருக்கும் தலா 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தார்.

# இஸ்ரேலிய பாதுகாவலர் இருவர் கிழக்கு ஜெருசலேமில் படுகொலை!

ஜெருசலேம்,நவ.24

இஸ்ரேலிய ஊர்காவல் படையினர் இருவர் சுட்டுக்கொல்லப்பட்டனர். யூதக்குடியிருப்புகளை பலஸ்தீனப் பகுதிகளிலிருந்து பிரிக்கும் இஸ்ரேலின் சர்ச்சைக்குரிய எல்லை வேலியைப் பாதுகாத்து நின்ற ஊர்காவல் படையினரில் இருவரே சுட்டுக்கொல்லப்பட்டனர். கிழக்கு ஜெருசலேமில் அபுடிஸ் என்ற இடத்திலேயே இவர்கள் கொல்லப்பட்டனர்.

பலஸ்தீனப் பகுதிகளில் இருந்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த யூதப்பகுதிகளுக்குள் நுழைவதைக் கட்டுப்படுத்தவே பலஸ்தீன எல்லைகளில் உயரமான கற்றூண் வேலிகளை அமைப்பதாக இஸ்ரேல் கூறுகிறது.

ஆனால், இந்த எல்லை வேலிகள் பலஸ்தீனப் பிரதேசங்களில் இஸ்ரேல் மேற்கொண்டுவரும் ஆக்கிரமிப்பின் அடையாளங்கள் என்று பலஸ்தீனர்கள் விமர்சிக்கின்றனர்.

இந்த நிலையில் எல்லை வேலிகளை அமைப்பதற்கான கட்டட உபகரணங்களைக் காத்து நின்ற இஸ்ரேலிய ஊர்காவல் படையினர் மீது இஸ்ரேலியத் தீவிரவாதிகள் சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் ஊர்காவல் படையினரில் இருவர் கொல்லப்பட்டனர். (ஒ)



# மொழித்திறன்களை வளர்த்தெடுப்பது எவ்வாறு?

மொழியைக் கையாள்வதில் ஒருவரிடம் இருக்கக்கூடிய திறன்களை மொழித்திறன்கள் என்று குறிப்பிடலாம். கேட்டல் - கிரகித்தல், வாசித்தல் - கிரகித்தல் பேசுதல், தொடர்பாடல், வாதிடல், ஆக்குதல் முதலியன மொழி சார்ந்த திறன்களாக அமைவன.

ஒரு மனிதனது வாழ்க்கை முன்னேற்றத்தின் அடிப்படையாக விளங்குவது மொழிசார்ந்த திறன்களே ஆகும். ஒரு மனிதன் கல்விமானாக, அறிஞனாக நல்லாசிரியனாக பேராசிரியனாகப் புகழ்பெற வேண்டுமாயின் அவரிடம் மொழிசார்ந்த திறன்களில் ஒன்றோ, பலவோ சிறப்பாக அமைந்திருத்தல் வேண்டும். கலை இலக்கியம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் முதலிய துறைகளில் ஈடுபட்டிருப்பவர் மட்டுமன்றி வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் இது பொருந்தும்.

மொழித்திறனின் முக்கியத்துவத்தை இன்று நம்மிற் பலர் சரியாக உணர்ந்துகொள்ளவில்லை, என்றுதான் எண்ணத்தோன்றுகிறது. தாய்மொழி, கற்றல் - கற்பித்தல் என்பது பாடஅலகுகளில் உள்ள கருத்துக்களைக் கிரகிப்பதற்கும் வினாக்களுக்கு விடை எழுதுவதற்குமான பயிற்சிதான் என்று பலரும் கருதுகிறார்கள். ஆனால், மொழி கற்றல் என்பது மொழிப்பாடநூல்களிலே தரப்பட்டுள்ள பாட அலகுகளைக் கருவியாகக்கொண்டு பிள்ளைகளிடம் மொழிசார்ந்த திறன்களை வளர்த்தெடுப்பதும் அதனூடாக அவர்களது வாழ்க்கைத் தகைமைகளை விருத்தி செய்வதற்குமான ஒரு செயன்முறையாகும் என்பதே பொருத்தமானது.

இன்று எமது பிள்ளைகளிடம் மொழித்திறன்கள் குறைந்து வருவதையிட்டுச் சமூக அக்கறை உடைய பலரும் விசனப்படுவதனைக் கண்டு கொள்ளமுடிகிறது. இந்த நிலைமைக்கான காரணிகளையும் அவற்றை நீக்குவதற்கான வழிமுறைகளையும் பற்றிச் சிந்திப்பது மிகவும் பொருத்தமாக அமையும்.

ஆரம்ப, இடைநிலை வகுப்புகளிலே தமிழ்மொழி கற்பித்தல் தொடர்பாக எம்.ஏ.நுஃமான் தனது நூலிலே பின்வருமாறு கூறுகிறார். 'ஐந்து வயது முடிந்த பின்னர் பாடசாலைக்குச் செல்லும் ஒரு பிள்ளை அந்த ஐந்து வயதினுள் தனது தாய்மொழியிலே தனது தேவைகள் அனைத்தையும் வெளிப்படுத்தக்கூடிய மொழியறிவு பெற்றிருக்கும். குழந்தை பாடசாலைக்கு வருமுன தான் வாழும் சமூகச்சூழலிருந்து பெற்றார், சகோதரர், விளையாட்டுத் தோழன், உறவினர், அயலவர் முதலியோரின் தொடர்புகள் மூலம் நன்கு பேசக் கற்றுக்கொண்டிருக்கும். பாடசாலையில் ஆரம்ப வகுப்புகளில் குழந்தையின் மொழிக்கல்வி என்பது எழுதவும், வாசிக்கவும், கற்றலையே குறிக்கிறது. பாடசாலைக்கு வெளியே ஒலியன்களையும் இலக்கண அமைப்பையும் கற்றுக்கொண்ட பிள்ளை, பாடசாலையிலே ஒலியன்களுக்குரிய வரிவடிவங்களையும் சொற்களையும் வாக்கிய அமைவுகளையும் கற்றுக் கொள்கிறது'-*(ஆரம்ப, இடைநிலை வகுப்புகளில் தமிழ்மொழி கற்பித்தல்: ஒரு மொழியியல் அணுகுமுறை - எம்.ஏ.நுஃமான் 2002).*

இவ்வாறு மொழிசார்ந்த பின்புலத்துடன் பாடசாலையில் நுழையும் பிள்ளைகளில் ஒருசாரார், பின்னர் மொழித்திறன்களிலே பின்தங்கியவர்களாகவும், அதனால் கல்வியிலே பின்தங்கியவர்களாகவும் ஆகிவிடுவதனை நாம் அவதானிக்க முடிகிறது.

இந்த நிலைக்குரிய அடிப்படையான காரணங்களில் ஒன்று எழுத்துக்களை இனம் காண்பதில் உள்ள சிக்கல் ஆகும். தமிழ்மொழியில் இருநூற்று நாற்பத்தேழு எழுத்துக்கள் உள்ளன. அவற்றுள்ளும் பலவகையான வரிவடிவங்கள் உள்ளன. இவற்றை இனங்கண்டு மனதிலே நிறுத்தி அவற்றைக் கையாள்வதில் ஆரம்ப வகுப்புகளில் பிள்ளைகள் சிக்கலை எதிர்நோக்குகிறார்கள். தமது வீட்டுச் சூழலில் நல்ல வழிகாட்டல்களும் ஊக்குவிப்புக்களும் உள்ள பிள்ளைகள் இது விடயத்திலே தேறிவிட அவை கிடைக்காத பிள்ளைகள் பின்தங்கி விடுகின்றனர்.

இவர்களிலும் ஒருசாரார் தொடர்ந்தும வரும் வகுப்புகளிலும் பின்தங்கியவர்களாகவே இருந்து பாடசாலையை விட்டு வெளியேறுவதும் உண்டு.

எழுத்துக்களை இனம் காண்பதில் பிள்ளைகளுக்கு ஏற்படும் சிக்கல் பெரும்பாலும் அவற்றின் வரிவடிவங்கள் தொடர்பானவையே. உயிர் எழுத்துக்களைப் பொறுத்த வரையில் இச்சிக்கல் குறைவானவையாக இருப்பினும், உயிர்மெய் எழுத்துக்களைப் பொறுத்தவரையில் இதனை நாம் அவதானிக்க முடிகிறது.

உயிர்மெய் எழுத்துக்களிலே பயன்படுகின்ற ா(அரவு), ெ(ஒற்றைக்கொம்பு), ே(இரண்டைக்கொம்பு) முதலியன தொடர்பாகவே எமது பிள்ளைகள் அதிக பிழைகளை விடுகிறார்கள். 'க', 'ச', முதலிய எழுத்துக்களுடன் மேலே குறிப்பிட்ட உயிர்க்குறிகள் இணையும்போது அந்த எழுத்துக்களுக்குரிய உயிரொலிகள் இழக்கப்பட்டு இந்த உயிர்க்குறிகளுக்குரிய உயிரொலிகள் இழக்கப்பட்டு இந்த




உயிர்க்குறிகளுக்குரிய ஒலிகள் சார்ந்து புதிய உயிர்மெய்கள் பிறக்கின்றன என்பதனைப் பிள்ளைகள் உணரத் தவறிவிடுகிறார்கள். உதாரணமாகக் 'க'வின் முன் 'எ' வரும் போது, 'க'வுக்குரிய 'அ'கர உயிர் இழக்கப்பட்டு 'எ'க்குரிய 'எ' ஒலி இணைந்து 'கெ' எனும் உயிர்மெய் உருவாகிறது என்பதனைப் பிள்ளைகள் அனுபவபூர்வமாக உணர்ந்து கொள்வதில்லை.

ஆகவே, எழுத்துக்களைப் பயிற்றும்போது உயிர்க்குறிகளின் ஒலிகள் உயிர்மெய் எழுத்துக்களிலே ஏற்படுத்தும் மாற்றங்களை பிள்ளைகள் உணர்ந்துகொள்ளும்படி செய்தல் வேண்டும். ஆரம்ப வகுப்புக்களில் எழுத்துக்களைச் சொல்லிக்கொடுக்காமல் வரிவடிவங்களை உருவங்களாக அமைத்து முதலில் எழுத்துக்களை இனங்காணவும், உயிர்க்குறிகளைப் பொருத்தி உயிர்மெய் எழுத்துக்களை உருவாக்கவும் பின்னர் சொற்களை உருவாக்கவும் பயிற்றுதல் வேண்டும்.

தமிழ் மொழியைப் பொறுத்தவரையில் ஒலிப்பில் மயக்கம் விளைவிக்கும் எழுத்துக்களும் பிள்ளைகளுக்குச் சிக்கலை ஏற்படுத்துகின்றன. ந,ண,ன, ர,ற - ல,ழ,ள முதலிய எழுத்துக்கள் ஒலிப்பில் மயக்கம் தரும் எழுத்துக்களாக உள்ளன. இந்த நிலையை நவீன மொழியியலாளர்கள் ஒலிஇணைவு என்று கூறுகின்றனர்.

இவற்றுள் ர,ற,ல முதலிய எழுத்துக்கள் தொடர்பான சிக்கல்கள் அதிகம் எழுவதில்லை. குறிப்பிட்ட சில சொற்கள் தொடர்பாகவே சிக்கல்கள் எழுகின்றது. ந/ன, ள/ழ தொடர்பான ஒலிப்பு நிலைகளே பிள்ளைகளுக்கு அதிக சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. எழுத்துக்கள் தொடர்பாகப் பிள்ளைகள் விடுகின்ற பிழைகள் இவை தொடர்பாகவே உள்ளன. பிள்ளைகள் மட்டுமன்றி வளர்ந்தவர்களும் இப்பிழைகளை விடுகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு.

ன/ந ஆகிய எழுத்துக்களைப் பொறுத்தவரையில் "நாவின் வீங்கி அண்ணத்தை ஒற்றுவதால் பிறப்பது" 'ன'கரம் என்றும், நாவின் முன் அண்ணத்தை உறுவதால் பிறப்பது 'ந'கரம் நன்னூல் தரும் விளக்கங்களின் அடிப்படையிலேயே நாம் கற்பிக்க முனைகிறோம். ஆனால், இவ்விரு ஒலியன்களும் ஒரே ஒலியன்களாக மாறிவிட்ட சந்தர்ப்பங்களை நாம் இன்றைய மொழிவழக்கிலே காணமுடிகிறது. இதுபற்றிக் கூறுகின்ற எம்.ஏ.நுஃமான் அவர்கள் 'ந'கரம் 'த'கரத்திற்கு முன் வருகின்ற சந்தர்ப்பங்களிலேயே நன்னூலார் கூறியபடி வெடிப்பொலியாக வருகிறது. (உ+ம் பந்து,சந்தி) நான், நன்றி, நண்டு என ஏனைய இடங்களில் 'ன' கரத்திற்குரிய மூக்கொலியாகவே வருகிறது என்று கூறியுள்ளமை இது விடயத்திலே சிந்திக்கத்தக்கது ஆகும்.

ஆகவே, இது விடயத்திலே பிள்ளைகளுக்குத் தெளிவு ஏற்படும் வகையிலே நாம் கற்பித்தல்வேண்டும். தற்காலத் தமிழில் ஒரு குறிப்பிட்ட சூழலில் மட்டுமே 'ந'கரம் வேறுபட்டு ஒலிக்கிறது என்பதையும் ஏனைய இடங்களில் ந/ன கரங்களுக்கிடையே ஒலிப்பில் வேறுபாடு இல்லை என்பதையும் உணர்த்துதல் வேண்டும்.

ள/ழ ஆகிய எழுத்துக்களும் இன்றைய நிலையில் தமது தனித்துவத்தை இழந்து ஒரே ஒலியைப் பெற்றுள்ளதனை நாம் அனுபவபூர்வமாக உணரமுடிகிறது. 'அளி' என்ற சொல்லுக்கும் 'அழி' என்ற சொல்லுக்கும் ஒலிப்பில் வேறுபாடு காண்பது கடினம். இதனாலேயே பிள்ளைகள் இவ்வெழுத்துக்கள் விடயத்திலே சிக்கலை எதிர்நோக்குகிறார்கள். ஆகவே, இவ்விரு எழுத்துக்களின் ஒலிகளும் வேறுபாடின்றியே ஒலிக்கின்றன என்பதை எடுத்துக்கூறி ள/ழ என்பன இடம்பெறும் சொற்களைத் தனித்தனியே கற்பித்தல்வேண்டும்.

மொழித்திறன் சார்ந்த செற்பாடுகளிலே வாசிப்பும் ஓர் அம்சமாகும். வாசிப்பே மனிதனைப் பூரணமானவனாக ஆக்கும். வாசிப்புப்பழக்கம் உடைய ஒருவனே கல்வி உலகிலோ தொழில் துறைகளிலோ, சமூக நிலையிலோ உன்னத நிலையை எய்த முடியும்.

பிள்ளைகளிடம் வாசிப்புத்திறன் ஏற்படுவதற்கு வாசிப்புப் பொறிமுறைகளுடன் கூடிய பயிற்சி சிறுவயது முதலே வழங்கப்படவேண்டும். வீடுகளிலே பெற்றார் தம் பிள்ளைகளை உரத்து வாசித்தலியே அதிகம் ஈடுபடுத்துதல் வேண்டும். பல்வேறு நூல்களையும் வாசிப்பதில் அவர்களுக்கு நாட்டத்தை ஏற்படுத்துதல் வேண்டும்.

வாசிப்புப்பழக்கம் என்பது வேறு. வாசிப்புத்திறன் என்பது வேறு. வாசிப்புத்திறன் என்பது ஓர் உரைப்பகுதியைப் பிழையறவும், நயமுறவும் பொருள் புலப்படும்படியும் குரல், தொனி வேறுபாடுகளுடனும் நிறுத்தக்குறியீடுகளை அனுசரித்து தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் மெய்ப்பாடுகள் தோன்றவும் வாசித்தலைக் குறிக்கும். வாசிப்புத்திறன் பெருக வாசிப்புப்பழக்கம் உதவும்.

வாசிப்புத் திறனும், பேச்சுத்திறனும் ஒன்றிணைந்த கூறுகள் எனலாம். பிள்ளைகளிடம் இவ்விரு திறன்களையும் வளர்த்தெடுக்கப் பாடசாலைச் சூழலிலேயே அதிக சந்தர்ப்பங்கள் உள்ளன. பாடநூல்களில் வரும் உரைப்பகுதிகளையும், நாடகப் பகுதிகளையும், கதைப்பகுதிகளையும் இதற்காகப் பயன்படுத்திக்கொள்ளலாம். இப்பகுதிகளைக் கற்பிக்கும் சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் வாசிப்

**கந்தையா முருகதாசன்**
ஆசிரிய ஆலோசகர்
தென்மராட்சிக் கல்விவலயம்

புப் பொறிமுறைகளுடன் உரத்து வாசிப்பதற்குப் பயிற்றுதல் வேண்டும். பேச்சுத்திறனை வளர்ப்பதற்கு வாசிப்புச் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்கின்ற அதேவேளை, பேச்சுப் பயிற்சிகளை வழங்குதல் முக்கியமானது ஆகும்.

பேச்சுத்திறனை பிள்ளைகளிடம் வளர்ப்பதற்கு பல படிமுறைகள் உள்ளன. முதலில் பேச்சுக்கான விடயத்தைத் தெரிவுசெய்து பிள்ளைகளுக்கு வழங்குதல்வேண்டும். சிறிய வகுப்புப் பிள்ளைகளுக்கு ஆசிரியர் தாமே தயாரித்துக் கொடுக்கலாம். மேல்வகுப்பு மாணவர்களுக்கு, விடயத்தின் அடிப்படையில் நூல்களை வழங்கி தகவல்களைத் திரட்ட வழிகாட்டுதல் வேண்டும். பின்னர் திரட்டப்பட்ட தகவல்களை அடிப்படையாகக்கொண்டு பேச்சுக்கான சட்டகம் ஒன்றை அமைக்க வழிகாட்டல் வேண்டும். பின்னர் விடயங்களை விளக்கி மனனம் செய்யும்படி ஊக்குவித்தல் வேண்டும். ஆரம்பத்திலே பேச்சுக்கான சட்டகத்தைக் காட்சிப்படுத்தி பேசுவதற்குப் பயிற்றலாம். பேச்சுக்கான பொறிமுறைகளை அறிமுகம் செய்து பயிற்சி வழங்குதல் வேண்டும். தரமான பேச்சு நிகழ்ச்சிகளை ஒலிநாடா, ஒளிநாடா என்பவற்றிலே பதிவுசெய்து துணைச் சாதனமாகப்

(13ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச்சாலைக் காட்சிகள்



கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற ஆங்கில தினவிழாவில் மாணவ, மாணவியர்கள் பாடல் நிகழ்ச்சி ஒன்றில் பங்குபற்றிய போது எடுக்கப்பட்ட படம்.



வட்டுக்கோட்டை கலைவாணி கல்வி நிலையத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்ற போது மாணவி ஒருவருக்கு வட்டு. மேற்கு கிராம அலுவலர் செல்வி ம.தேவமனோகரி பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம்.
(படம்: வலி.மேற்கு செய்தியாளர்)



கோப்பாய் மக்கள் நலன்காக்கும் பிரிவின் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஸ்ணசாமி மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதைப் படத்தில் காணலாம். (எ-10)



யாழ்.வண்ணை காளிகோயிலடி ஞானக்குழந்தை இல்ல பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி நிகழ்வில் கலந்துகொண்ட வண்ணை இளையதம்பி இந்து வித்தியாலய அதிபர் மு.செல்லையா உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (எ-10)

உதயன்

# அரசமைப்புத் திருத்தம் அவசியம் தேவை

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான அரசியல் நெருக்கடிகளைத் தீர்த்து, அரச மற்றும் நிர்வாக நடவடிக்கைகளையும் சமாதான முயற்சிகளையும் தங்கு தடையின்றி முன்கொண்டு செல்வதற்கான நடைமுறைகளை வகுப்பதற்காக இருவரினதும் பிரதிநிதிகளைக் கொண்ட - அதிகாரிகள்மட்ட- குழு நியமிக்கப்பட்டிருக்கின்றது. இந்த நால்வர் குழு தனது நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்து, ஓர் இணக்க நிலையை எட்டுவதற்கு எதிர்வரும் டிசெம்பர் 15 ஆம் திகதிவரை காலக்கெடு விதிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

ஆனால், இந்த நால்வர் குழுவின் நடவடிக்கை முயற்சிகளில் குறிப்பிடத்தக்க பெறுபேறோ, முன்னேற்றமோ இல்லை என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

சுமார் ஒன்றரை வருட காலமாக - மெதுவாக - அதேநேரம் உறுதியாக - முன்நகர்ந்து கொண்டிருந்த சமாதான முயற்சிகளும் செயற்பாடுகளும், அரசமைப்பின்கீழ் தமக்குள்ள உரிமைகளைத் தான் மேற்கொள்கின்றார் எனத் தெரிவித்து ஜனாதிபதி முன்னெடுத்த நடவடிக்கைகளால் தடைப்பட்டுப்போய் நிற்கின்றன.

அரசமைப்பைக் காரணங்காட்டி ஜனாதிபதி போட்ட தடக்கு, சமாதான முயற்சிகளை முன்நகர விடாது தடைக்கல்லாகியிருக்கின்றது என்பதை இப்பத்தியில் பல தடவைகள் சுட்டிக்காட்டியுள்ளோம்.

ஈழத்தமிழரின் நேரடிப் பங்களிப்போ, அங்கீகாரமோ, இணக்கமோ, விருப்பமோ பெறப்படாமல் பேரினவாதிகளால் கொண்டு வரப்பட்டதே தற்போதைய அரசமைப்பு என்பதை புலிகள், தமிழ்க்கட்சிகள் உட்பட தமிழர் தரப்பு முழுவதுமே பல தடவைகள் சுட்டிக்காட்டியாகி விட்டது.

இந்த அரசமைப்புக்குள் இனப்பிரச்சினைக்கான அமைதித் தீர்வைக்காணவோ, தமிழ்பேசும் மக்களின அபிலாஷைகளை நிறைவுசெய்யும் அதிகாரப்பகிர்வை ஏற்படுத்தவோ முடியாது என்பதை விடுதலைப் புலிகள் திரும்பத் திரும்ப வெளிப்படுத்தி வந்துள்ளனர்.

அதிகாரப் பகிர்வுடன் கூடிய - இறுதியான - அமைதித் தீர்வைக் காண்பதற்கு மட்டுமல்ல, அந்தத் தீர்வைக் காண்பதற்கான சமாதான முயற்சிகளை முன்னெடுக்கக்கூட இந்த அரசமைப்பு அனுமதிக்காது - தடை போடும் - என்ற யதார்த்தம் இப்போது நடைமுறையில் புலப்படுத்தப்பட்டிருக்கின்றது.

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்த பிரதமர் ரணிலின் முயற்சிகளை ஓர் ஒப்பந்தத்தின் மூலம் தடுப்பதற்கும், சமாதான முயற்சிகளின் எதிர்காலத்தையே கேள்விக்குள்ளாக்கவும் சமரசப் பணியில் ஈடுபட்டிருந்த நோர்வேத் தரப்பு அதை இடைநிறுத்தி வெளியேறச் செய்வதற்கும் அரசமைப்பு மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருக்கும் - மட்டுமட்டில்லாத - அதிகாரமே காரணம் என்பது உணரப்பட்டிருக்கின்றது.

என்வே, இந்த அரசமைப்பை வைத்துக்கொண்டு அமைதித் தீர்வு காண்பது இயலாத காரியம் என்றும் அதற்கு வெளியே வந்துதான் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்றும் புலிகள் கூறிவந்தது முற்றிலும் சரிதான் என்பது இப்போது நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

இப்போது தடைப்பட்டிருக்கும் சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுக்க என்ன வழி?

இறுதித்தீர்வு கண்ட பின்னர் அதற்கேற்ப அரசமைப்பை மாற்றலாம் என்ற திட்டத்தைத் தற்போதைக்குச் சற்றுத் தள்ளி வைத்துவிட்டு -

சமாதான முயற்சிகள் தடையின்றித் தொடர்வதற்கு வழிசெய்யும் விதத்தில் - அதில் ஈடுபடுபவர்களுக்கு உரிய அதிகாரங்களை உரிய முறையில் வழங்கும் விதத்தில் - அரசமைப்பில் இடைக்கால மாற்றங்கள் கொண்டுவரப்பட வேண்டும். அதற்கு வேண்டுமானால் மக்களிடம் வாக்கெடுப்பு மூலம் அனுமதியும் பெறலாம்.


ஜனாதிபதி - பிரதமர் இடையே இணக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கை ஒன்றைக் கண்டுபிடிப்பதற்காக இப்போது முயன்றுவரும் குழுவின் நடவடிக்கை அதற்கு வழங்கப்பட்டிருக்கும் டிசெம்பர் 15 காலக்கெடுவுக்குள் வெற்றியடையாவிட்டால் -

தற்போதுள்ள தேக்க நிலையிலிருந்து தென்பகுதி அரசியல் தலைமை வெளிவருவதற்கு மக்கள் முன் செல்வதே பொருத்தமானதாக இருக்கும்.

வேண்டுமானால் இடைக்கால அரசமைப்புத் திருத்த யோசனைகளுக்கு மக்களின் அனுமதி பெறும் தேர்தலாக அது அமையலாம்.

சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் அத்தகைய அனுமதியைப் பெறுவதற்கு ஜனாதிபதி இணங்காவிட்டால், பொதுத்தேர்தல் ஒன்றில் இத்தகைய கோரிக்கையை முன்வைத்து, அந்தப் பொதுத் தேர்தல் மூலம் அதற்கு மக்கள் அனுமதியைப் பெற அரசுத் தரப்பு முயலலாமே!

## காலத்தின் பதிவு



குடியிருப்பில் வெள்ளம்: குடிதண்ணீருக்கோ தவம். படம்: தீபன்

# மனித உரிமைகள் தினத்தன்று மறியற்போர் நடத்த முஸ்தீபு!

## பாதுகாவலர் சங்கம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்,நவ.24

சர்வதேச மனித உரிமைகள் தினத்தன்று மறியற்போராட்டம் ஒன்றை நடத்துவதற்கு வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுவருகிறது.

எதிர்வரும் டிசெம்பர் 10 ஆம் திகதி சர்வதேச மனித உரிமைகள் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. அன்றையதினம் கொழும்பில் இயங்கும் காணாமற்போனோர் சங்கமும், வடபகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கமும் இணைந்து இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் கொழும்பு தலைமையகம் மற்றும் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகம் ஆகியவற்றின் முன்பாக இந்த மறியற்போராட்டங்களை நடத்தவுள்ளன.

இதுகுறித்து வடபகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கச் செயலாளர் எஸ்.சற்குணம் தெரிவித்ததாவது:-

1996 - 1997 ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனவர்கள் தொடர்பாக இது வரை எவ்வித ஆக்கபூர்வமான பதிலும் கிடைக்கவில்லை.

மனித உரிமை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு பல மாதங்களாக விசாரணைகளை மேற்கொண்டு வெளியிட்ட அறிக்கையும் திருப்தியற்றதாகவுள்ளது.

கைது செய்யப்பட்டு காணாமற்போனோருடைய பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் யாழ்ப்பாணத்தில் இருக்கத்தக்கதாக விசாரணைக்குழு தமது அறிக்கையை கொழும்பில் வைத்து வெளியிட்டமை பக்கச் சார்பான நடவடிக்கை என்றே கருத வேண்டியுள்ளது.

இச் செயற்பாடுகளைக் கண்டித்து மனித உரிமைகள் தினத்தில் கறுப்புப்பட்டி அணிந்து எமக்கு படையினரால் இழைக்கப்பட்ட கொடுமைகளை எடுத்தியம்பும் சுலோக அட்டைகளைத் தாங்கி மறியற்போராட்டங்களை நடத்த உள்ளோம் என்றார் எஸ்.சற்குணம். (ஒ-5)

# வாகன இலக்கத் தகடுகளை விநியோகிக்க விசேட சேவை

## புதனன்று செயலகத்தில் நடக்கும்

யாழ்ப்பாணம், நவ.24

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கான வாகன இலக்கத் தகடுகளை வழங்குவதற்கென நாளை மறுதினம் புதன்கிழமை யாழ். செயலகத்தில் விசேட சேவை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக திணைக்கள உதவி ஆணையாளர் விபத்மநாதன் அறிவித்துள்ளார்.

இது குறித்து ஆணையாளர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து அண்மையில் ஆயிரத்திற்கும் அதிகமான வாகன இலக்கத் தகடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதேவேளை, ஏற்கனவே கிடைக்கப்பெற்ற தகடுகளும் உரிமையாளர்களால் பெற்றுக் கொள்ளப்படாது யாழ். அலுவலகத்தில் தேங்கிக் கிடக்கின்றன. அத்துடன் பலருக்கு கடிதம் அனுப்பியும் இதுவரை இலக்கத்தகடுகளை குறிப்பிட்ட உரிமையாளர்கள் பெற்றுக் கொள்ளவில்லை.

இந்த நிலையில் NPGH. முதல் NPGZ.வரையிலான வாகன இலக்கத் தகடுகளை விநியோகிப்பதற்கென நாளை மறுதினம் புதன் கிழமை விடுமுறை தினமாக இருந்த போதிலும் மு.ப.9.30 தொடக்கம் பி.ப. 12.30 வரை செயலகத்தில் விசேட சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இலக்கத் தகடுகளைப் பெறுமாறு எம்மால் கடிதம் அனுப்பியும் மாதக் கணக்கில் உரிமையாளர்களால் பெற்றுக்கொள்ளப்படாத இலக்கத் தகடுகளை திருப்பிக் கொழும்பிற்கு அனுப்பி வைக்கவும் ஆலோசிக்கப்படுகிறது.

எனவே, உரிமையாளர்கள் கீழ்வரும் ஆவணங்களுடன் தவறாது 2003.11.26 அன்று எமது அலுவலகத்திற்கு சமுகமளித்து இலக்கத்தகடுகளைப் பெற்றுச்செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

* வாகனப் பதிவுச் சான்றிதழ்
* தேசிய அடையாள அட்டை
* வாகனப் பதிவுச் சான்றிதழ் கிடைக்கப் பெறாதவர்கள் நடப்பு வருட வாகன வரி மற்றும் வலுவில் உள்ள காப்புறுதிச் சான்றிதழைக் கொண்டு வரவும் - என்று அதில் உள்ளது. (எ)

| நாளை |
| --- |
| கார்த்திகை 09 |
| செவ்வாய்க்கிழமை |
| (25.11.2003) |
| திதி : துதியை |
| பின்னிரவு 12.33 வரை |
| நட்சத்திரம்: கேட்டை |
| முன்னிரவு 7.42 வரை |
| சுபநேரம்: 10.42-12.12 |
| ராகுகாலம்: 3.12 - 4.42 |
| (பழைய நேரப்படி) |

| உதயவாக்கு |
| --- |
| வரவேற்கப்படும் இறப்பு விரைவில் வருவதில்லை. |

# மோதலில் ஈடுபட்ட குழுக்கள் எச்சரிக்கப்பட்டு விடுவிப்பு

## கலாசாரம் பேணுவோர் நடவடிக்கை

யாழ்ப்பாணம்,நவ.24

மோதலில் ஈடுபட்ட இரு குழுக்களை மடக்கிய கலாசாரம் பேணும் இளைஞர்கள் அதில் ஒருவரிடமிருந்து ஆயுதத்தைக் கைப்பற்றிக்கொண்டு அவர்களை எச்சரித்து அனுப்பினர்.

யாழ். கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதிச் சந்தி அருகே நேற்றுமுன்தினம் பிற்பகல் இச்சம்பவம் இடம்பெற்றது.

மதுபோதையில் வந்த இருகுழுவினர் முதலில் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர். பின்னர் அவர்கள் மோதலில் ஈடுபட்டனர். அந்த வேளையில் அப்பகுதிக்கு கலாசாரத்தைப் பேணும் இளைஞர்கள் இருவர் மோட்டார்சைக்கிளில் வந்தனர். அந்த இருவரும் மோதலில் ஈடுபட்டவர்களை மடக்கிப் பிடித்து சோதனையிட்டனர். மோதலில் ஈடுபட்டோரில் ஒருவரிடமிருந்து வெட்டுக்கத்தி ஒன்று மீட்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டோர் கடுமையாக எச்சரிக்கப்பட்டு, விடுவிக்கப்பட்டனர். (ஒ-7)

# தொழிலுக்கும் தொல்லையில்லை. . .
# வீட்டு வேலைக்கும் தொந்தரவில்லை !



Caliber 115

றொஷான் சாமிக்க விக்ரமசிங்ஹ
தொடர்புபடுத்தும் அதிகாரி
ஓஷனிக் லொஜிஸ்டிக் (பிரைவேட்) லிமிட்டட்

# இவர் உண்மையில் மோட்டார் சைக்கிள் ஒன்றின் பாவனையாளர்.

"முன்பு என்னிடம் ஒரு ரீ-கண்டிஷன் மோட்டார் சைக்கிள் தானிருந்தது. பெற்றோல் செலவுக்கென்றே அதிகளவு பணம் விரயமானது. தற்செயலாக பத்திரிக்கையில் Caliber 115 மோட்டார் சைக்கிளின் விளம்பரத்தைப் பார்த்தேன். அக் கணமே எனக்கேற்ற மோட்டார் சைக்கிள் இதுவே என்று முடிவு செய்ததோடு, லீஸிங் பினான்ஸ் முறையில் Caliber 115 மோட்டார் சைக்கிள் ஒன்றை வாங்கினேன்.

என்னுடைய தொழிலைப் பொறுத்தவரையில் துறைமுகம், ஷிப்பிங் லைன் தொகுதிகள் மற்றும் வங்கிகளுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் போகவேண்டியிருக்கும். எந் நேரமானாலும் குறிப்பிட்ட இடத்திற்கு, குறித்த வேளையில் போகவேண்டுமென்பதால் நான் Caliber 115 மோட்டார் சைக்கிளையே பயன்படுத்திவருகின்றேன். அது வீட்டு வேலைகளுக்கும் வசதியானது. திருமணங்களுக்குக் கூட நான் Caliber 115 ல் தான் பயணம் செய்கிறேன்.

Caliber 115 மோட்டார் சைக்கிளின் கவர்ச்சிகரமான தோற்றம், டிஸ்க் பிறேக்,பிரகாசமான ஹெலஜன் லைட் ஆகிய அம்சங்கள் எனக்கென்றே அமைக்கப்பட்டது போல் நான் கருதுகிறேன். K - Tec தொழில்நுட்பம் கொண்டதால் பெற்றோலுக்கு ஆகும் செலவும் குறைவு தான்.

மோட்டார் சைக்கிளை வாங்கிய நாள் முதல் டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்டின் உதிரிப்பாக சேவை வலையமைப்பினர் வழங்கும் சேவையானது அளப்பரியது. எமது அலுவலகத்தில் பணியாற்றும் அநேகமானோர் இப்பொழுது பஜாஜ் மோட்டார் சைக்கிளைத் தான் பயன்படுத்துகின்றார்கள்."

"ஏனையோரைவிட மோட்டார் சைக்கிளின்
பெருமையையும், பெறுமதியையும் நன்குணர்ந்தவர்கள்,
அதைப் பாவித்துப் பயனடையும் நாம் மட்டுமே."

**பஜாஜ்** இலங்கையில் முன்னணியாக விற்பனையாகும் மோட்டார் சைக்கிள்.

## DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்.

75, ஹைட் பார்க் கோனர், கொழும்பு - 2. தொலைபேசி : 4700600. தொலைநகல் : 4700677, 2687175.
மோட்டார் சைக்கிள் பற்றிய விபரங்களுக்கான அவசர அழைப்பு : 4715050.
இணைய தளம் : http://www.dpmco.com
பிராந்திய அலுவலகங்கள்: கண்டி, மாத்தறை, அம்பாறை, தெஹியத்தக்கண்டிய, அனுராதபுரம், இரத்தினபுரி, புத்தளம், நுவரெலியா, பக்கலை, பதுளை, திருகோணமலை, மாத்துகமை.
சகல பிராந்திய அலுவலகங்களினதும் பொதுவான தொலைபேசி எண்கள்: 4700600.

mel ads 3/9/2505

# கிராம அலுவலர்களுக்கான பயிற்சிநெறி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,நவ.24

யாழ். மாவட்டத்தில் உள்ள கிராம அலுவலர்களுக்கான 'ஆற்றலை மேம்படுத்துவதற்கான பயிற்சிப்பட்டறை' நேற்றுமுன்தினம் யாழ். செயலகத்தில் ஆரம்பமாகி நடைபெற்றுவருகிறது.

இரண்டாவது நாளாகவும் பயிற்சிப் பட்டறை நேற்று நடைபெற்றது. நேற்றும் நேற்றுமுன்தினமும் நடைபெற்ற பயிற்சிப் பட்டறையில் ஒரு தொகுதி கிராம அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இரண்டாவது தொகுதி கிராம அலுவலர்களுக்கான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 30ஆம் திகதியும், டிசெம்பர் மாதம் முதலாம் திகதியும் நடைபெறவுள்ளது. இவர்களுக்கு இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க்கிழமையும் நடைபெறவிருந்த பயிற்சிப் பட்டறையே மேற்படி திகதிகளில் நடைபெறும் என்று செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி மோகனேசன் தெரிவித்துள்ளார். (எ-10)




அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் நுண்கருத்திட்டத்தின் கீழ் யாழ்.மாவட்டக் கிராம அலுவலர்களின் ஆற்றலை மேம்படுத்துவதற்கான பயிற்சிப் பட்டறை யாழ்.செயலகத்தில் கடந்த இரண்டு நாள்களாக இடம்பெற்றது. இதன்போது யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் உரையாற்றுவதையும் பயிற்சிப் பட்டறையில் பங்கேற்ற கிராம சேவகர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். *(படங்கள் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

செயற்கைமுறைச் சினைப்படுத்தலில்

# ஒரே சூலில் பசு ஒன்று இரு கன்றுகளை ஈன்றது

அச்சுவேலி,நவ.24

செயற்கைமுறைச் சினைப்படுத்தல் மூலம் கர்ப்பம் தரித்த பசுவொன்று இயல்பாக இருகன்றுகளை ஈன்றுள்ளது.

நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலைக்கு அண்மையில் வசிக்கும் எஸ்.தம்பிப்பிள்ளை என்பவரின் பசுவே இவ்வாறு இரண்டு கன்றுகளை ஈன்றுள்ளது.

இரண்டு கன்றுகளில் ஒன்று நாம்பன். தாய்ப்பசுவும், கன்றுகளும் நலமாக உள்ளன.

இதற்கிடையில் - மேற்படி சம்பவம் குறித்து கருத்து வெளியிட்ட கோப்பாய் பிரதேச கால்நடை வைத்திய அதிகாரி திருமதி எஸ்.செல்வவினிதா, 'மிகமிக அரிதாகவே இவ்வாறான சம்பவம் ஏற்படுவதுண்டு' - என்றார். (எ-10-11)

# உடுத்துறை மாவீரர்துயிலும் இல்லம் 27ஆம் திகதி திறப்பு

வடமராட்சி கிழக்கு,நவ.24

உடுத்துறையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மாவீரர் துயிலும் இல்லம் மாவீரர்தினமான எதிர்வரும் 27ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

250 மாவீரர்களின் புனித நடுகைக் கற்கள் அங்கு வைக்கப்பட்டுள்ளன. இந்த மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், போராளிகள் அன்றையதினம் மாவீரர் துயிலும் இல்லத்தில் முதற்தடவையாக தீபம் ஏற்றி மாவீரர்களுக்கு வீர அஞ்சலியைச் செலுத்தவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை தமிழீழ மாவீரர் பணிமனையும், வடமராட்சி கிழக்கு கடற்புலி அரசியல்துறையும் இணைந்து செய்துள்ளன. (எ-182)




உரும்பிராய் லயன்ஸ் கழகத்தினரால் 'வாழ்வகம்' இல்லத்திலுள்ள விழிப்புலன் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு உணவுத் தட்டுகளும் கோப்பைகளும் அன்பளிப்புச் செய்யப்பட்டன. அந்நிகழ்வில் அன்பளிப்புகளை பெற்ற சிறார்களும் கழகத் தலைவர் தர்மஜெயசூரியரும் படத்தில் காணப்படுகின்றனர். *(படம்: தெல்லிப்பழைச் செய்தியாளர்)*

# ஆசிரிய உலகின் விடிவெள்ளி எம்.கே.சேகரம் மாஸ்ரர்



யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த ஆங்கில ஆசிரியர்களில் ஒருவரான எம்.கே.சேகரம் எண்பத்திமூன்றாவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

சேகரம் அவர்களிடம் சிறிது காலம் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியின் ஆங்கிலம் கற்கும் பேறுபெற்றவன் யான். அவரிடம் கற்ற மாணவர்களில் உயிரோடு இருக்கும் ஒரு சில முதியோர்களில் ஒருவன் என்ற பெருமையுடையவன்.

அவர் எமக்கு ஆசிரியனாக இருந்த பொழுது அவர் திருமணமாகாத வாலிபன். டிறிபேர்க் கல்லூரியில் ஓர் அறையில் தங்கியிருந்து தமது கடமையைச் செய்து வந்தவர். இன்றும் அந்த வாலிபத் தோற்றந்தான் என் கண்முன்னே நிற்கின்றது.

அவர் மறைந்து போன ஓர் ஆசிரிய பரம்பரையைச் சேர்ந்தவர். கடமை, கண்ணியம், தமது துறையில் ஆழ்ந்த அறிவு, தூய்மையான உடை என்பன ஐம்பது வருடங்களுக்கு முந்திய ஆசிரியர்களின் பண்புகள்.

சேகரம் மாஸ்ரர் அவர்கள் மலேயாவிலிருந்து வந்தவர். சிறிது காலம் யாழ்ப்பாணக் கல்லூரியில் கற்று லண்டன் Inter Arts பரீட்சையில் சித்தியடைந்தார். டிறிபேர்க் கல்லூரியின் ஆசிரியராக அமர்ந்த பின் தமது சொந்த முயற்சியினால் லண்டன் B.A. (Hons) Dip. in Education பரீட்சைகளில் வெற்றி பெற்றார்.

மலேயாவில் நீண்டகாலம் வாழ்ந்தமையினால் ஆங்கிலமே அவருடைய தாய்மொழிபோல் இருந்தது. மாணவர்களுடன் எப்பொழுதும் ஆங்கிலத்திலேயே பேசுவார். தினந்தோறும் நன்கு சலவை செய்யப்பட்ட வெண்ணிற காற்சட்டையையும், சேர்ட்டையும் அணிந்து கொள்வார். சப்பாத்து எப்பொழுதும் ஜொலித்துக் கொண்டே இருக்கும். ஆங்கில உடைக்கேற்ப மிகவும் கண்ணியமாகவே வாழ்ந்தார். சாவகச்சேரி சந்தையிலோ, கடைகளிலோ மக்கள் அதிகம் நடமாடும் படமாளிகைகளிலோ அவரைக் காணமுடியாது. இதனால், மாணவர்கள் அவரை மிகவும் மதித்து நடந்தார்கள். கல்லூரி அதிபருடன் தயக்கமின்றிப் பேசுவார்கள்.

## நீத்தார் நயப்புரை

ஆனால், நாகரிகத்தின் உருவாகத் திகழ்ந்த சேகரம் அவர்களிடம் பேசுவதென்றால் எல்லாருக்குமே மரியாதை கலந்த பயம்.

ஒருநாள் சாவகச்சேரி ரயில் நிலையத்திற்கு தமது சிறிய சூட்கேசுடன் நடந்து போய்க்கொண்டிருந்தார். பின்னால் ஒரு மாணவன் மிகவும் மெதுவாக சைக்கிளில் போய்க்கொண்டிருந்தான். ஏனப்பா! இவ்வளவு மெதுவாய்ப் போகிறாய்? என்று மாணவனைக் கேட்டபொழுது அவன் 'சேகரம் மாஸ்ரர் முன்னே போகிறார், எப்படி அவரை முந்திக் கொண்டுபோவது' - என்றான். இவ்வாறு ஆசிரியர் சேகரம் அவர்களைத் தமது சற்குருவாக மாணவர்கள் மதித்தனர்.

மாணவர்கள் அவர் மீது பேரன்பு கொண்டமைக்கு அவருடைய கண்ணியமான நடைமட்டும் காரணமன்று. அவர் கடமையுணர்வு கொண்ட ஆசான். ஆங்கில கட்டுரைகளையும், வரலாற்று விடைகளையும் மிகுந்த சிரமத்துடன் திருத்தி, குறிப்புக்களை மணிமணியான எழுத்துக்களால் எழுதி அடுத்த நாள் மாணவர்களிடம் கொடுத்துவிடுவார். இப்படியான தன்னலமற்ற அர்ப்பணிப்புத்தான் அவரை ஆசிரிய திலகமாக்கியது. நான் கல்லூரி அதிபரான பின்னர் ஆசிரியர் சேகரத்தின் இந்தப் பண்பினைப் பற்றி பல தடவைகள் ஆசிரியர்களுக்குக் கூறியுள்ளேன்.

ஒரு சிறந்த ஆசிரியர் ஒருபோதும் சாவதில்லை. அவன் தனது மாணவர்கள் உள்ளத்திலும் அவர்களின் மாணவ பரம்பரையிலும் வாழ்ந்து கொண்டே இருப்பான்.

ஆசிரியர் சேகரம் சம்பூரணமான வாழ்வு வாழ்ந்தவர். அவரின் கடமையுணர்வும் கண்ணியமான நடையும் இன்றைய உலகில் காணமுடியாதவை. ஐம்பது வருடங்களுக்கு முன்னால் சமுதாயத்தின் தலை சிறந்த மனிதர்கள் ஆசிரியர்களாகவும், அதிபர்களாகவும் அமர்ந்தார்கள். இதனாலேதான் மாணவர்கள் அவர்களைப் பூஜித்தனர்.

**பேராயர் எஸ்.ஜெபநேசன்.**

# திணைக்களப் பணிகளை ஒரேயடியாக பாதிக்கும் இடமாற்றத்தை நிறுத்துங்கள்!

**நீண்டகாலமாக ஒரே திணைக்களங்களில் பணியாற்றிவரும் உள்ளூராட்சி அலுவலர்களுக்கு, கட்டாய இடமாற்றத் திட்டம் ஒன்றை வடக்கு - கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சு அறிமுகப்படுத்தியிருக்கிறது.**

**உள்ளூராட்சி பணியாளர் ஒருவர் ஒரே திணைக்களத்தில் நீண்டகாலம் பணியாற்றுவதால் ஏற்பட்டுவரும் தேக்க நிலைமைகளைக் கருத்திற்கொண்டு இந்த இடமாற்றத்திட்டத்தை அமைச்சு நடைமுறைப்படுத்தவுள்ளது.**

**இந்த இடமாற்றத் திட்டம் தொடர்பாக உள்ளூராட்சி அலுவலர்கள் மத்தியில் ஆதரவாகவும், எதிராகவும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுவருகின்றன.**

**இந்த இடமாற்றத்திட்டம் தொடர்பாக 'ஏன் இந்த அதிரடி நடவடிக்கை?' என்ற தலைப்பில் உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம் விடுத்திருக்கும் அறிக்கை இது.**

16.11.2003 ஆம் திகதிய 'உதயன்' பத்திரிகையில் 'உள்ளூராட்சி அலுவலர் ஆயிரத்து 450 பேருக்கு எதிர்வரும் ஜனவரி முதல் கட்டாய இடமாற்றம் - மாகாணப் பொது நிர்வாக அமைச்சு செயலாளர் அறிவிப்பு' என்ற செய்தியைத் தொடர்ந்து 17.11.2003 ஆம் திகதி யாழ். மாவட்ட அரச திணைக்களங்கள், உள்ளூராட்சி சபைகளுக்குக் கிடைக்கப்பெற்ற இடமாற்றப்பட்டியல் வடக்கு - கிழக்கு மாகாண அரச அலுவலர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் மத்தியில் ஆழ்ந்த தாக்கத்தை உண்டுபண்ணியுள்ளது.

1) கட்டாய இடமாற்றம் எனக் குறிப்பிடும் அளவிற்கு இந்த அரச அலுவலர்கள் என்ன குற்றம் புரிந்தார்கள்?

2) இந்த இடமாற்றத்தால் திணைக்களங்களின் செயற்பாடுகள் மிகவும் பாதிப்படைய சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன. ஏனெனில், ஒரு திணைக்களத்திலோ அல்லது அலுவலகத்திலோ அத்திணைக்களத்தின் நடவடிக்கைகளை நன்கு அறிந்த, சேவை மூப்புடைய அலுவலர்கள் ஒரே சமயத்தில் இடமாற்றப்படுதலாகும். இதை விடுத்து காலத்திற்குக்காலம் அலுவலகங்கள் பாதிக்காதவாறு அலுவலர்கள் இடமாற்றப்பட்டிருக்கலாம்.

3) மாகாண சபை அமைப்பு முறை 1989ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது முதல் நடைமுறைப்படுத்தப்படாத இவ்விடமாற்றம் தற்போது ஏற்பட்டதன் அவசியம் என்ன? அரச அலுவலர்கள் இதை அறிய விரும்புகின்றார்கள்.

4) அரச அலுவலர்களுக்கான இடமாற்றம் என்பது தாபன விதிக்கோவை அத்தியாயம் 3 பிரிவு 1:1 முதல் 1:4 வரை தெரிவிக்கப்பட்டதற்கமையவும் மாகாண பொதுநிர்வாக உள்ளூராட்சி அமைச்சின் முன்னாள் செயலாளர் அவர்களால் வெளியிடப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண 6-6/1 இலக்க, 20.07.1999ஆம் திகதி சுற்றறிக்கைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டதற்கமைய திணைக்களங்களின் நன்மை கருதியும், அரச அலுவலர்களின் நன்மை கருதியுமே வழங்கப்படவேண்டும். மேற்குறித்த கடிதத்திலும் மாகாண பொதுநிர்வாக உள்ளூராட்சி அமைச்சு சுற்றறிக்கை இல. 3/99, திகதி 20.07.1999இலும் இடமாற்றத் திட்டம் கௌரவ ஆளுநர் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த இடமாற்றத் திட்டம் அரச அலுவலர் பார்வைக்குக் கிடைக்கப் பெறவில்லை.

5) மாகாணசபை அமைப்புமுறை கொண்டுவரப்பட முன்னர் உள்ளூராட்சிச் சேவை கொழும்பு உள்ளூராட்சிச்சேவைத் திணைக்களத்தினாலும், உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுவினாலும் பரிபாலிக்கப்பட்டு வந்துள்ளது. அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட இடமாற்றத் திட்டம் அக்காலப் பகுதியில் அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதையும் சுற்றறிக்கையாக அரச அலுவலர் பார்வைக்கு கிடைக்கப் பெற்றதையும் சுட்டிக் காட்டவேண்டியுள்ளது.


6) 01.01.2004இல் நடைமுறைப்படுத்தப்படுவதற்கென மேற்கொள்ளப்பட்ட இடமாற்றப்பட்டியல் எந்த இடமாற்றத் திட்டத்திற்கமைய மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது புரியாமல் உள்ளது. இணைந்த சேவையில் உள்ள எழுதுவினைஞர் சேவையில் 5 வருடத்திற்கு மேற்பட்ட சேவையை உடையவர்கள் இந்த இடமாற்றத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளனர் என்றால், குறித்த காலப் பகுதியைப் பூர்த்திசெய்த பலர் இந்த இடமாற்றத்திற்குள் கொண்டுவரப்படவில்லை. இது இடமாற்றப்பட்டவர்களைப் பொறுத்தவரையில் பாதிப்பாகவே கருதுகின்றோம்.

7) இடமாற்றப்பட்டியலில் 5 வருடங்களுக்குக் குறைவாக திணைக்களத்தில் இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ள பலர் உள்ளடக்கப்பட்டுள்ளனர். அதிலும் ஒருசில மாதம் சென்றவர்களும் உள்ளடக்கப்பட்டமை கவலைக்குரியது. சில அலுவலர்கள் ஏற்கனவே இடமாற்றப்பட்ட விடயம் மாகாண பொதுநிர்வாக அமைச்சுக்குத் தெரியாது அவர்களின் முன்னைய நிலையத்தில் இருந்து இடமாற்றப்பட்டதாகவே பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்கொள்ளப்பட்ட இடமாற்றத்தை மீளாய்வு செய்ய வேண்டும் என உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம் கோருகின்றது. ★

## தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை-2003
## மாதிரி வினாத்தாள் இல-06

**வினாத்தாள்-I** **நேரம் : 45 நிமிடங்கள்**

★ விடை எழுதுவதற்கான அறிவுறுத்தல்: எல்லா வினாக்களுக்கும் விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றில் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.





இலங்கையின் வீதியொன்றில் போக்குவரத்துப் பாதைக் காட்சியை மேலுள்ள படம் காட்டுகின்றது. அதனை அவதானித்து சரியான விடைகளைத் தெரிவு செய்க.


01. மேற்காட்டப்பட்ட படத்தில் A என்ற வாகனம் பாடசாலைக்குச் செல்கின்றது எனின் அது வீதியில் பயணிக்கும் பாதை சரியானதா?
(1) ஆம் (2) இல்லை (3) கூறமுடியாது.

02. நடந்து வீட்டுக்குச் செல்லும் வளர்ந்த மனிதன் பயணிக்கும் பாதையின் பக்கம் சரியானதா?
(1) ஆம் (2) இல்லை (3) கூறமுடியாது.


03. B என்ற வாகனம் வைத்தியசாலைக்குச் செல்லும் வீதியின் பக்கம் சரியானதா?
(1) ஆம் (2) இல்லை (3) கூறமுடியாது


★ கீழுள்ள வினாக்களில் உள்ள படங்களில் முதல் இரண்டு படங்கள் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டது. மூன்றாவது படத்துடன் சம்பந்தப்பட்ட படத்தைத் தெரிவு செய்க.

04.




05.



★ கீழே முதலில் தரப்பட்டுள்ள பொருளுக்குப் பதிலாகப் பாவிக்கும் பொருளைத் தெரிக.


06.



07.




08. மேனாளனன் கீழ் உள்ளது போன்ற நாணயங்கள் செய்ய நினைத்தான்




இவற்றை ஒரு திண்மத்திலிருந்து சம அளவான துண்டுகளை வெட்டி அவன் செய்தான். மேனாளனன் பயன்படுத்திய திண்மங்களுள் மிகப் பொருத்தமானது எது?





09. இங்கு நான்கு வடிவங்கள் உள்ளன.




இவற்றைப் பக்கங்களின் இயல்புக்கு ஏற்ப வரைபடமாக அட்டவணைப்படுத்திய முறை காட்டப்படுகிறது.






பின்வருவனவற்றுள் எது இடமிருந்து வலமாக வினாக்குறிகளுக்குரிய சரியான ஒழுங்கைக் காட்டுகிறது.





★ கீழே முதலில் தரப்பட்டுள்ள இருபடங்களுக்கிடையிலான தொடர்பை அவதானித்து அடுத்துள்ள படத்துக்குத் தொடர்புள்ள படத்தினை தரப்பட்ட நான்கு விடைகளில் இருந்து தெரிவு செய்க.

10.



11.



12.



★ கீழே தரப்பட்டுள்ள வட்டங்களுக்குள் உள்ளவற்றை அவதானித்து சரியான விடையைத் தெரிக.




13. மேலே அதிக எழுத்துக்களை கொண்ட வட்டம் எது?
(1) A (2) B (3) C

14. மேலே அதிக இலக்கங்களைக் கொண்ட வட்டம் எது?
(1) A (2) B (3) C

15. அதிக இலக்கங்களையும் குறைந்தளவு எழுத்துக்களையும் முறையே கொண்ட வட்டங்களைக் காட்டுவது?
(1) A யும் B யும் (2) B யும் A யும்
(3) C யும் A யும்


16. A வட்டம், B வட்டம் இரண்டினுள்ளும் உள்ள எழுத்துக்கள் யாவை?
(1) க, இ, அ, ப (2) ப, ச, ந, இ
(3) க, த, ச, ம

★ கீழுள்ள வினாக்களில் முதலில் தரப்பட்ட கூற்றைக் கொண்டு கூறக்கூடியது யாது எனத் தெரிவு செய்க.

17. எங்கள் ஊரில் அதிகமான வீடுகளில் கூரையானது ஓட்டால் வேயப்பட்டதாகும்.
(1) ஊரில் அதிகமானோர் பணக்காரர்கள்.
(2) ஊரில் கிடுகு வீடுகள் இல்லை.
(3) ஓடு போடுவது கிடுகு கட்டுவதை விட இலாபம்.
(4) ஊரில் ஓடு போடாத வீடுகளும் உள்ளன.

18. வயல் வெளியில் இருந்த மாடுகள் வாலினால் ஈக்களுக்கு அடி கொடுத்தன. இதன்படி
(1) வயல் வெளியில் இருந்த எல்லா மாடுகளுக்கும் வால் உண்டு
(2) ஈக்களை அடிப்பது மாடுகளுக்குப் பொழுது போக்கு.
(3) வயல் வெளியில் இருந்த மாடுகளுக்கு ஈக்களால் தொல்லை ஏற்பட்டது.
(4) மாடுகளுக்குத் தொல்லை கொடுப்பது ஈக்களுக்குப் பொழுது போக்காகும்.

19. கீழே தரப்பட்ட வாக்கியங்களை கருத்துள்ள வகையில் ஒழுங்கு படுத்தும் விடையைத் தெரிவு செய்க.
A. சிங்கத்தின் சத்தத்தால் பயமடைந்த எருது திரும்பிப் பார்க்காமல் ஓடியது.
B. மலைச்சரிவில் புல் மேய்ந்து கொண்டிருந்த எருதைக் கண்ட சிங்கம் சந்தோசமடைந்தது.
C. சிங்கமானது பசியால் மிகவும் வாடியது.
D. பெரிய சத்தத்துடன் எருது மீது பாய்ந்தது.
E. அது இரையைத் தேடி மலைச் சரிவில் ஏறியது.
F. பாய்ந்த வேகம் அதிகமானதால் சிங்கம் சேற்றில் சிக்கியது.
(1) CEDBAF (2) CEBDAF (3) CEBFDA

20.




இங்கு தரப்பட்டுள்ள உருக்களுக்கு யாதாயினும் ஒரு பெறுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த உருக்களின் பெறுமதிகளின் மொத்தம் குறுக்காகவும் கீழ் நோக்கியும் தரப்பட்டுள்ளது. பெறுமதிகளின் மொத்தம் தரப்படாத "?" என்ற குறியீட்டினால் காட்டப்படும் நிரலின் மொத்தம் யாது?

(1) 8 (2) 9 (3) 10


21. பின்வருவனவற்றுள் மிக நீளமான நூல் எது?




★ எழுத்துக்கள் இடப்பட்ட கூடுகளுக்குள் வரவேண்டிய எண்களைத் தெரிவு செய்க.

22.



A,B ஆகிய இடத்திற்குப் பொருத்தமான எண்கள்.
(1) 15,20 (2) 15,23 (3) 8,15

23.



A,B ஆகிய கூடுகளுக்குப் பொருத்தமான எண்கள்.
(1) 72,4 (2) 81,6
(3) 4,78

★ கீழே தரப்பட்ட உருக்களுக்கு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

24.


(1) நடக்கிறது (2) ஓடுகிறது
(3) பறக்கிறது (4) நீந்துகிறது

25.


1) ஓடு...
3) பறக்...

★ கீழே தரப்பட்டிருக்கும் வரத்...
வினாக்களுக்குரிய சரியான விடை...

அந்த நாட்டில் தோற்றம், பெ...
உடற்கட்டுமுள்ளவர்கள் ஒருவ...
அவனைக் காட்டிலும் இனிமையா...
சிந்தையுமுடையவன் ...

26. அந்த நாட்டில் உள்ளவர்களில்தோற்ற... வன் பகீரன்.
(1) சரி (2) பிழை 3) கூற...

27. பகீரனைப் போன்ற பலர் அந் நாட்...
(1) சரி (2) பிழை 3) கூற...

28. பகீரன் தனோஜனைக் காட்டிலும் இனி...
(1) சரி (2) பிழை 3) கூற...

29. தனோஜன் நல்ல உடற்கட்டுடையவ...
(1) சரி (2) பிழை 3) கூற...

30. இரக்கம் என்பது பிறர் துன்பட கண்டு... ஆகும்.
(1) சரி (2) பிழை 3) கூற...

31. 15 பயணிகளைக் கொண்ட பேருந்தின்... 6 ஆகும். இதே பேருந்தில் 60 பேர் ப... இருக்கும் சில்லுகளின் எண்ணிக்கை...
(1) 6 (2) 12 (3) 24

32. எந்த மூன்று இலக்கங்களையும் கூட... ஒரே விடைதான் வரும்.
(1) 2,3,4 (2) 1,2,4 (3) 1,2,...

33. சூட்டுக்குக் குளிர் போல, மூனுக்கு...
(1) புத்திசாலி (2) மடையன் (3) பே...

34. காலுக்கு முக்கால் போல அரைக்கு...
(1) ஒன்று (2) ஒன்றரை (3) மூன்...

★ பின்வருவனவற்றை ஓர் ஒழுங்கு... தும் போது நடுவில் வருவது

35. தங்கை, நான், தம்பி, அப்பா, அம்மா...
(1) தங்கை (2) நான் (3) தம்...

36. மணி, நாள், நிமிடம், வருடம், செக்க...
(1) மணி (2) நாள் (3) ...

37. தன்கையே தனக்குதவி என்ற கருத்... பறவை.
(1) காகம் (2) வெளவால் (3) குயி...

★ கீழ்வரும் வினாக்களில் காணப்... பெறக் காரணமாக அமையாத வின...

38. ஐதுர்ஸனனை மாணவர்களும் ஆசிரி...
(1) ஐதுர்ஸனன் பரீட்சையில் அதிக...
(2) ஐதுர்ஸனன் விரும்பத்தகாத செய...
(3) அவன் போட்டி நிகழ்ச்சி ஒன்றில்...

39. கவிந்தன் வகுப்புத் தலைவனாகத் ெ...
(1) கவிந்தன் எல்லா வேலைகளிலும்... சிறப்பாகத் தொழிற்படுபவனாக இருச்...
(2) கவிந்தன் எல்லோரினாலும் மதிக்கப்...
(3) கவிந்தன் ஒரு பணக்காரரின் பிள்...

40. சசிகரன் விளையாடும் நேரத்தைக் கு... அக்கறை காட்டி வருகிறான்.
(1) வீண் விளையாட்டுக்களில் அதிக... படிப்பதில் கவனம் செலுத்துமாறு... கூறப்பட்டிருக்கலாம்.
(2) பரீட்சைக்குரிய காலம் நெருங்கி...
(3) சசிகரன் புத்தியில்லா... ஒரு ப...

## வினாத்தா...

கீழ்வரும் பாடலை வாசித்து 1 முதல்17... விடை எழுதுக.

மீனினம் ஓடிப் பரக்குதம்ம...
வெள்ளி ஓடமொன்று...
வானம் கடலாக மாறுதம்ம...
மாட்சியிவுள்ளம் முழு...
அம்புயம் வாடித் தளர்ந்தத...
அம்பலும் கண்டு களி...
இப்புவுலகின் இயல்பிதம்மா...
கின்னார் இனியாரும் ...

01. இப்பாடல் காட்சியினை எந்தப் பொழுதி...
02. இங்கு மீனினம் என எதனைக் குறிப்பிட...
03. கவிஞர் வெள்ளி ஓடம் என்று எதனைக்...
04. கடலுக்கு ஒப்பாக கூறப்படுவது எது? ...
05. இந்தப் பொழுதினில் மகிழ்ச்சியடை... குறிப்பிடுகின்றார்?........................

★ ஒத்த கருத்துள்ள சொல் இர...

06. அம்புயம் ..............................
07. உள்ளம் ..............................

★ எதிர்க்கருத்துள்ள சொல் எழு...

08. வாட்டம் ..............................
09. தளர்வு ..............................

★ பாடலில் உள்ள வினை எச்சா...

10. .............................. 11. ......

★ பிரித்தெழுதுக.

12. மீனினம் .............................. 13. ஓட...

(1) ஓடுகிறது (2) நடக்கிறது
(3) பறக்கிறது (4) நீந்துகிறது

ம் விவரத்தை வாசித்து கேட்கப்படும்
யான விடையினைத் தெரிக.

தாற்றமும், பொலிவும், வனப்பும்
ர்களில் ஒருவன் பகீரன் எனினும்
இனிமையான சுபாவமும் இரக்க
டையவன் தனோஜன்.

களில் தோற்றமும் பொலிவும் மட்டுமுள்ள

(3) கூறமுடியாது.
அந்த நாட்டில் வாழ்ந்தனர்.
(3) கூறமுடியாது.
ட்டிலும் இனிமையான சுபாவமுடையவன்
(3) கூறமுடியாது.
கட்டுடையவன்
(3) கூறமுடியாது.
ன்பம் கண்டு சந்தோசப்படும் மனநிலை

(3) கூறமுடியாது.
_ பேருந்தின் சில்லுகளின் எண்ணிக்கை
60 பேர் பயணம் செய்தால் பேருந்தில்
ண்ணிக்கை யாது?
(3) 24 (4) 30
ளையும் கூட்டினாலும் பெருக்கினாலும்

(3) 1,2,3 (4) 10,2,5
மூடனுக்கு
ன் (3) பேதை (4) மிலேச்சன்
அரைக்கு
(3) மூன்று (4) இரண்டு

ஓர் ஒழுங்குமுறையில் ஒழுங்குபடுத்
ருவது
ப்பா, அம்மா.
(3) தம்பி (4) அம்மா
ம், செக்கன்.
(3) [illegible]ம் (4) செக்கன்
என்ற கருத்திற்கேற்ப வாழ முடியாத

ால் (3) குயில் (4) குரங்கு

ரில் காணப்படும் நிகழ்ச்சிகள் நடை
மயாத விடையைத் தெரிவு செய்க.
ளும், ஆசிரியர்களும் பாராட்டினர்.
ில் அதிக் புள்ளிகள் பெற்றிருக்கலாம்
தகாத செயலில் ஈடுபட்டிருக்கலாம்
சி ஒன்றில் வெற்றி பெற்றிருக்கலாம்
ர்வனாகத் தெரிவு செய்யப்பட்டான்.
கலைகளிலும் மற்ற மாணவர்களைவிடச்
னாக இருக்கலாம்.
ம் மதிக்கப்படும் மாணவனாக இருக்கலாம்.
ாரின் பிள்ளையாக இருக்கலாம்.
ரத்தைக் குறைத்துப் படிப்பதில் கூடிய
ன்.
ளில் அதிக நேரத்தைச் செலவிடாது
சலுத்துமாறு அவனுக்கு ஆலோசனை

நெருங்கி வந்து கொண்டிருக்கலாம்
ஒரு [illegible]ளையாக இருக்கலாம்.

## ாத்தாள்-2 1மணி 15 நிமிடங்கள்

1 முதல்17 வரையான வினாக்களுக்கு

ப் பரக்குதம்மா ~ ஊடே
ஓடமொன்று செல்லுதம்மா
ாக மாறுதம்மா ~ இந்த
வள்ளம் முழுகுதம்மா
த் தளர்ந்ததம்மா ~ அயல்
கண்டு களிக்குதம்மா
இயல்பிதம்மா ~ மதிக்
இனியாரும் உண்டோ அம்மா

ப் பொழுதில் காணலாம்? ........................
க் குறிப்பிடப்படுகின்றது? ........................
எதனைக் கூறுகின்றார்? ........................
வது எது? ........................
கிழ்ச்சியடைவது எது எனக் கவிஞர்
........................

சொல் இரண்டு எழுதுக.
........................ ........................
........................ ........................

சால் எழுதுக.
........................
........................

ான எச்சங்கள் இரண்டு எழுதுக.
11. ........................
13. ஓடமொன்று ........................

★ ஆங்கிலச் சொல்லை எழுதுக.

14. வானம் ........................ 15. கடல் ........................
16. அம்மா ........................ 17. மதி ........................

★ ரகுராம் தரம் 5 இல் கல்விகற்கின்றான். அவனது தகப்பனார் வீட்டிற்குத் தேவையான பொருள்களைக் கடையில் வாங்கி வந்தார். அவர் வாங்கிய பொருள்களும் அவற்றின் அளவும் கீழே தரப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் வினாக்களுக்குரிய விடைகளை எழுதுக.

| | | |
|---|---|---|
| காற்சட்டைத்துணி | - | $2\frac{1}{2}$ மீற்றர் |
| தேங்காய் | - | 8 |
| மின்கலம் | - | 3 சோடி |
| தீப்பெட்டி | - | 1 டசின் |
| சீனி | - | 3 கிலோக்கிராம் |
| அரிசி | - | $8\frac{1}{2}$ கிலோக்கிராம் |
| தேங்காயெண்ணெய் | - | 1 போத்தல் |

18. அவர் வாங்கிய சீனியினதும் அரிசியினதும் மொத்த அளவைக் கிராமில் எழுதுக? ..............கிராம்
19. காற்சட்டைத்துணி வாங்குவதற்கு 350 ரூபாவைக் கொடுத்திருந்தால் 1மீற்றர் துணியின் விலை யாது? ............ரூபா...........சதம்
20. ஒரு சோடி மின்கலத்தின் விலை 32 ரூபா ஆகும். அவர் வாங்கிய மின்கலங்களின் மொத்தப்பெறுமதியும் தேங்காய்களின் மொத்தப் பெறுமதியும் சமனாக இருந்தன. இதன்படி 6 தேங்காய்கள் என்ன விலை? ...........ரூபா..........சதம்
21. 1தீப்பெட்டி 2ரூபா 50 சதமாகும். அவர் வாங்கிய தீப்பெட்டிகளின் பெறுமதி எவ்வளவு? ............ரூபா.........சதம்
22. 1லீற்றர் தேங்காயெண்ணெயின் விலை 40ரூபா ஆகும். அவர்வாங்கிய எண்ணெயின் விலை என்ன?..........ரூபா..... ....சதம்
23. அவர் வாங்கிய சீனியினை ரகுராம் 12 சிறிய போத்தல்களில் சமமாக அடைந்து வைத்தான். அதன்படி 1 போத்தலில் உள்ள சீனியின் அளவு யாது? ............கிராம்
24. அவர் வாங்கிய அரிசியினை 10 நாள்களுக்கு சமமாகப் பயன்படுத்தலாம். !கிலோக்கிராம் அரிசியின் விலை 36ரூபா எனில் 1 நாளுக்குச் செலவாகும் அரிசியின் பெறுமதி யாது? ...........ரூபா.......சதம்
25. அவர் வாங்கிய சீனியின் மொத்தவிலை 105 ரூபா ஆகும். அவர் 50கிலோக்கிராம் சீனியை வாங்கியிருந்தால் எவ்வளவு பணம் கொடுத்திருப்பார்? என்பதைச் சொற்களில் எழுதுக.


........................ ........................


★ அவர் வாங்கிய பொருள்களின் அலகுகள் கீழே தரப்பட்டுள்ளன அவற்றை குறியீட்டில் எழுதுக.


26. கிலோக்கிராம் ........................ 27. மீற்றர் ........................

★ பின்வரும் படங்களின் பெயர்களை எழுதுக.

28. 
........................


29. 
........................

30. 
........................

31. 
........................

32. 
........................

★ பின்வரும் இடங்களை இலங்கைப்படத்திற் கண்டுபிடித்து அதில் உள்ள புள்ளிகளுக்கருகில் இடங்களின் இலக்கத்தை எழுதுக.



33. 1.கொழும்பு
34. 2. கண்டி
35. 3. மட்டக்களப்பு
36. 4. யாழ்ப்பாணம்
37. 5. புத்தளம்
38. 6. திருகோணமலை


★ கீழ் உள்ள வினாக்களில் தரப்பட்ட கூற்றுக்கள் சரியாயின் "(✓)" எனவும் பிழையாயின் "(✗)" எனவும் எழுதுக.

39. தாவரங்களில், கதிர்கள், [illegible] என்பவற்றை [illegible] பொலித்தீன் என்பவற்றால் மறைத்து [illegible] மூலம் பூச்சிகளிலிருந்து காப்பாற்றலாம். ( )
40. சில பூச்சிகளுக்கு சிறகுகள் இல்லாதிருக்கும். ( )
41. வீட்டுத் தோட்டத்திற்கு வரும் பூச்சிகள் மகரந்தச் சேர்க்கைக்கு உதவுவதில்லை. ( )
42. செம்பு நடனம் கிராமத்துடன் தொடர்புடைய நடனமாகும்.( )
43. சித்திரைப் புதுவருடத்தில் மருத்துநீர் வைத்து நீராடுதல் முஸ்லீம்களின் சமயக்கடமையாகும். ( )
44. திராட்சை, கொடித்தோடை ஆகியன [illegible] செய்யப்படும் கொடிகளாகும். ( )

★ தொடர்புபடுத்துக.

| | |
|---|---|
| 45. தேயிலைச்செடி | பற்சில்லு |
| 46. மேசன்மார் | எரிபொருள் |
| 47. துவிச்சக்கரவண்டி | கவ்வாத்து |
| 48. கனிய எண்ணெய் | மின் உற்பத்தி |
| 49. காற்றுவலு | தூக்குக் குண்டு |

★ தரப்பட்டுள்ள உபகரணத்தினைக் கொண்டு விடை எழுதுக.






50. மேலுள்ள உபகரணத்தின் பெயர் யாது?
........................
51. அதனைச் செய்வதற்குத் தேவையான 5 உபகரணங்களையும் எழுதுக.
(1) ........................
(2) ........................
(3) ........................
(4) ........................
(5) ........................


★ சரியான விடைகளை கணித்து எழுதுக.

52. 
இந்தக் கொப்பில் உள்ள இலைகளைப போல் சமமான 12 கொப்புக்களில் உள்ள இலைகளின் எண்ணிக்கை யாது?
........................

53. 
இவ்வுருவில் எத்தனை செங்கோணங்கள் உள்ளன?
........................

54. 
இங்கு நிழற்றப்பட்ட பகுதிகள் இரண்டினதும் பெறுமதியை தசம எண்ணில் எழுதுக.
........................

55. 
இதில் செங்கோணமுள்ள முக்கோணிகள் எத்தனை உள்ளன?
........................


56. 


இக்கடிகாரம் காட்டும் நேரத்தினை சாதாரண நேரமாக எழுதுக.
........................

★ சரியான விடைகளை எழுதுக.

57. கிராமியப் பாடல்கள் இரண்டு எழுதுக.
........................ ........................
58. கிராமிய விளையாட்டுக்கள் இரண்டு எழுதுக.
........................ ........................
59. 2000 ஆம் ஆண்டு உலக ஒலிம்பிக் போட்டியில் வெண்கலப்பதக்கம் பெற்ற இலங்கை வீராங்கனை யார்?
........................
60. குறுந்தூர ஓட்டங்களை ஆரம்பிப்பதற்கு வழங்கப்படும் கட்டளைகளை எழுதுக?
........................ ........................
........................
61. உள்ளரங்க விளையாட்டுக்கள் 2 எழுதுக.
........................ ........................

★ பின்வரும் தையல் மாதிரிகள் எவ்வகைத் தையல் என்பதனை எழுதுக.

62. 
........................

63. 
........................

★ பின்வருவனவற்றின் தமிழ்ச்சொல்லையும் சிங்களச் சொல்லையும் எழுதுக.

| | தமிழ்ச்சொல் | சிங்களச்சொல் |
|---|---|---|
| 64. CHAIR | ........................ | ........................ |
| 65. LIBRARY | ........................ | ........................ |
| 66. COFFEE | ........................ | ........................ |
| 67. MANGO | ........................ | ........................ |
| 68. TREES | ........................ | ........................ |

★ எமது நாடு முன்னேற்றமடைய வேண்டுமெனில்...... என்னுந் தலைப்பின் கீழ் சரியான எழுவாய் பயனிலைகளுடன் ஆறுவாக்கியங்கள் எழுதுக.

69. ........................
........................
70. ........................
........................
71. ........................
........................
72. ........................
........................
73. ........................
........................
74. ........................
........................

தயாரிப்பு : ஆசிரியர் திரு.வேலுப்பிள்ளை அன்பழகன்.

## U.K., Canada ஆகிய நாடுகளுக்கான வதிவிட அனுமதி விண்ணப்பப் படிவம்

- ✦ Canada Immigration Visa Application Form.
- ✦ U.K. Visa Application Form ஆகியவற்றை இங்கே பெற்றுக் கொள்வதுடன்,
- ✦ U.S.A. Green Card விண்ணப்பப் படிவங்களையும் அனுப்பிக் கொள்ளலாம்.
- ✦ இத்துடன் மேலதிக விவரங்களையும், ஆலோசனைகளையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**விசிற்றோக். நெற்**

315, A. முதலாம் மாடி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

T.P.No: 021-222 6637
- 021-222 7387

(24923) (11-18-25)



## கணனி விற்பனைக்கு

Intel Pentium IV 1.7 GHZ Processor
Abit Pentium IV Mainboard
40GB Hard disk
Floppy Drive, CD Rom, CD Writer
External fax Modem
Scanner, Prolink
Lexmark 225 Color Printer

இணைந்த புதிய கணனி உடன் விற்பனைக்குண்டு

தொடர்பு: **நா.ரமணன்**
190ஆம் கட்டை, கண்டி வீதி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.
077-6070730
(எந்நேரமும் பார்வையிடலாம்)

(24395)(35-11-18-25)



## வேலை ஆள்கள் தேவை

யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள ஹோட்டல் ஒன்றிற்கு வேலை ஆள்கள் தேவை.

1. சமையல்காரர்
2. சமையல் உதவியாளர்
3. ரீ மேக்கர்
4. சப்ளை செய்பவர்
5. பில் எழுதுநர்.

மேற்குறிப்பிட்ட வேலைகளில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சகல விதமான சமையல்களும் தெரிந்தவர்களுக்கு மாதம் 10,000 ரூபா சம்பளமும், 3 நேர உணவும், தங்குமிடமும் இலவசமாக வழங்கப்படும். இன்று (24.11.2003) திங்கட்கிழமை நேரில் சமுகமளிக்கவும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**செல்வம் ஸ்ரோர்ஸ்,**
330, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 - 2223817

(31447) (25-11-18)



## அறிவித்தல்

பொன்னுத்துரை பத்மசுந்தரம் ஆகிய எனது பெயரில் (வடமாகாணம்) யாழ்ப்பாணத்தில் உள்ள ஐந்து காணிகளின் உறுதிகள் (மாசி மாதம் 2003) கொழும்பில் களவு போய்விட்டன. இது பற்றி கொழும்பு பொலிஸாரிடம் 19.02.2003 நடந்ததை முறையிட்டு தகவல் பதிவு செய்யப்பட்டுள்ளது. மற்றும் என் பெயரில் உள்ள யாழ்ப்பாணம் காணிகளை கவனிப்பதற்கும் அவற்றை மேற்பார்வையிட்டு பாதுகாக்கும் முழுப்பொறுப்புக்களையும் முழு அதிகாரத்தையும் (POWER OF ATTORNEY) எழுத்து மூலம் எனது தங்கையாகிய திருமதி தவராசா கமலாதேவி இருப்பிடம் 6/2, கண்டி வீதி, புறாடி முன் ஒழுங்கை, யாழ்ப்பாணம் என்பவருக்கு மட்டுமே கொடுத்துள்ளேன். ஆனால், எனது மனைவிக்கோ அல்லது வேறுயாருக்குமோ நான் எந்தவிதமான அதிகாரங்களும் எழுத்து மூலம் கொடுக்கவில்லை என்பதை அறிவிக்கிறேன். தற்சமயம் எனது உறுதிகளை களவு செய்தவர்கள் கொழும்பில் நான் அவர்களுக்கு எழுத்து மூலம் எனது காணிகளை விற்பதற்கு முழு அதிகாரங்களையும் எழுத்தில் கொடுத்தாக ஒரு பொய்யான (POWER OF ATTORNEY) பத்திரம் செய்து கொண்டு யாழ்ப்பாணம் வந்துள்ளார்கள். அத்துடன், எனது பெயரில் உள்ள காணிகளை விற்பதற்கு முயற்சி செய்து வருகிறார்கள் என்பதையும் அறிந்தேன். ஆகவே, எவரும் என் பெயரிலுள்ள காணிகளை வாங்கவேண்டாம். அப்படி இல்லை என்று என் பெயரில் உள்ள காணிகளை வாங்கினால் அவர்களுக்கு மிகப்பெரிய பண நஷ்டம் ஏற்படும் அத்துடன், காணிகளை களவாக வாங்கியதற்கு அவர்களுக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இப்படிக்கு,
பொ.பத்மசுந்தரம்.

(24999) (25-11-18)



## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேசத்தில் அதி உத்தம அந்தண குலத்தில் தோன்றியவரும், சுன்னாகம், மயிலணி கந்தசுவாமி கோவில் பிரதம குருவும் இலங்கையின் பல பாகங்களிலும் சமயப்பணி ஆற்றியவரும் எமது ஆலயத்தின் பிரதம குருவும் ஆகிய

**சிவஸ்ரீ சர்வேஸ்வரக் குருக்கள்**
**வரதராஜேஸ்வரக் குருக்கள்.**

அவர்கள் இறைபதம் எய்தியதால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் அவரது புன்முறுவல் வதனத்தில் இறைவனைத் தரிசித்து மகிழ்ந்தோருக்கும் ஆறுதல் கூறி, அவரது ஆன்மா இறை நிழலில் சேர ஞான வயிரவப் பெருமானைப் பிரார்த்தித்து அஞ்சலி செய்கின்றோம்.

- ஞான வயிரவர் தேவஸ்தானத்தினர்,
பலட்டன்,சுன்னாகம் கிழக்கு.

(24985) (25-11-18)


## 'துலக்கம்' சஞ்சிகை வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம்,நவ.24

புங்குடுதீவு மகா வித்தியாலயத்தின் 'துலக்கம்' நூல் வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அ[illegible]க.தர்மகுணசிங்கம் தலைமையில் [illegible]சாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் பொ.வேணுகோபாலும், சிறப்பு விருந்தினர்களாக வேலணை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சோ.தில்லைநாதன், உதவிக் கல்விப் பணிப்பாளர் இ.சி.மகேஸ்வரன் ஆகியோரும், கௌரவவிருந்தினராக புங்குடுதீவு பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் யாழினியவனும் கலந்துகொள்வர். (எ-10)


## தேவை

வீடியோ கடையில் வேலை செய்யக்கூடிய ஆண், பெண் பிள்ளைகள் தேவை.
(கொம்பியூட்டரில் MS Office கற்று முடித்தவர்கள் விரும்பத்தக்கது)
தொடர்பு:
ரேகா
ஓடியோ வீடியோ சென்ரர்,
கே.கே.எஸ். றோட்,
நாச்சிமார் கோவிலடி.
☎ 0776161865

(25002)(11-16-25)



## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர்,
ஆஸ்துமா, வாதநோய்கள்,
வலிப்பு நோய், பீனிசம்,
தலையிடி,
தலைகால் அவியல்,
சருமநோய்கள்,
மாதவிடாய்க்குத்து,
இரத்தப்போக்கு,
வெள்ளைக்கசிவு,
கருவழிதல்,
மகப்பேறின்மை,
குழந்தை வைத்தியம்,
வீரியக்குறைவு,
மூலவியாதிகள்,
மூத்திரரோகங்களில்
பிரபல்யமானவர்.
சகல வியாதிகளையும்
குணப்படுத்துபவர்:

வேலணை வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண் :222 2459

(24540)


## 5ஆம் ஆண்டு நினைவுச் சுரங்கம்

மொட்டெனத் தாய்மடியில்
22
12
1981



பொட்டென இறையடியில்
24
11
1998

**செல்வி தர்ஷிகா செல்வரத்தினம்**

வட்ட முகமெங்கே? வானிலவாம் சிரிப்பெங்கே?
மொட்டாக முன் மலர்வதனம் எங்கே? எங்கே?
சிட்டெனவே -
பறந்தனையோ பாலகியே - பாழும் விதிவசத்தால்
மறந்தனையோ எங்களையும் நீ.....?

எம் நெஞ்சிருக்கும் வரையும்
உன் நினைவிருக்கும்.

'சோபிதா ஸ்ரோர்ஸ்',
ஆவரங்கால்.

(24977) (26-11-18-25)

- குடும்பத்தவர்.


## பதவி வெற்றிடம்

ஆயுட் காப்பீட்டு கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை.
இப்பிரபல காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு
காப்புறுதி முகவர்கள் தேவை.

கல்வித் தகைமைகள் :~ க.பொ.த.சாதாரண தரம் (கணிதம் முக்கியம்)
க.பொ.த. உயர்தரம்

வயதெல்லை :~ 18 ~ 55 வரை

வேறு காப்புறுதி நிறுவனங்கள் தவிர்ந்த தனியார் நிறுவனங்களில் வேலை செய்வோரும் பகுதி நேரமாக இணைந்து கொள்ளலாம்.

ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் 25.11.2003 இல் இருந்து ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாள்களில் கீழுள்ள முகவரிக்கு, நேர்காணலுக்காக சமுகம் தரலாம்.

ஆயுட் காப்பீட்டு கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை.
55,R.G. கட்டடம், கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல. 6325

(24973) (35-18-11-25)



PRINCE

துருப்பிடிக்காத
உலோக கிச்சன் சின்க்

பிரின்ஸ்
நீடித்த உழைப்பிற்கு
கூடிய நிக்கள்

பூசப்பட்டுள்ளதால் சந்தையிலுள்ள
ஏனைய கிச்சன் சின்குகளைவிட
விசேஷமானது.




ஏக விநியோகஸ்தர்கள்:
சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்.
காட்சியறை: 518, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. தொலைபேசி: 324261-5, 327293-5, 4367779 பெக்ஸ்: 446554,
295, காலி வீதி, கொழும்பு 3. தொலைபேசி: 576666

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Access Graphics

# மரபு சார் கலை வடிவங்கள் தகவமைக்கப்பட வேண்டும்



மருதானை 'ரவர்' அரங்கில் 1994 ஆம் ஆண்டு மேடையேற்றப்பட்ட 'சிலுவை உலா' திருப்பாடுகளின் காட்சியில் அருளப்பர் வேடத்தில் ஜோன்சன்.

**நடிப்பு, நெறியாள்கை, தயாரிப்பு என நாடகத்துறையின் பல பரிணாமங்களில் சிறந்து விளங்குபவரும் திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநருமான ஜோன்சன் ராஜ்குமார் கலைச்சுடர் பகுதிக்கு வழங்கிய செவ்வியின் முதற் பகுதி கடந்த வாரம் பிரசுரமாகியிருந்தது. எஞ்சிய பகுதி இவ்வார கலைச் சுடரில் இடம் பெறவுள்ளது.**

★ கேள்வி: இன்றைய சமூகத்தைப் பொறுத்தவரை நாடகத்துறைக்கான சமூக அங்கீகாரம் எப்படி இருக்கிறது?

■ பதில்:- நாடகத்துக்கான சமூக அங்கீகாரம் என்பது இன்னும் எமது சமூகத்தில் முழுமையாக ஏற்படவில்லை. அத்தகைய அங்கீகாரம் கிடைக்கும் போதுதான் நாடகத்தை நல்ல நிலையில் வளர்த்தெடுக்கமுடியும்.

பாடசாலை மட்டங்களில் நாடகம் ஒரு பாடமாக கொண்டுவரப்பட்ட பின்பு தான் ஓரளவுக்கு கணிசமான முன்னேற்றம் தெரிகின்றது. எனினும் பாடத்துக்காகவே அதனைப்படிக்கின்ற மனநிலையும் மாணவர்கள் பலரிடம் உண்டு. பரத நாட்டியத்தை ஒரு மாணவி பழகி அரங்கேற்றினால் அதனைக் கௌரவமாக நினைக்கின்ற சமூகம், நாடகத்தில் நடித்து மேடையேறுவதை கௌரவமாக நினைக்கின்ற நிலைக்கு இன்னும் வரவில்லை.

பெண்கள் நாடகத்தில் நடிப்பதென்பது இன்றைக்கும் பெரும் சிக்கலான விடயமாகவே இருக்கிறது. நாடகத்தைப் போட்டால் வந்து பார்த்துவிட்டு போகின்றார்களே தவிர, நடிகர்களாகத் தட்டிக் கொடுக்கின்ற- அவர்களை வளர்த்து விடுகின்ற- பண்பு மக்கள் மத்தியில் குறைவாகவே இருக்கின்றது.

எமது சமூகத்தில் முழுமையான சமூக அங்கீகாரம் இருக்கும் போது தான் நாடகம் பல்வேறு வகைகளில் வளர்ந்து செல்லமுடியும்.

நாடகமும் அரங்கியலும் பாடத்தைக் கற்கின்ற மாணவர்கள் பலர் கூட நாடகத்தைப் பார்க்காதவர்களாக - நாடகத்தில் நடிக்க பின்னிற்பவர்களாக - இருப்பது மிகவும் வேதனைக்குரியதாகும்.

★ கேள்வி: எமது பாரம்பரிய அரங்க வடிவங்கள் செல்வாக்கு இழந்து போய்க்கொண்டிருக்கின்றனவே....?

■ பதில்: நாம் எமது பாரம்பரிய அரங்க வடிவங்கள் பற்றிப் பேசிக் கொண்டிருக்கின்றோம். ஆனால், இன்றைய சமூகத்தில், குறிப்பாக இளந் சந்ததியினர் மத்தியில் பாரம்பரிய அரங்குகளின் ரசனை பெருமளவில் குறைந்து கொண்டுவருவது கண்கூடு.

இன்று தொலைக்காட்சி, சினிமா போன்றவற்றின தாக்கம் அதிகரித்துக் கொண்டு போகிறது. இவை நவீன நாடகங்களிலிருந்தே பார்ப்போரை வற்றிவிடச் செய்யக்கூடிய ஆபத்தைக் கொண்டிருக்கும் போது பாரம்பரிய வடிவங்கள் எம்மாத்திரம்

இன்று பார்வையாளர்கள் வீடுகளிலேயே தொலைக்காட்சித் தொடர்கள், சினிமா போன்றவற்றினால் கட்டிப்போடப்படுகிறார்கள். அரங்கியலாளர்கள் அதிகம் சிந்திக்க வேண்டிய காலகட்டம் இது. மரபு சார்ந்த கலைச் செயற்பாடுகள் தம்மை தகவமைத்துக்கொள்ளாவிடின் அவற்றின் எதிர்காலம் கேள்விக் குறியாகி விடுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

எங்களுக்கான ஒரு தேசிய அரங்கு நாட்டுக் கூத்துக்களுக்கு ஊடாகத் தான் அமையப் பெறும் என்பது பலரது கருத்தாகும். ஆனால், கூத்தினுடைய இன்றைய நிலையை எடுத்து நோக்கினால் - குறிப்பாக யாழ். மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் பிரபலமாக இருந்த பல அண்ணாவிமார் இப்பொழுது இறந்துவிட்டார்கள்

கூத்துக்களை அடுத்த கட்டத்துக்கு -அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்வதற்கு உரிய முறையில் போதிய இளம் கலைஞர்களும் இல்லை என்றே கூறலாம்.

கூத்து தொடர்பான தேடல் இளம் சந்ததியினரிடம் பெரிதாக இல்லை. தேடல்களை மேற்கொள்வதற்கு வசதியாக முன்னைய ஆதாரங்களும் போதிய அளவில் இல்லை. எனினும் பல்கலைக்கழகம் போன்ற மட்டங்களில் நாடகமும் அரங்கியலும் பாடத்தைப் படிப்பவர்கள் தமது ஆய்வுகளில் எமது தேசிய அரங்கு தொடர்பான தேடல்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்.

இன்றைய நாகரிக வளர்ச்சி-உலகமயமாக்களின் தாக்கம் போன்றவற்றினால் கூத்துக்கள் மக்களிடத்திலிருந்து தூரவிலகுகின்ற தன்மைமையை நாம் வெளிப்படையாக காணமுடியும்

இது ஒரு புறமிருக்க,எமது பாரம்பரிய கலைஞர்கள் இறந்து கொண்டிருக்கின்றார்கள் அவர்களது தொன்மை மிக்க ஆதாரங்களும் அழிந்து செல்கின்றன.

யாழ். மாவட்டத்தில் சுமார் 300 இற்கும் மேற்பட்ட தென்மோடிக் கூத்துக்கள் எழுதப்பட்டிருக்கின்றன. ஆனால், இப்பொழுது அவற்றைத் தேடிப்பெற முயற்சித்தால் ஐம்பது கூடத் தேறாது.

கடந்த கால இடம்பெயர்வுகளின் போது அவை பெருமளவுக்கு அழிந்து - தொலைந்துபோயின. அப்படியான ஆபத்தான சூழலில்தான் இந்த பாரம்பரிய அரங்க வடிவங்கள் காணப்படுகின்றன.

**சந்திப்பு : சந்திரமதனா**

★ கேள்வி: அவற்றை அழிவுப் பாதையிலிருந்து எவ்வாறு மீட்கலாம்?

■ பதில்:- இரண்டு வகைகளில் இதற்கான செயற்பாடுகள், துரிதகதியில் மேற்கொள்ளப்படவேண்டும். ஒன்று எமது பாரம்பரிய கிராமங்களில் உள்ள கூத்து மரபுகள், பிரதிகள் என்பவற்றை கிடைத்த அளவிலாவது பேணிப் பாதுகாத்தல், இரண்டாவது பாரம் பரிய கலைஞர்களை ஊக்குவித்து அவர்களிடமுள்ள பிரதிகளை ஆவணப்படுத்தி பேணுதல்.

பாரம்பரிய அரங்கை அதன் கூறுகளைப் பயன்படுத்தி இன்றைய உலகச் சவாலுக்கு முகங்கொடுக்கக்கூடிய வகையில் அடுத்த கட்டத்துக்கு வளர்த்துச் செல்லவேண்டும். அப்போதுதான் எமது பாரம்பரிய அரங்க வடிவங்கள் நின்றுநிலைக்கும்.

★ கேள்வி: ஈழத்து அரங்கை பொறுத்தவரை நீங்கள் கண்டுகொண்ட குறைபாடுகள் எவை?

■ பதில்:- எமது நாடகங்களைப் பொறுத்தவரை கைலாசபதி கலையரங்கு, திருமறைக் கலாமன்ற அரங்கு என குறிப்பிட்ட சில களஇலக்கையே அதிகம் கொண்டிருக்கின்றன.

முழு யாழ்ப்பாண மக்களும் பார்த்திருக்கக் கூடிய பரந்த தளத்துக்கு அவை சென்றனவா என்பது கேள்விக்குரியதாகும்.

இதனைவிட, கலையரசு சொர்ணலிங்கம், நடிகமணி வைரமுத்து, பிரான்ஸிஸ் ஜெனம் போன்ற பெயர் சொல்லப்படக்கூடிய கலைஞர்கள் இன்று எம்மிடம் இல்லை. ஒளிவிதானிப்பு, ஒப்பனை, அரங்கக் காட்சியமைப்பு என அரங்கக் கூறுகளை தன்வயப்படுத்திய பெயர் சொல்லக் கூடிய கலைஞர்கள் எம்மிடம் உள்ளனரா?

இவற்றுக்கப்பால் நல்ல நாடகங்களை அமைதியாக இருந்து பார்த்து இரசிக்கத்தக்க செயல்திறன் மிக்க பார்ப்போர் சமூகங்களையாவது நாம் கொண்டுள்ளோமா என்பது வேதனைக்குரிய விடயமாகும். இவற்றைக் கூறுவதற்கூடாக நான் தமிழ் அரங்கை முழுக்க முழுக்க எதர்மறையாக நோக்குகின்றேன் என்பதல்ல. இவை எனது மனதில் இருந்த ஆதங்கங்கள்.

இன்று நாடகம் மாணவர்கள் மத்தியில் பாடமாகக் கொண்டுவரப்பட்டு விட்டது. பல்கலைக்கழக மட்டங்களில் கூட பட்டப்படிப்புக்கான பாடமாக நாடகம் இருக்கின்றது. ஆனால், அவையெல்லாம் வெறும் ஏட்டுக் கல்வியாக போய்விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

ஏனெனில், செயல்திறன்மிக்க அரங்க வியலாளர்கள் இன்று எம்மத்தியில் பெரிதாக வளர்ச்சியடையவில்லை என்பது வெளிப்படையானதாகும்.

நவீன முறையில் ஒப்பனைக் கலை வளர்ந்துவிட்டது. கணனி மூலமான ஒளி விதானிப்புகளை சிங்கள அரங்கியலாளர்கள் பயன்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். காட்சி விதானிப்புக்களை உயிரோட்டமாக அமைக்கக்கூடிய ஓவியப்பண்புமிக்க காண்பியக் கலை எவ்வளவோ முன்னேற்றம் அடைந்து விட்டது.

ஆனால், அந்த துறைகள் எல்லாம் எமது ஈழத்து அரங்கைப் பொறுத்தவரை பெரிதாக வளரவும் இல்லை, அத்துறைகளில் பெயர் சொல்லக்கூடிய கலைஞர்கள் அதிகமாக உருவாகவும் இல்லை. இவற்றையெல்லாம் எமது அரங்க வளர்ச்சியின் குறைபாடுகள் எனலாம்

★ கேள்வி: இக்குறைகளை நிவர்த்திசெய்ய என்ன செய்யலாம்?

■ பதில்: ஈழத்து தமிழ் அரங்கை பொதுப்படையாக எடுத்து நோக்குகின்றபோது, இங்கு நாடகம் ஒரு பொழுதுபோக்கு அம்சமாக - சடங்கு, சம்பிரதாயங்களுடன் இணைந்ததா- மக்களின் வாழ்வியல் அம்சங்களுடன் இணைந்ததாக-ஒட்டுமொத்தமாக எமது கலாசாரத்தின் ஒரு கூறாக இருந்திருக்கின்றது - இருந்து வருகின்றது. ஆனால் நாங்கள் ஒப்பீட்டு ரீதியாக ஏனைய நாடுகளைப் போல நாடகத்துறையில் வளர்ச்சியடையவில்லை என்றே கூறலாம்.

நாடகம் தொழில் முறையாக வளர்த்தெடுக்கப்பட்டு வருகின்ற தன்மையை நாங்கள் வெளிநாடுகள் பலவற்றில் காணலாம். ஆனால் இங்கு அத்தகைய முறையில் நாடகத்தை தொழிலாக கொண்ட நடிகர்கள் இல்லை என்றே கூறலாம்.

நாடகக் கலைஞன் நாடகத்துடனேயே ஒன்றித்து - நாடகத்தையே தனது முழுநேர தொழிலாக கொண்டு செயற்படக்கூடிய சூழல் இங்கு இல்லை. ஈழத்து அரங்கைப் பொறுத்தவரை இரு ஒரு சபாக்கேடு என்றுதான் கூறவேண்டும். இங்கு நடனம், இசை போன்ற ஏனைய கலைகளுக்கு கொடுக்கிற முக்கியத்துவத்தினை கூட நாடகத்துறைக்கு கொடுப்பதில்லை.

ஒரு நடிகன் பல நாள்களாக ஒத்திகை செய்து, நாள் முழுவதும் அதற்குள்ளேயே தன்னை அர்ப்பணித்து நாடகம் செய்கின்றபோதும் அவனுக்கு அதன்மூலம் வருமானம் எதுவும் கிடைப்பதில்லை. எனவே இது ஒரு தொழில் முறையிலே வளர்த்தெடுக்கப்படுகின்ற போது கலைஞன் தனது வாழ்நாளின் தொழிற்சிந்தனை முழுவதும் அரங்கு பற்றியதாக இருக்கின்ற நிலை ஏற்படும்.

அப்போதுதான் புதிய வடிவங்கள் பிறக்கும். புதிய பரிணாமங்கள் வெளிப்படும். பரீட்சார்ந்த முயற்சிகள் வெற்றியளிக்கும். அந்த நிலை எமது தமிழ் அரங்கிற்கு தேவை. ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் தொழில் முறைசார் அரங்க செயற்பாடுகளின் ஊடாகத்தான் சிறந்த அரங்க வளர்ச்சி ஏற்பட்டது என்பதையும், இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

★ கேள்வி: திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குநர் என்ற வகையில் அதன் பணிகள் குறித்து கூறுங்களேன்?

■ பதில்: ஈழத்து அரங்கிலே திருமறைக் கலாமன்றத்தின் பணிகள் மிகவும் முக்கியமானவை என்றே நான் கருதுகிறேன்.

இற்றைவரை திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகங்கள், பட்டறைகளுக்கு ஊடாக பயின்று சென்ற இளைஞர்களின் தொகை மிகவும் அதிகம். என்னுடைய வளர்ச்சியிலும், அரங்க செயற்பாடுகளிலும் திருமறைக்கலாமன்றத்தின் பங்கு அளப்பரியது.

## பாரம்பரிய அரங்கைப் பாதுகாக்க இதுவே வழி என்கிறார் ஜோன்சன்

வெளிமாவட்டங்களிலும் வெளிநாடுகளிலும் கலைப்பயணங்களை மேற்கொண்டு அங்கெல்லாம் இருக்கின்ற பல்வேறு அரங்க வகைகளைக் கண்டு - கலைஞர்களை சந்தித்து வரக்கூடிய வாய்ப்புக்களை திருமறைக் கலாமன்றம் ஏற்படுத்தித் தந்தது. திருமறைக் கலாமன்றம் ஒரு கத்தோலிக்க நிறுவனம் என்றும் கிறிஸ்தவ சமயம் பரப்புவதற்காக அவர்கள் நாடகம் போடுகிறார்கள் என்ற கருத்து அன்று தொட்டு இன்று வரை பலமட்டங்களிலும் நிலவுகிறது.

நான் திருமறைக்கலாமன்றத்திலேயே கடந்த 10 வருடங்களுக்கு மேல் பணியாற்றுகிறேன். என்னைப் பொறுத்தவரை இங்கு பல்வேறுபட்ட கலைஞர்களும் வந்து பல்வேறு வகையான கலைப்படைப்புக்களை, செய்வதையே நான் பார்க்கிறேன்.

கலைக்கூடாக சமூகத்தின் விழுமியங்களைப் பேணி, இன்னலுற்ற மக்களுக்கு கலைமூலமாக ஒத்தடம் கொடுக்கும் பணியைத்தான் திருமறைக் கலாமன்றம் மேற்கொண்டுள்ளது. இவை பற்றியதான பரந்த பார்வைத்தளம் இருக்கவில்லை. திருமறைக் கலாமன்றத்தினுடைய நாடகங்களில் குறிப்பிட்ட ஒரு பிரிவினரே கூடுதலாக பார்வையாளர்களாக இருப்பதை நான் கண்டுள்ளேன்.

அரங்கு பற்றி பேசுபவர்கள் கூட இவற்றை பெருமளவிலே பார்க்காதவர்களாகவே இருந்தார்கள். அரங்கிற்காக அர்ப்பணிப்புடன் உழைக்கின்ற நூற்றுக்கணக்கான கலைஞர்களின் முயற்சிகள் நிராகரிக்கப்பட்டமை வேதனைக்குரியதாகும்.

திருமறைக் கலாமன்றம் ஒரு தமிழ் கலை, கலாசார மையமாக இருந்து தமிழ்மக்களுக்குரிய கலாசார பணிகளையே மேற்கொண்டு வருகிறது.

அந்த வகையிலே இதனை சமய நிறுவனமாக நோக்குவது தவறானதாகும் என்பதை சுட்டிக்காட்ட வேண்டியது என்னுடைய பொறுப்பாகும். ✲

**கலைச்சுடர்**

தயாரிப்பு:-அற்புதன்

# காதுகளில் தேன்பாயச் செய்யும் திருமுறைத் தேனமுது ஒலிப்பேழை

**கலாபூஷணம் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் பாடிய மூவர் தேவாரங்கள் ஒலிப்பேழை அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது. அந்த ஒலிப்பேழை குறித்த ஒரு பார்வை இங்கு விரிகிறது.**

**சைவ** நாயன்மார்கள் அருளிச் செய்த தேவார திருவாசகங்கள் நமக்குக் கிடைத்த அரும் பெரும் பொக்கிஷங்களாகும். அவை படிக்கும் தோறும் கேட்டுக்கும் தோறும் இன்பம் பயப்பன.

தேவார திருவாசகங்கள் பண்ணோடு ஓதப்பட வேண்டியவை. அது அமைந்திருக்கும் பண்ணில் இராகத்தோடு தாளக்கட்டுத் தவறாமல் பாடப்படும் போது அதன் இனிமையே தனி.

ஒவ்வொரு தேவாரத் திருப்பதிகங்களும் பண்ணிசைப்பில் தாளத்தோடு அதற்குரிய ராகத்தில் அமைக்கப்பட்டிருக்கும் முறையிலேயே ஓதினால் கேட்பதற்கு நன்றாக இருக்கும்.

தாவடியூர் எஸ்.ஆர்.திருஞானசம்பந்தனின் குரலில் வெளிவந்துள்ள திருமுறைத் தேனமுது உண்மையில் கேட்பதற்கு பக்தி ரசம் ததும்பி காதுகளில் தேனாக இனிக்கின்றது.

வயலின் வித்துவான் எஸ்.திவாகரனின் நெறியாள்கையில் வெளிவந்துள்ள இந்த ஒலிப்பேழை சைவமக்களுக்கும் கிடைத்துள்ள ஒரு வரப்பிரசாதமாகும்.

மெல்லிசை, இன்னிசை, துள்ளிசை என்றெல்லாம் இளவட்டங்கள் விரும்பி ரசிக்கும் இன்றைய காலகட்டத்தில்



பண்ணிசையாகக் காதுகளில் கணீரென்று ஒலிக்கும் இந்த இசைப்பேழை வரவேற்கவேண்டிய ஒன்று.

சைவத்தின் மேல் சமயம் என்ற கெம்பீர நாட்டை ராகத்தில் அமைந்த வருத்தும் மிகுந்த இனிமையோடு நெஞ்சத்தில் பக்தியை உண்டுபண்ணுகிறது.

**சிவநெறிக் கலாநிதி இராசையா ஸ்ரீதரன்**

அடுத்து வரும் "பிறையணி படர் சடை முடியிடை" என்ற சம்பந்தர் தேவாரம் மூன்று காலங்களிலும் இசைக்கப்பட்டிருப்பது ஒரு தனி அம்சமாகும்.

அது மட்டுமன்றி, 'பிடியதனுருவுமை', 'தொண்டரஞ்சு களிறு', 'தளிரினவளரொளி', 'பொடியுடை மார்பினர்', 'தாயினும் நல்ல தலைவர்', 'காதலாகி' முதலான சம்பந்தர் தேவாரங்கள் ஜனரஞ்சமாக ஒலித்து நெஞ்சங்களில் நீங்காத இடம்பெற்று நிலைத்துவிடுகின்றன.

எல்லாவற்றுக்கும் மேலாக நவரோஸ் இராகத்திலமைந்த 'சலம் பூவொடு' என்ற அப்பர் தேவாரம் மடக்கிப் பாடப்பட்டிருப்பது மிகவும் விசேடமாக அமைந்துள்ளது.

சங்கீத ரசிகர்களுக்கு இந்த ஒலிப்பேழை வெளிவந்திருப்பது மிகுந்த சந்தோஷத்தை அளிக்கும். ஏனெனில், ஓர் இசைக்கச்சேரி நடைபெறும்போது அதை எவ்வளவு ரசனையோடு கேட்டு ரசிக்கின்றார்களோ அது போலவே இன்னும் ஒரு படி மேலாக இருக்கும் வகையில் இந்தப் பண்ணிசைக்கச்சேரியும் கேட்டு ரசிக்கலாம் என்று கூறினால் மிகையாகாது. அவ்வளவு சிறந்த இசையமைப்பில் மனது ரம்மியமான நினைவுகளை மகிழ்ச்சியும் பக்தியும் கலந்து ரசிக்க கூடியயதாகப் பண்ணிசை பாடப்பட்டிருக்கின்றது.

இசை பயிலும் மாணவர்களுக்கு உகந்த முறையில் பண்ணிசையைக கற்றுக்கொள்ள இது ஓர் உஷாத் துணையாக அமைந்து விளக்குகின்றது.

ஒவ்வோர் ஆலயங்களிலும் திருவிழாக்காலங்களிலும் பக்தர்களுக்கு ஆன்மீக உணர்வுகளையும் பக்தி மேம்பாட்டையும் வலியுறுத்தக்கூடியதாக அமைந்து வெளிவந்துள்ள இந்த ஒலிப்பேழையை ஒலி பரப்பி மக்கள் மனதில் பத்திச் சுவை நனி சொட்டச் செய்வது நமது கடமையாகும்.

## கணனியிலிருந்து பொலிமர் இறப்பர் ஸ்டாம் செய்யும் பயிற்சி JASO

மாணவர்களே!

எமது நிறுவனத்தில் மேற்படி பயிற்சியானது தென்னிந்திய நிபுணர்கள் மற்றும் உபகரணங்களின் உதவியுடன் நடத்தப்படவுள்ளது.

கொம்பியூட்டர் இறபர் ஸ்டாம்பின் தேவை தற்போது அதிகமாகவுள்ளதால் இப்பயிற்சியைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் உடனடியாகப் பதிவுகளை மேற்கொள்ளவும்.

குறிப்பிட்ட மாணவர்களுக்கே அனுமதி வழங்கப்படும்.

சு.கு. இக்கத் தொழிற்பயிற்சியைப் பெற்றவர்கள் வீட்டில் இருந்து கொண்டே பகுதி நேரமாகவோ, முழுநேரமாகவோ மேற்கொள்ளலாம். யாழ். குடாநாட்டில் கொம்பியூட்டர் இறபர் ஸ்டாம் செய்வதில் அனுபவம் வாய்ந்தவர்கள் இல்லையென்பதால் இதன் மூலமாக அதிக வருமானத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருக்கும்.

மேலதிக விவரங்களுக்கு விரையுங்கள்:

"யசோ"

35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(24998)(31-24-13-16)


## பாராட்டும் வாழ்த்துக்களும்



நல்லூர் கமநல சேவை நிலையக் கட்டடத்தில் இயங்குகின்ற தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையில் யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றுபவரும் எமது ஆலய பரிபாலன சபையின் நீண்டகாலச் செயற்குழு உறுப்பினருமாகிய,


### திரு. ஜெகதீசசிங்கம் சத்தியேந்திரன்

அவர்கள் அண்மையில் யாழ். மாவட்ட சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து நியமனம் பெற்றமைக்கு அவரை மனமார வாழ்த்துவதுடன், அவரது சமூகப்பணி மேலும் வளர எல்லாம்வல்ல பரம்பொருளின் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

சட்டநாதர் ஆலய பரிபாலன சபையினர்,
நல்லூர். (25004) (33-24-13-16)

## 33 ஆவது பிறந்த நாள் நினைவுகள்

மலர்ந்தது 24 - 11 - 1970



மறைந்தது 09 - 06 - 1992

### லெப். வேந்தன் / கில்மன்
### வேலாயுதபிள்ளை வரதன்

(பளை ம.வி. உயர்தர மாணவன்)

மண்ணிலே மலர்ந்த நாள் இன்று
மண்ணுக்காக மரணித்த உன்னை நாம்
மகிழ்வோடு கொண்டாடிய நாள்களும் உண்டு
மண் மீட்பு வேள்வியிலே மாண்புடனே
ஆகுதியாகிய உன்னை இன்று
கண்ணீரோடு நினைவு கூருகின்றோம்.

"திருவதிகை"
அளவெட்டி.
(24997) (24-13-16)

என்றும் உன் நினைவோடு:
அப்பா, அம்மா,
அத்தான், அக்கா, மருமக்கள்.

## கண்ணீர் அஞ்சலி

எமது வங்கியில் கடமையாற்றிய திரு.தே. ஜெயரஞ்சித் அவர்களின் அன்புத் தந்தையார்

### V.J.தேவபாலச்சந்திரன்

(முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர், தேசிய சேமிப்பு வங்கி)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

முகாமையாளரும், உத்தியோகத்தர்களும்
தேசிய சேமிப்பு வங்கி - சுன்னாகம்.
(25003) (26-24-13-16)

அதிபர் ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்களின்

## 101 ஆவது பிறந்தநாள் நினைவு வைபவம்

இன்று (24.11.2003) திங்கட்கிழமை காலை 10.00 மணி

தலைவர்: திருமிகு க. சிவாஜி அவர்கள் (முதல்வர் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

இறைவணக்கம்:
ஒறேற்றர் நினைவு கீதம்
திரு.சி.சிவஞானராஜா அவர்கள் (இசை ஆசிரியர் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

நினைவுரை:
திருமிகு C. தியாகராஜா அவர்கள் (முன்னாள் அதிபர் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

நினைவுப் பேருரை:
விடயம் - தமிழர் வாழ்வியலிற் பனை
கலாநிதி எஸ். சிவலிங்கராஜா அவர்கள்
(தலைவர், தமிழ்த்துறை - யாழ். பல்கலைக்கழகம்)

நிறைவுரை:
செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் (ஆசிரியர் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஒறேற்றர் குடும்பம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.

(24944) (26-24-13-17)

## 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 06 - 05 - 1934



மறைவு 27 - 08 - 2003

திருமதி

### வேலுப்பிள்ளை சின்னம்மா

அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!!

27.08.2003 இல் இறைவனடி சேர்ந்த எமது உயிரனைய அன்னை திருமதி வேலுப்பிள்ளை சின்னம்மா அவர்களின், 90 ஆம் நாள் நினைவஞ்சலி, ஆத்ம சாந்திக்கான கிருத்தியங்கள், ஆன்ம ஈடேற்றத்திற்கான பிரார்த்தனைகள் அதனைத் தொடர்ந்து மதியபோசனம் என்பன இன்று (24.11.2003) திங்கள் எமது நாகலிங்க இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நாகலிங்க முகவரி:
முருகமூர்த்தி கோவிலடி,
நல்லைப்பிள்ளையார் கோவிலடி,
புலோலி.

- பிள்ளைகள்.
(24848) (24-13-16)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 - 03 - 1946



மறைவு 11 - 12 - 1996

அமரர்

### இராமலிங்கம் நவரட்ணம்

திதி: 24.11.2003

அன்பு என்னும் நீர் ஊற்றி
அரவணைத்த எம் தந்தையே!
ஆண்டுகள் ஏழு சென்றாலும்
ஆறாதைய உங்கள் பிரிவு!
இங்கிருந்து நாமெல்லாம் - நினைந்து நினைந்து
நெக்குருகி வாடுகிறோம் நின் பிரிவால்!

12/2, கச்சேரி ஒழுங்கை,
சண்டுக்குளி,
யாழ்ப்பாணம் (24961) (24-13-16)

தங்கள் பிரிவால் வருந்தும்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள்.




உலகப் புகழ் பெற்ற L.G
குளிர்சாதனப் பெட்டிகள்
Abans நிறுவனத்தின்
உத்தரவாதத்துடன்
இலவச விநியோக
சேவையில் பெற்றிட



LG
Digitally yours

JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA TEL: 021-222-5766


## பளையில் மரநடுகைத் திட்டம்

தென்மராட்சி,நவ.24

பளை பிரதேச சபையினரும் பளை அரசியல்துறையினரும் இணைந்து அப்பிரதேசத்தில் மரநடுகைத் திட்டத்தினைக் கடந்த வாரம் ஆரம்பித்துள்ளனர்.

இத்திட்டத்தின்கீழ் பிரதேசத்தின் பிரதான வீதிகளின் இரு மருங்குகளிலும் பாடசாலை வளாகங்களிலும் நடப்பட்டு வருகின்றன.

கடந்த வாரம் பளை அரசியல் துறைப்பொறுப்பாளர் வின்சனால் இத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

1994 ஆம் ஆண்டு பொருண்மிய மேம்பாட்டுப் பிரிவினரால் கண்டி வீதியில் நடப்பட்ட மரக்கன்றுகள் 1996 ஆம் ஆண்டின் பின் யுத்தத்தின்போது அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-13)

## ஆங்கிலம் கற்பிக்க தொண்டர் ஆசிரியர் நியமனம்

நெடுந்தீவு,நவ.24

நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் ஆங்கிலம் கற்பிக்க தொண்டர் ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான மாதக் கொடுப்பனவை நெடுந்தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வழங்கிவருகின்றது. (ஒ-111)

## கிணறுகளுக்கு குளோரின் இடும் பணி

கோப்பாய்,நவ.24

வலி.கிழக்குப் பிரதேச சபையின் 5 உபஅலுவலகங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள பொதுக்கிணறுகள், பாடசாலைக் கிணறுகள், வெள்ள நீர் புகுந்துள்ள பொதுமக்களின் கிணறுகள் ஆகியவற்றைச் சுத்திகரிக்கக் குளோரின் இடும் பணி இவ்வாரத்தில் ஆரம்பமாக உள்ளதாக வலி.கிழக்கு பிரதேச சபைச் செயலாளர் கே.வெங்கடாசலம் தெரிவித்துள்ளார். (ஒ-72)

## கால்நடைகளை கட்டிவளர்க்க அறிவுறுத்து!

ஊர்காவற்றுறை,நவ.24

ஊர்காவற்றுறை, கரம்பொன் பகுதியில் விவசாய நடவடிக்கைகள் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் பொதுமக்களை வளர்ப்பு ஆடு, மாடுகளைக் கட்டிவளர்க்குமாறு கரம்பொன் விவசாய சம்மேளனத்தினர் அறிவுறுத்தியுள்ளனர்.

அதேவேளை, விவசாய நிலத்தினுள் புகும் ஆடு, மாடுகள் பிடிகாரர்களினால் பிடிக்கப்படின் பிடி கூலி, பராமரிப்புச் செலவு செலுத்த வேண்டிய நிலை ஏற்படும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-16)

## மருதங்கேணியில் வயல்களில் வெள்ளம்

வடமராட்சி கிழக்கு,நவ.24

மருதங்கேணிப் பிரதேசத்திலுள்ள நெல்வயல்கள் தொடர்ந்து பெய்து வரும் மழையினால் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

விவசாயிகளுக்கு இதனால் பெருமளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. (எ-182)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்கள்

நெடுந்தீவு,நவ.24

நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவுக்கான ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10மணிக்கு உதவி அரச அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

அனைத்துத் திணைக்களத் தலைவர்களையும் இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு உதவி அரச அதிபர் எஸ்.பேரானந்தன் கேட்டுள்ளார். (எ-111)

★ ★ ★

யாழ்ப்பாணம்,நவ.24

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவுக்கான ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் திணைக்களத் தலைவர்கள், போக்குவரத்துச் சபை அதிகாரிகள், கூட்டுறவுத் துறையினர், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்வர். (எ)

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 528 |
| திகதி | 21.11.2003 |

டிக்கட்டின் நிறம் - சிவப்பு
செல்லுபடியாகும் தொடர் இல.
5330135-5344717

வெற்றி இலக்கங்கள் 08 21 42 43
லக்கினம் சிங்கம்



ஜக்பொட் பரிசு
ரூபா. 5,402,250/-
வெல்லப்பட்டது.

இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா 1,000,000/-

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 313,745 | 10 | 3,137,450 |
| 2 இலக்கங்கள் | 28,808 | 20 | 576,160 |
| 1 இல + லக்கினம் | 28,432 | 30 | 852,960 |
| 2 இல + லக்கினம் | 2,547 | 100 | 254,700 |
| 3 இலக்கங்கள் | 774 | 500 | 387,000 |
| 3 இல + லக்கினம் | 70 | 5,000 | 350,000 |
| 4 இலக்கங்கள் | 03 | 100,000 | 300,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 5,402,250 | 5,402,250 |
| மொத்தம் | 374,380 | - | 11,260,520 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா.11,260,520/-

தொடர் இல. 4354820க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுகள் 2003 நவம்பர் 25ம் திகதி செவ்வாய்க்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் முச்சக்கர வண்டி வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்
5335569-9-20
5338482-0-64
5339182-8-37
5332242-2-25
5337626-2-12

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

PHOENIX O&M

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்



உத்தியோகபூர்வ முடிவுகள்
செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 3140823 இருந்து
3157274 வரை
சீட்டிழுப்பு இல. 1455
திகதி 22.11.2003



வெற்றி எண்கள்
06 13 17 45 48
போனஸ் எண்
09

ஜக்பொட் பரிசு
ரூபா.1,500,000/- வெல்லப்படவில்லை

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | - | 1,500,000/- | - |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 03 | 100,000/- | 300,000/- |
| 4 | 95 | 10,000/- | 950,000/- |
| 3 | 5,134 | 500/- | 2,567,000/- |
| 2 | 86,087 | 20/- | 1,721,740/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 06ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 105,395 | 10/- | 1,053,950/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.6,592,690/-

இந்த புதன்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா.2,316,150/-

தொடர் இல. 2188561க்கு மேற்பட்ட ஊதா நிற டிக்கட்டுகள் 2003 நவம்பர் 26ம் திகதி புதன்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்
3145730-9-19
3142294-7-15
3145240-2-62
3144288-7-28
3148012-0-53

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

PHOENIX O&M


# ஆசிரியர் மாணவரைத் தண்டித்தால் பெற்றோர் ஆத்திரப்படக்கூடாது!

## வலயக் கல்விப் பணிப்பாளர் ஆலோசனை

யாழ்ப்பாணம்,நவ.24

மாணவர்களை நல்வழிப்படுத்த ஆசிரியர்கள் தண்டிக்கும்போது அதனை எதிர்த்து பெற்றோர்கள் கிளர்ந்தெழும் கலாசாரம் பரவி வருகின்றமை கவலையளிக்கிறது.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன்.

நல்லூர் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற யாழ். கல்வி வலயத்துக்கான கல்வி மேம்பாட்டுப் பேரவையின் அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்குடாநாட்டுப் பாடசாலைகளில் கல்வி வளர்ச்சிக்காகவும் ஒழுக்கத் திற்காகவும் மாணவர்களை ஆசிரியர்கள் தண்டிக்கும்போது பெற்றோர்கள் ஆத்திரமடைகின்றனர். இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

மாணவர்களை ஆசிரியர்கள் தண்டித்தால் மாணவரின் பெற்றோர் மனித உரிமைகள் ஆணைக் குழுவிடமும், கல்வி அலுவலகங்களிலும ஆசிரியர்களுக்கு எதிராக முறைப்பாடு செய்து வருகின்றனர்.

இத்தகைய சம்பவங்கள் காரணமாக பாடசாலை அதிபர்கள் கூட இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பாடசாலைகளில் மாணவர்களின் வரவு, ஒழுக்கம் ஆகியவற்றைப் பேண வேண்டிய பொறுப்பு அதிபர், ஆசிரியர்களுக்கு உண்டு.

மாணவர்கள் மீது அன்பு காட்டி மட்டும் எல்லா விடயங்களையும் நிறைவேற்றிவிட முடியாது என்பது யதார்த்தமாகும்.

ஆகவே, மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்த பெற்றோர்களும் ஆசிரியாகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றார் அவர். (ஒ-7)

# மொழித் திறன்களை...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

பயன்படுத்துதல் மிக்க பயனைத்தரும்.

பேச்சாற்றலும், மதிநுட்பமும் வாய்ந்த பிள்ளைகள் அநேகமாக ஒவ்வொரு வகுப்பிலும் இருப்பர். அவர்களை இனங்கண்டுகொள்ளல் வேண்டும். வாசித்தலிலே திறன்பெற்ற பிள்ளைகளைப் பேச்சுத்திறன் வாய்ந்தவர்களாக வளர்த்தெடுக்க முடியும். இவர்கள் தவிர பேசுதலில் ஆர்வம் உள்ள பிள்ளைகளும் இருப்பர். இவர்களை இனங்கண்டு சந்தர்ப்பங்களை வழங்குதல்வேண்டும். இவர்களின் மேடைக் கூச்சத்தைத் தெளிவிப்பதற்காகவும் மேடைப் பழகத்தை ஏற்படுத்துவதற்காகவும் முதலில் வகுப்பறையிலே சந்தர்ப்பங்களை வழங்குதல்வேண்டும். நாளாந்தம் இரண்டு நிமிடங்களாவது ஒரு தலைப்பின் கீழ் வகுப்பறையில் நற்சிந்தனை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யலாம். பின்னர் காலை ஆராதனை வேளையிலும் மன்றச் செயற்பாடுகளின் போதும் சந்தர்ப்பங்களை வழங்கலாம்.

தாய்மொழி பாடத்தில் மட்டுமன்றி ஏனைய பாடங்களிலும் சிறந்த அடைவினைப் பெறுவதற்கு உதவுவது 'கிரகித்தல்' எனும் திறன் ஆகும். கிரகித்தல் என்பது ஒருவர் வாசிக்கின்ற உரைப் பகுதியிலோ செய்யுளிலோ, தாம் காணுகின்ற நிகழ்வுகளிலோ செவிமடுக்கின்ற உரையாடலிலே உள்ள பிரதான அம்சங்களை இனங்கண்டு விளங்கிக்கொள்ளுதல் ஆகும். கிரகித்தல் என்பது மனிதவாழ்வில் ஒரு முக்கியமான அம்சமாகும். எம்மவர்களில் பலர் பதவி உயர்வுகள், புதிய நியமனங்கள் என்பன தொடர்பாக இடம்பெறும் போட்டிப் பரீட்சைகளிலே தோல்வியுறுவதற்கு கிரகித்தல் தொடர்பான குறைபாடு ஒரு காரணமாகிறது எனலாம்.

வகுப்பறைச் செயற்பாடுகளின் போது உரைப்பகுதி, செய்யுட்பகுதி என்பவற்றை ஆசிரியர் வாசிக்க மாணவர் கிரகித்தல் ஒரு மாணவன் வாசிக்க ஏனைய மாணவர்கள் கிரகித்தல், மௌனமாக வாசித்துக் கிரகித்தல் போன்ற செயற்பாடுகள் கிரகித்தல் திறனை வளர்ப்பதற்குப் பெரிதும் உதவும். இவைதவிர உரையாடல்களை ஏற்படுத்துதல், செவ்விகாணல்களை ஏற்பாடு செய்தல், சொற்பொழிவுகள், பிரசங்கங்களை ஏற்பாடு செய்தல் இவை தொடர்பாக ஒலி நாடா ,ஒளி நாடா என்பவற்றை பயன்படுத்தல் முதலிய செயற்பாடுகள் மூலம் பிள்ளைகளது கிரகித்தல் திறன் வளர்த்தெடுக்கலாம்.

பிள்ளைகளது ஆளுமையை வெளிப்படுத்துவது ஆக்குந்திறன் ஆகும். ஆக்குந்திறனை வளர்த்தெடுக்கப் பெரிதும் உதவுவது வாசிப்புப் பழக்கம் ஆகும். மற்றுமொரு அம்சம் பிள்ளைகளிடம் ஏற்படக்கூடிய சொற்களஞ்சிய விருத்தியாகும்.

சொற்களஞ்சிய விருத்தியை ஏற்படுத்துவதற்குப் பாடநூல்களில் உள்ள அரும்பதங்களையும் அவற்றிற்கான விளக்கங்களையும் அட்டவணைப்படுத்துதல், மரபுத்தொடர்கள், பழமொழிகள், உவமைத் தொடர்கள் என்பவற்றைத் தொகுத்தல், அவற்றை வைத்து வாக்கியம் ஆக்குதல் முதலியவற்றில் பிள்ளைகளைப் பயிற்றுதல் பொருத்தமாக அமையும். பாடசாலை வளாகத்தினுள் 'சொற்களை அறிவோம்' எனுந் தலைப்பில் காட்சிப் பலகைகளை நிறுவுதல், நாளாந்தம் சொற்களையும தொடர்களையும் காட்சிப்படுத்தி அவை தொடர்பாக வாராவாரம் மதிப்பீடுகளையும் போட்டிகளையும் நடத்துதல், அகராதிப் பழக்கத்தை ஊக்குவித்தல் போன்றனவும் சொற்களஞ்சிய விருத்தியில் மிகுந்த பயன்தரும்.

ஆக்குந்திறனைப் பிள்ளைகள் மத்தியில் வளர்த்தெடுப்பதற்கு கற்றல் - கற்பித்தற் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

பாடநூலில் உள்ள கவிதைப் பகுதியைக் கற்பித்தபின் மென்மையான தலைப்பொன்றை வழங்கி அது போன்றதொரு கவிதையை மிகக் குறைந்தவர்களில் ஆக்குவதற்கு வழி நடத்தலாம். சிறுகதைப்பகுதி கற்பித்தபின் அதுபோன்றதொரு சிறுகதையை ஆக்க வழி காட்டலாம் கட்டுரைச் சட்டகங்களை வழங்கிக் கட்டுரை எழுத வழி காட்டலாம் மாணவர் மன்றம், சமய மன்றம், வாணிவிழா, பரிசில் நாள் போன்ற இணைப்பாடச் செயற்பாடுகளின்போது ஆக்கங்களை அவைக்கு வழங்கவும் ஏற்பாடு செய்யலாம்.

மொழித்திறன்களை வளர்த்தெடுப்பது என்பது பாடசாலைகளில் தனித்த ஒரு வேலைத்திட்டமாக நடைமுறைப்படுத்துவது என்பது சாத்தியப்படாத ஒன்று ஆகும். வகுப்பறைச் செயற்பாடுகளின் ஊடாகவும் இணைப்பாடச் செயற்பாடுகளின் ஊடாகவும் மேற்கொள்ளப்படுவதே பொருத்தமாக அமையும் அதே வேளை, இச்செயற்பாடு குறித்த ஒரு காலப்பகுதிக்குள் மட்டும் செய்து முடிக்கக்கூடிய ஒன்றும் அல்ல. பாடசாலை நடைபெறும் காலம் முழுவதுமே தொடர் செயற்பாடாக மேற்கொள்ளப்படல் வேண்டும். பிள்ளைகள் தம்மை அறியாமலேயே இத்திறன்களில் அவர்கள் பயிற்சி பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும்.

மொழித்திறன்களைப் பயிற்றுவதற்குப் பாடசாலைகளில் தாய்மொழிப் பாடம் ஒன்றே பயன்படுத்தப்படுகிறது. ஆனால், மாணவர்கள் ஏனைய பாடங்களைக் கற்கும்போது தான் மொழியை அதிகம் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, மொழித்திறன்களைப் பயிற்றுவதற்குத் தாய்மொழிப பாடம் ஒன்று மட்டுமே உரியது என எண்ணுவதும் தவறே ஆகும் மொழித்திறன்களைப் பயிற்றுவது என்பது தாய்மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு மட்டும் உரியது என்று கருதுவதும் தவறு. ஆகவே, ஏனைய பாடங்களைக் கற்பிக்கும் போதும் மொழித்திறன்களை பயிற்றுதல் என்பது உணர்வுபூர்வமாக மேற்கொள்ளப்படல் வேண்டும். கேட்டல் - கிரகித்தல், வாசித்தல் - கிரகித்தல், பேசுதல், ஆக்குதல் என்பன மொழிப பாடத்திற்கு மட்டும் வரையறுக்கப்பட்டவை அல்ல ஏனைய பாடங்களின் மூலம் அறிவுத் திறனை மேம்படுத்துவதற்கு மொழித்திறன்களை உத்திகளாகப் பயன்படுத்துதல் மிகுந்த பயனை விளைவிக்கும். *

சாவகச்சேரி

**ஜெயா ஆட்ஸ் போட்டோ**

**-ஸ்தாபனம்-**

தனது சேவையை

21.11.2003 வெள்ளிக்கிழமை முதல்

# வைஷ்ணவி ஸ்ருடியோ

என்னும் பெயரில் சாவகச்சேரி தபாற்கந்தோர் சந்திக்கு அருகில் இல. 15, பிரதான வீதியில் ஆரம்பித்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

வழமைபோல் தனது புகைப்படச் சேவையை புதிய முகாமையின் கீழ் நவீனமுறையில் செயற்படுகின்றது என்பதை வாடிக்கையாளர்களுக்கு தெரிவித்துக் கொள்வதில் பெருமிதமடைகின்றோம்.

**வைஷ்ணவி ஸ்ருடியோ**

இல.15, பிரதான வீதி,

சாவகச்சேரி.

(25026)(31-11-16-32)



# பாராட்டி வாழ்த்துகிறோம்



*எமது ஆலய அர்ச்சகர்*

**பிரம்மஸ்ரீ நாகரத்தின ஐயா கலாதர சர்மா**

*(இளஞ்சைவப் புலவர், சைவசித்தாந்த பண்டிதர், யாழ். பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை மாணவர்)*

அவர்கள் 19.11.2003 புதன்கிழமை அகில இலங்கை சமாதான நீதிவானாக நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டு யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். இவரது சமய, சமூகப் பணிகள் மேன்மேலும் சிறப்புற்றுத் திகழ எல்லாம்வல்ல கண்ணபிரான் கடாட்சத்தை வேண்டிப் பிரார்த்தித்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*கைதடி நாவற்குழி தெற்கு, கைதடி.* (25015) (24-11-18-32) - **மகா விஷ்ணு ஆலய பரிபாலன சபையினர்.**



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது மகாவித்தியாலய அதிபர்

**திரு. அ.நடராசசுந்தரம்**

**B.A., SLPS I**

அவர்கள் 20.11.2003 அன்று மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் யாழ். மாவட்டத்துக்கான சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டமையினையிட்டு, அவர் பணி மேன்மேலும் சிறக்க அகமகிழ்ந்து அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்.**

**யா/ஏழாலை மகாவித்தியாலயம்.** (C/31458) (26-24-11-18)


# 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

**தோற்றம்** 26 . 01 . 1930



**மறைவு** 25 . 10 . 2003

*அமரர்*

**திரு. அப்பாக்குட்டி சுப்பிரமணியம்**

அவர்கள்

25.10.2003 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் திரு. அப்பாக்குட்டி சுப்பிரமணியம் அவர்களின் சபிண்டீகரணக் கிருயைகள் கார்த்திகை மாதம் 8ம் நாள் (24-11-2003) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலம் நடைபெறும். இவ் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் பங்கு பற்றி அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதிய போசனத்திலம் கலந்து கொள்ளும் வண்ணம் அழைக்கின்றோம்.

க. பரமேஸ்வரன் (அப்பையா)
கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.24

யாழ்பல்கலைக்கழகத்தில் மீன்பிடியியல் டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்து வெளியேறிய மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு பல்கலைக்கழகத்தில் உள்ள கடல் வள அபிவிருத்தி நிலையத்தின் விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## கூட்டுறவுச் சங்கத்தில் மாவீரர் தினநிகழ்வு

யாழ்ப்பாணம்,நவ.24

மாவீரர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கம் நடத்தும் மாவீரர் தின நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளன.

பொதுச் சுடரேற்றல், தேசியக் கொடியேற்றல், ஈகச்சுடரேற்றல், நினைவுரைகள், மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு, கலை நிகழ்வுகள் உட்பட பல நிகழ்வுகள் இடம் பெறும். (எ-5)

## மாவீரர்களின் பெற்றோர் இன்று கௌரவிப்பு

வடமராட்சி,நவ.24

துன்னாலை தெற்கு தேசிய எழுச்சிப் பேரவையும் லம்போதரா விளையாட்டுக் கழகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு இன்று பிற்பகல் 3.30 மணிக்கு துன்னாலை தெற்கு கொட்டிக்குளக்கரைப் பிள்ளையார் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவை இணைப்பாளர் இ.மோகனதாஸ் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெறும்.

தேசிய எழுச்சிப்பேரவைக்கான புதிய மண்டபமும் இன்று திறந்து வைக்கப்படும். (எ-173)

## தரம் 5 மாணவர்களுக்கு விசேட வகுப்புகள்

நெடுந்தீவு,நவ.24

நெடுந்தீவுக் கோட்டப் பாடசாலைகளில் இருந்து தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புக்களை நடத்த தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க்கிழமையும் நெடுந்தீவு மகா வித்தியாலயம், சைவப்பிரகாச வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலும் இந்தப் பயிற்சி வகுப்புகள் நடைபெறும். (எ-111)

## கோண்டாவிலில் சுகாதார வாரம்

வலி.வடக்கு,நவ.24

கோண்டாவில் வாகீஸ்வரி கல்வி வளர்ச்சிக் கழகத்தினர் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் 5 ஆம் திகதிவரை கோண்டாவில் பகுதியில் சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள உள்ளனர். வருடாந்தம இத்தினங்களில் சுகாதார வாரம் இக் கழகத்தால் அனுஷ்டிக்கப்படுகிறது.

இம்முறை பொது சுகாதார பரிசோதகர் மற்றும் நல்லூர் பிரதேச சபையினர் ஆகியோருடன் இணைந்து இந்த செயல்பாடு முன்னெடுக்கப் படுகிறது.

குறிப்பிட்ட இத்தினங்களில் கோண்டாவில் பகுதியில் உள்ள கட்டாக்காலி நாய்களை அழித்தல், பொது இடங்கள் மற்றும் வீதிகளில் உள்ள குப்பை கூளங்களை அகற்றுதல், கிணறுகளுக்கு குளோரின் இடல் மற்றும் சுகாதார விழிப்புணர்வை ஏற்படுத்தல் உட்பட பல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. (ஒ-86)

## பரிசளிப்பும் திறப்பு விழாவும்

யாழ்ப்பாணம்,நவ.24

நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலய வருடாந்த பரிசளிப்பும் கட்டடத் திறப்புவிழாவும் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9மணிக்கு நடைபெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் சு.சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்துகொள்வார்.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி தவமணி விக்னேஸ்வரன் வழங்குவார். (எ-5)

# தேசிய நல்லிணக்க அரசு சாத்தியப்படுவது கடினம்

## நாடாளுமன்ற முன்னாள் செயலாளர் நாயகம் கருத்து

தேசிய நல்லிணக்க அரசு யோசனையை செயற்படுத்துவது கடினமான காரியம் என்று நாடாளுமன்றத்தின் முன்னாள் செயலாளர் நாயகமான சாம் விஜேசிங்க கூறுகிறார்.

ஞாயிறு சிங்களப் பத்திரிகை ஒன்றிடம் இக்கருத்தை கூறியிருக்கும அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

இன்றைய பிரச்சினையைத் தீர்க்க தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று ஜனாதிபதி யோசனை கூறியிருக்கிறார். பார்த்த உடனேயே இது நல்லதொரு யோசனையாகத் தெரியும். ஆயினும் அதை நடைமுறைப்படுத்துவது கடினம்.

தேசிய அரசில் இணையும் எவரும அந்த அரசு காரணமாக தங்களின் கொள்கையைக் கைவிடமாட்டார்கள். அது இலங்கை அரசியலின் போக்கு. ஜனாதிபதி அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற பின்னர் நாடாளுமன்றத்தில் அவை தொடர்பான விடயங்களுக்குப் பொறுப்பேற்க அமைச்சர்கள் இல்லை.

இது ஒரு பெரும் சிக்கலான நிலை. சமாதானப் பேச்சும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. பாதுகாப்பு அமைச்சின் அதிகாரங்கள் இல்லாமல் சமாதான முயற்சியைத் தொடர முடியாது என்பதால் அம்முயற்சியை ஜனாதிபதி பொறுப்பேற்க வேண்டும என்று கூறிவருகிறார் பிரதமர்.

அரசமைப்பு சட்டத்தில் இருக்கும் அதிகாரத்தின்படி அமைச்சுக்களை ஜனாதிபதி பொறுப்பேற்பதாயின் சமாதான முயற்சியையும் முன்னெடுத்துச்செல்ல அவர் தயாராக இருக்கவேண்டும். அரசமைப்புச் சட்டத்தில் அதிகாரம் இருந்தாலும் நாடாளுமன்றத்தில் அதிகாரம் இல்லாமல் இதனைச் செய்வது கடினமானதாகும்.

ஜனாதிபதியின் கட்சிக்கு நாட்டில் பெரும்பான்மைப்பலம் இருந்த போது ஏனைய கட்சிகளுடன் சகவாழ்வை அவர் எதிர்பார்த்தாரா என்பதை நாட்டு மக்கள் அறிவர். அதனால பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு 129 எம்.பிக்களின் ஆதரவு இருக்கையில், அவர் சகவாழ்வு அரசு ஒன்றுக்கு இணங்கமாட்டார். எனவே, மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து நீதியான முறையில் ஜனாதிபதி செயற்படுவாரா என்பதே எனது கருத்தாகும்.

-இவ்வாறு அவர் கூறியிருக்கிறார். (ஐ)


## தமிழீழ மாவட்ட நீதிமன்று கிளிநொச்சி

வழ. இல. :- 38/03
தன்மை :- மணநீக்கம்.

வழக்காளி:-
திருமதி கவிதா அலன்கியூமர்,
பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி.

எதிராளி:-
நிரந்தரமுகவரி:
திரு.பேணாட் அலன்கியூமர்,
இல. 12,03ஆம் லேன்,
AV றோட், அரியாலை,
யாழ்ப்பாணம்.
தற்காலிக முகவரி:
மே/பா, பேணாட் அலன்பீற்றர்,
07ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

**பகிரங்க அறிவித்தல்**

மேற்படி வழக்கின் வழக்காளியால் எதிராளியாகிய உமக்கு எதிராக மணநீக்கம் பெறுவதற்கு ஒரு வழக்கைத் தாக்கல் செய்து அவ்வழக்கில் உமக்கான அழைப்புக் கட்டளையை சேர்ப்பிக்க வழக்காளி முயற்சி செய்து அது கைகூடாததால், இப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்பட்ட பகிரங்க அறிவித்தல் மூலம் தங்களுக்கு வெளிப்படுத்துகின்றோம். இதில் ஏதாவது ஆட்சேபனை இருப்பின் இப்பிரசுரம் கிடைத்து 21 நாள்களுக்குள் இம்மன்றில் நேரோ அல்லது உம்மில் உரித்துடையோரோ தோன்றி இதற்கான ஆட்சேபனையை மேற்கொள்ளுமாறும், தவறும்பட்சத்தில் குறித்த வழக்கை ஒரு முக விசாரணை மூலம் – விசாரணை மேற்கொண்டு தீர்ப்பு வழங்கப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

"மன்றத்தின் கட்டளைப்படி"

*வரைவு:- திரு.சீ.க.அமல்நிக்சன்*
*வழக்காளி சட்டவாளர்,*
*தமிழீழ மாவட்ட நீதிமன்று,*
*கிளிநொச்சி.*

பதிவாளர்
தமிழீழ மாவட்ட நீதிமன்று,
கிளிநொச்சி.

(25024)(31-11-16)


# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் பிரதி அதிபர்
திரு.ச.கணேஸ்வரன் அவர்களின்
அன்புத் தந்தையார்

**வீரபத்திரர் சதாசிவம்**

அவர்களின் திடீர் மறைவினால் நாம் பெரிதும் துயருறுகின்றோம். அவர்களின் பேரிழப்பால் கவலையுற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நயினை ஸ்ரீநாகபூசணி அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/புங்குடுதீவு மகாவித்தியாலயம்

(25025)(32-11-16)

# மரண அறிவித்தல்

## திருமதி இரத்தினராஜா புவனேஸ்வரி

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினராஜா புவனேஸ்வரி 22.11.2003 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இரத்தினராஜாவின் அன்பு மனைவியும் சிவராஜா, யோகராஜா, ராஜேஸ்வரி, ராஜசோதி, ராஜமலர், ராஜராணி, ராஜகுமாரி, ராஜகௌரி யோகானந்தராஜா, மோகனராஜா ஆகியோரின் அன்புத் தாயாரும் விமலாதேவி, கிருஷ்ணவேணி, சச்சிதானந்தசிவம், மனோரஞ்சன், சிங்கராஜா, சந்திரசேகரம், செல்வரஞ்சன், தங்கமலர், தவமணி ஆகியோரின் அன்பு மாமியாரும் துஷ்ந்தினி, கேதாராணி, ரஜீவன், கஜந்தன், லோமா, தீபன், சாம்பவி, பவுத்திரி, சேந்தன், சாயி, அபிராமி, அபிராஜ், மோகனா, இளங்கோவன், ஞானரதன், காலஞ்சென்ற ஆனந்ததீர்த்தன், மயூரன், திருமதி காயத்திரி, கமலகாந்தன், சவுந்திரியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2003) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வல்லை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்தை வீதி,*
*உடுப்பிட்டி.*

(25020) (24-11-18-32)

தகவல்:
இரத்தினராஜா (கணவர்).

# நாவற்குழி வீதியில் பள்ளம்; விபத்து ஏற்படுமென அச்சம்!

யாழ்ப்பாணம்,நவ.24

ஏ-9 வீதியில் நாவற்குழியில் உள்ள உணவுப்பொருள் களஞ்சியத்துக்கு முன்பாகப் பாரிய குழியொன்று ஏற்பட்டுள்ளது.


வீதியின் நடுவே இக்குழி காணப்படுவதால் போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களுக்குத் தடையாக அமைந்துள்ளதுடன் விபத்துக்கள் ஏற்படக் கூடிய ஆபத்தும் உள்ளது.

தினமும் இந்த வீதியூடாகப் பெரும் எண்ணிக்கையான வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்றன. குறிப்பாக தென்பகுதிக்குச் செல்லும் வாகனங்களும் இந்த வீதியூடாகவே சென்று வருகின்றன.

கடந்த சில தினங்களாக இக்குழி காணப்படுகின்ற போதும் அதனைச் சீர்ப்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. இதனால், போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்கள் விபத்துக்குள்ளாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இரவு வேளைகளில் வீதியில் மின் விளக்குகள் இல்லாத காரணத்தினால் சைக்கிள்களில் செல்வோரும் பாதசாரிகளும் கூட விபத்துக்குள்ளாக நேரிடலாம் என்று அஞ்சப்படுகிறது.

(ஓ-10-6)



ஏ-9 வீதியில் - நாவற்குழியில் உள்ள உணவுப்பொருள் களஞ்சியத்துக்கு முன்பாகக் காணப்படும் பாரிய குழியில் வெற்று பரல் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. *(படங்கள் : அலுவலகப் படப்பிடிப்பாளர்)*

# மாவீரர்களின் தியாகங்களாலேயே இன்று தலைநிமிர்ந்து வாழ்கிறோம்

## பெற்றோர் கௌரவிப்பில் செம்மணன் உரை

கைதடி,நவ.24

தாய் மண்ணுக்காக தம்முயிர் ஈந்த மாவீரரின் தியாகத்தினாலேயே நாம் இன்று தலைநிமிர்ந்து வாழ்கின்றோம்.

- இவ்வாறு தெரிவித்தார் யாழ். மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன்.

நேற்றுமுன்தினம் கைதடி முத்துக் குமாரசுவாமி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

துணைப்பொறுப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்த மாவீரர் நாள் இன்று எமது தாயக மண்ணில் மட்டுமன்றி உலகெங்கும் உள்ள தமிழர் வாழும் பிரதேசங்கள் எங்கும் அனுஷ்டிக்கப்படுகிறது. தாய் மண்ணின் விடிவிற்காக தமது சொந்தங்களைத் துறந்து கொட்டும் மழையிலும், கொடிய வெயிலிலும் மத்தியில் எதிரிகள் எம்மண்ணுக்குள் ஊடுருவாமல் இருக்க களம் நின்று போராடியவர்கள் மாவீரர்கள். இன்று உலகெங்கும் தமிழரின் வீரத்தைப் பார்த்து வியக்குகின்றார்கள். இவ்வளவு வெற்றிக்குக் காரணகர்த்தாக்கள் மாவீரர்களே ஆவார்கள். மாவீரர்தின அலங்காரங்களைக் கண்டு இன்று எதிரி பயம் கொள்கின்றான். அதனால், அவற்றை அறுத்தும் வெட்டியும் எறிகின்றான்.

எமது தலைவர் 1989இல் இந்த மாவீரர்தின விழாவை இந்திய வல்லாதிக்கப் படைகளுக்கு மத்தியிலே கொண்டாடத் தொடங்கினார். இத்தினமானது எமக்கு கேளிக்கையான தினமல்ல. அதேவேளை, சோகமான நாளுமல்ல. எம் முன்னால் வீற்றிருக்கும் இந்த மாவீரர்களின் பெற்றோர்கள் இந்த மண்ணின் விடிவிற்காகத் தம் செல்வங்களைத் தந்தவர்கள். எனவே, மாவீரர்களையும் அவர்களது பெற்றோரையும் எமது உள்ளத்தில் வைத்து பூசிக்கவேண்டும் - என்றார் செம்மணன்.

இந்நிகழ்வில் தேசியக்கொடியை தென்மராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணன் ஏற்ற, ஈகச்சுடரை கைதடி நாவற்குழி தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் இ.இராஜதீபன் ஏற்றினார். தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர்களாலும் பொது மக்களாலும் மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய அதிபர் பி.முத்துலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் க.சிவராஜா, தமிழீழ மாணவர் ஒன்றியப் பிரதிநிதி, கலைவாணி வித்தியாலய அதிபர் ப.செல்லத்துரை ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

(ஒ-75)

### புகையிலை செய்கை தீவகத்தில் தீவிரம்

நெடுந்தீவு,நவ.24

தீவுப்பகுதி விவசாயிகளும் புகையிலை பயிர்ச்செய்கையில் இம்முறை மிக ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர்.

புகையிலைச் செய்கையில் ஈடுபட்டுள்ள தீவுப்பகுதி விவசாயிகள் தமக்குத் தேவையான புகையிலை நாற்றுக்களை வடமராட்சிப் பகுதியில் கொள்வனவு செய்து வருகின்றனர்.

வடமராட்சிப் பகுதியில் ஒரு புகையிலை நாற்று ஒருரூபா தொடக்கம் ஒரு ரூபா 50 சதம் வரையில் விற்பனைசெய்யப்பட்டு வருகின்றது.

இதேவேளை -

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் பெருமளவு விவசாயிகள் புகையிலை உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த ஆண்டிலும் பார்க்க இம்முறை மிகக் கூடுதலான அளவில் புகையிலைச் செய்கை இடம்பெறும் என ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தெரிவித்தார்.

(எ-111-173)

# மிருசுவில் குடியேற்றத் திட்டத்துக்கு மின் இணைப்பு வழங்கக் கோரிக்கை

தென்மராட்சி,நவ.24

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்துக்கு மின் இணைப்பு வழங்குமாறு இப்பகுதி மக்கள் யாழ். பிரதேச மின்பொறியியலாளருக்கு மகஜர் மூலம் கோரியுள்ளனர்.

யுத்தத்தினால் சேதமடைந்த இப்பகுதியில் பெருமளவு மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளதாகவும் -

இவர்களில் 50 வீதமானோர் மின்சாரம் பெறக்கூடிய நிலையில் உள்ளதாகவும் - அவர்கள் அனுப்பிய மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது உசன் சந்திவரை வழங்கப்படும் மின்சார விநியோகத்தினை படித்த மகளிர் குடியேற்றத் திட்டத்துக்கு விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(எ-117)

# மூளாய் கூட்டுறவு ஆஸ்பத்திரியை முழுமையாக இயக்க ஏற்பாடு

சுழிபுரம்,நவ.24

மூளாய் ஐக்கிய சங்கக் கூட்டுறவு வைத்தியசாலையை ஜனவரி மாதத்தில் இருந்து முழுமையாகச் செயற்பட வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கென அகதிகளுக்கான ஐநா. தூதரகத்தின் உதவியினை வைத்தியசாலை நிர்வாகம் நாடியுள்ளது. தற்பொழுது வெளிநோயாளர் பிரிவு மட்டும் வாரத்தின் 7 நாள்களும் இயங்கி வருகிறது. அத்துடன், வார இறுதியில் விசேட வைத்திய நிபுணர்களின் மருத்துவ பரிசோதனைகளும் இடம்பெற்று வருகின்றன.

ஜனவரி மாதத்தில் இருந்து நோயாளர் விடுதியை இயங்க வைப்பதுடன் சத்திரசிகிச்சைகள் மற்றும் ஏனைய மருத்துவ சேவைகள் என்பவற்றையும் ஆரம்பிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வைத்தியசாலையில் உள்ள சத்திரசிகிச்சைக்கூடம் நல்ல நிலையில் உள்ளதுடன் கட்டட வசதிகளும் தாராளமாக இருப்பதாகவும் கூறப்பட்டது.

எனவே, மேற்படி சேவைகளை ஆரம்பிக்கவுள்ளதுடன், வைத்திய நிபுணர்களைப் பணியில் ஈடுபடுத்தவும் அவர்களின் ஆலோசனைகளைப் பெறவும் வைத்தியசாலை நிர்வாகம் உத்தேசித்துள்ளது.

(எ-10-28)

# இசைக் குழுக்களை நிறுவ சலன சித்திரம் ஏற்பாடு

சர்வதேச தரம் வாய்ந்த நடன மற்றும் இசைக்குழுக்களை அமைக்கும் பணியில் 'சலன சித்திரம்' அமைப்பு ஈடுபட்டுள்ளது.

மாவட்ட ரீதியாக முதற்கட்டமாகவும், நாடளாவிய ரீதியில் இறுதிக் கட்டமாகவும் அமைக்கப்படவுள்ள இக்குழுக்களில் போட்டி முறையில் திறமையிக்கவர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர்.

தனித்துவம் மிக்க தமிழர்களின் கலைகளை உலகறியச் செய்யும் நோக்குடன் உருவாக்கப்படவுள்ள இக்குழுக்களில் இடம்பெறவிருக்கும் நடன மற்றும் வாத்தியக் கலைஞர்கள், பாடகர்கள் தமது விவரங்களுடன் 'சலன சித்திரம்', கொடிகாமம் வீதி, சாவகச்சேரி… நாவெட்டி என்னும் முகவரியுடன் தொடர்புகொள்ளலாம். என அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ-8)

# யாழ். ப.நோ.கூ. சங்கத்தைச் சேர்ந்த ஏழு கிளை முகாமையாளர்கள் இன்று பாராட்டிக் கௌரவிப்பு

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் வைத்தவியாபார நடவடிக்கையில் மாதாந்தம் அதிக வருமானத்தை ஈட்டிக்கொடுக்கும் கிளை முகாமையாளர்கள் மற்றும் விற்பனையாளர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2மணிக்கு சங்கத்தின் கேட்போர்கூட மண்டபத்தில் இடம்பெறும்.

சங்க மண்டபத்தில் இன்று நடைபெறும் மாவீரர் தின நிகழ்வின்போது இந்தப் பாராட்டு வைபவம் நடைபெறும் என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

சங்கத் தலைவர் கு.சிறில் தலைமையில் இடம்பெறும் இவ்விழாவில் நாவாந்துறை 02ஆம் இலக்க கிளை, புங்கன்குளம் 17ஆம் இலக்க கிளை, கல்வியங்காடு 11ஆம் இலக்க கிளை, வெள்ளாந்தெரு 07ஆம் இலக்க கிளை, நீராவியடி 16ஆம் இலக்க கிளை, சுண்டுக்குழி 27ஆம் இலக்க கிளை, ஆனைப்பந்தி 14ஆம் இலக்க கிளை ஆகியவற்றின் கிளை முகாமையாளர்கள் இவ்வாறு பாராட்டிப் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுவர்.

(உ-17)


# தமிழீழ வைப்பகம்

## பணிநிலை வெற்றிடம்

**தமிழீழ வைப்பகத்தினால் கீழ்க்காட்டப்படும் பணிநிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன.**

பணிநிலை:- **அலுவலர் (பயிலுநர்)**

தகைமைகள்:- **ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் ஏற்றுக்கொள்ளக் கூடிய பட்டதாரியாக இருத்தல் வேண்டும்.**

**அல்லது**

**ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக்கல்லூரி ஒன்றில் உயர் தேசியக் கணக்கியல் டிப்ளோமா சான்றிதழைப் (HNDA) பெற்றிருத்தல் வேண்டும்.**

மாதாந்த ஊதிய அளவுத்திட்டம்:- **4,500 + 4,000**

அகவை எல்லை:- **32 வருடங்களுக்கு மேற்படாதவராக இருக்க வேண்டும்.**

**வேண்டுகைகள் யாவும் உரிய படிவத்தில் நிறைவுசெய்யப்பட்டுக் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் "ஆள்சேர்ப்புக்கான வேண்டுகை - அலுவலர் (பயிலுநர்)" எனக் குறிப்பிடப்பட்டு 2003/12/15 ஆம் நாளன்று அல்லது அதற்கு முன்பாகக் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும். வேண்டுகைப் படிவங்களையும், மேலதிக விளக்கங்களையும் தமிழீழ வைப்பகத்தின் எல்லாக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

**மேலாளர்,**
**ஆளுகைப்பகுதி,**
**நடுவப்பணியகம்,**
**தமிழீழ வைப்பகம்.**

குறிப்பு:- ☞ நிறைவுசெய்யப்பட்ட வேண்டுகைகளை பதிவுத்தபாலில் (**மேலாளர், ஆளுகைப்பகுதி, நடுவப்பணியகம், தமிழீழ வைப்பகம், யாழ். சாலை, கரடிப்போக்கு, கிளிநொச்சி** எனும் முகவரிக்கு) நேரடியாகவோ அல்லது தமிழீழ வைப்பகக் கிளைகளினூடாகவோ அனுப்பிவைக்கலாம். (C/31453) (26-13-16)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

வவுனியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட 30 நாள் நிரம்பிய அல் சேஷன் நாய்க்குட்டிகள் (ஆண், பெண்) புத்தகத்துடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.நாகராஜா (விஜி) மேசன், கூழாவடி ஒழுங்கை, ஆனைக் கோட்டை. (25013)

## வீடு வளவு விற்பனைக்கு

அச்சுவேலி தெற்கில் சிவசக்தி கோவிலுக்கு அண்மையில் காலி யாகவுள்ள வீடுவளவு உடன் விற்ப னைக்குண்டு. தொடர்பு: அச்சுவேலி தெற்கில் - குமரையா நித்தியானந் தன், கொழும்பில் நடராஜா **T.P.:** 01 2592381.

(31432)

## புரொயிலர் விற்பனைக்கு

புரொயிலர் இறைச்சிக்கோழி சந்தை விலையிலும் குறைவாகப் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் விருப்பத்துக்கு, வேண்டிய நேரத்தில், தேவைப்படும் நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம்செய்தல் இலவசம். தொடர்பு: **Y.A.**சுரேஸ், (கிராமக் கோட்டுச் சந்தியிலிருந்து 150 மீற்றர் தூரத் தில்) பருத்தித்துறை. (24948)

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத் தைச் சேர்ந்த, 1968, பரணி 2 ஆம் பாதம், செவ்வாய் 7 இல் கிரகபாவம் 41 உடைய, அரசாங்க உத்தியோகம் வகிக்கும் மணமகளுக்கு நற்பண்புள்ள, படித்த, மணமகன் தேவை. தகுதிக் கேற்ப சீதனம் வழங்கப்படும். விள. இல.2101, மே/பா உதயன். (24946)

## தவறிவிட்டது

கும்பிளாவளை மேற்கு, அள வெட்டியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சாந்தமதி என்பவருடைய தேசிய அ.அட்டை (இல.787824420V) முக மாலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் மேற்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும் சன்மானம் வழங் கப்படும். (24994)

21.11.2003 வெள்ளிக்கிழமை மாலை 6 - 8 மணிக்கு இடையில் கஸ்தூரியார் வீதியில் யாழ். நகரை அண்டிய பகுதியில் சிறிய கையடக் கத் தொலைபேசி தவறிவிட்டது. (0777 111456) கண்டெடுத்தவர்கள் சாரங்கன் நகைமாடம், இல.45, கஸ் தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தில் தொடர்புகொள்ளவும். (சன்மானம் வழங்கப்படும்.) (25008)

## நாடக நூல்

வானொலியில் "புதிய அடிமை கள்" நாடகம் கேட்டீர்களா? கலா பூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை 20 ஆண்டுகளுக்கு முன்பு எழுதியது. அவரது "வானொலி நாடகம் எழு துவது எப்படி" நூலை விரைவில் எதிர்பாருங்கள். (25014)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima, Broiler குஞ்சுகள் ரூபா 50/=. அதிவிசேட Prima முட் டைக்குஞ்சுகள் ரூபா 65/= என்பன 24.11.2003 பிற்பகல் விநியோகிக்கப் படும். முன்கூட்டியே பதிவுசெய்யவும். பருத்தித்துறைக் கிளையிலும் பெற் றுக்கொள்ளலாம். தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர் வளவு 19, முருகே சர் ஒழுங்கை, முத்திரைச சந்தை யடி, நல்லூர்.

(24876)

## ஒளிவிழா நிகழ்வுகள்

நெடுந்தீவு,நவ.24

நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாசாலையின் ஒளிவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் ச.சுத்தியசீலநாதன் தலைமையில் நடைபெறும். (எ-11)

★ ★ ★

நெடுந்தீவு,நவ.24

நெடுந்தீவு மகா வித்தியாலய கிறிஸ்தவ இளைஞர் மன்றத்தின் ஒளிவிழா எதிர்வரும் 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வித்தியாலய அதி பர் திருமதி கிருஸ்ணதாஸ் தலைமை யில் நடைபெறும்.

ஒளிவிழாவை முன்னிட்டு வித்தி யாலயத்தில் அமைந்துள்ள ஜூர்து மாதா கெவியில் விசேட திருப்பலி ஆராதனைகள் இடம்பெறும்.

(எ-11)

# பாராட்டி வாழ்த்துகிறோம்



*வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தரும், பல்வேறு தொண்டர் நிறுவனங்களில் முக்கிய உறுப்பினரும், சமூக சேவையாளரும், தலைசிறந்த எமது ஆசானுமாகிய*

**திரு.கோபாலசிங்கம் ஜீவபாலன்** அவர்கள் மேலதிக மாவட்ட நீதிபதி திருமதி S.நந்தசேகரன் முன் னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக சத்தி யப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர், மேலும் பல பதவிகள், பட்டங்கள் பெற்றும் சேவைகள் தொடரவேண்டும் என்றும் நல்லைக்கந்தனின் அருள்வேண்டி வாழ்த்துகிறோம்.

**யாழ். நகர மாணவர்கள்.**

(25019) (24-25-26)

# Vacancies

A reputed Professional educational establishment has following vacancies for its Jaffna Branch

Lecturers: We are looking for qualified & Experienced Full time / Part time lecturers for the following areas:

Business Management, Quantitative Methods, Accountancy, Economics, Marketing, Human Resources, Law, Computing, System Analysis, Networks & Administration systems, Internet System Development & IT Applications, English Language

## Trainee Academic Advisors

Prospective candidates should posses G.C.E (A/L), Flair for Marketting & Public Releation & ability to work with Computer

A very good command in English is required for all vacancies

Applications with details of qualifications, experience and contact numbers, giving names and addresses of two non related referees should be forwarded within 7 days to:

**Executive Director**
**Advertisement No:- 2104**
**C/O uthayan**
**361, Kasthuriyar Road, Jaffna.**

**ஈடிணையற்ற சேவையில்......**

# 32 ஆவது ஆண்டில்!

கல்வியாண்டு - 2004 இற்கான

**தரம் 03 முதல் O/L வரை**
**புதிய அனுமதிகள்**
**வழங்கப்படுகின்றன!**

✳ டிசெம்பர் 10 ஆம் திகதிவரை மட்டுமே வழங்கப்படும்.

✳ இங்கிருந்து இடைவிலகிய மாணவர்கள் தகுந்த காரணங் காட்டாவிடின் அவர்களுக்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

✳ சனி, ஞாயிறு, விடுமுறை நாள்களில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 5.00 மணிவரை, கிழமை நாள்களில் பிற்பகல் 3.00 - 5.00 மணிவரை மட்டுமே அனுமதிகள் வழங்கப்படும்.

*The Express Institute* - அதிபர்.
*Irupalai, Kopay.* (24990) (25-24-13)

# அஞ்சலி அழைப்பு

'மூத்த'
வங்கியாளர்
கௌரவிப்பு - 2003

தற்பொழுது சேவையிலுள்ள யாழ் மாவட்ட வங்கி களை சேர்ந்த ஊழியர்கள், தமது வங்கிகளிலிருந்து இளைப்பாறியும் அன்றி வேறு வழிகளில் விலகியும் சென்ற மூத்த வங்கியாளர்களை (ஓய்வூதியம் பெறும் விதவைகள் உட்பட) கௌரவிக்கும் வருடாந்த நிகழ்வானது எதிர்வரும் புதன்கிழமை (26.11.2003) நினைவு கூரப்படவுள்ளது.

*இடம்* : வட்டு.யாழ்ப்பாணக்கல்லூரி மண்டபம் (வர்த்தக வங்கி அருகில்) இல.464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

*நேரம்* : காலை 10.00 மணி

*பிரதம விருந்தினர்*: MR. NOEL A. VIMALENDIRAN (The Principal-Jaffna College, Vattukottai)

கௌரவிக்கப்படுபவர்களையும் கௌரவிப்பவர்களையும் இவ்விழாவில் பங்குகொண்டு மதியபோசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றனர்.

திரு.பி.ரகு, உபதலைவர் — திரு.என்.சிவரத்தினம், செயலாளர்

*குறிப்பு:* பங்குகொள்பவர்கள் தமது வருகை பற்றி இதுவரை அறிவிக்காவிடின் தயவுசெய்து செயலாள ருக்கு அறிவித்து, ஏற்பாடுகளுக்கு உதவிசெய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

வங்கியாளர் சங்கம் யாழ் மாவட்டம். — BANKERS ASSOCIATION JAFFNA DISTRICT.

(C/3) HITHAYAN Graphics

# இந்திய பரம்பரை ஜோதிடர் மணிசாமி அவர்கள்



யாழ். புண்ணிய பூமிக்கு வருகை
ஸ்ரீசோட்டாணிக்கரை பகவதி அருள்பெற்ற
ஸ்ரீவெட்டுடைய காளியம்மாவின் அருந்தவப் புதல்வன்

**மணிசாமி சாமி** P.T.R. மீண்டும் வருகை தந்துள்ளார்.

கைரேகை, ஜாதகம், எண்கணிதம், நினைத்த காரியம் பார்க்கப்படும். திருமணத் தடங் கலா? காதலில் தோல்வியா? தீராத வியாதியா? உயர்கல்வித்தடையா? கடன் தொல்லையா? தொழிலில் முன்னேற்றமில்லையா? புதிய தொழில் தொடங்கவேண்டுமா? குழந்தைப் பாக் கியமில்லையா? வெளிநாடு செல்லத்தடையா?

ஒருமுறை விஜயஞ்செய்து பாருங்கள்! உண்மைபுரியும்.

**மணிசாமி சாமி**
**54, மணிக்கூட்டு வீதி, வெலிங்டன் சந்தி,**
**(பழைய லிங்கம் கூல்பார் அருகில்) உல்லாசப்பயணிகள் விடுதி, யாழ்ப்பாணம்.**

(25011) (13-24)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட முதலாம் வருட மாணவன் **செல்வன் ச.தேவமுகுந்தன்** அவர்களின் அன்புத் தந்தையார்

## பொன்னம்பலம் சண்முகலிங்கம்

அவர்களது பேரிழப்பால் துயருறும்
அவரது குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர்களுக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன்,
கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி
ஆத்மா சாந்திபெறப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். பல்கலைக்கழகம். — கலைப்பீட முதலாம் வருட மாணவர்கள்.

(25012) (25-24-13)

# தமிழ்ழ மாவட்ட நீதிமன்று - திருகோணமலை

(கட்டைபறிச்சான்)

வழக்கு இலக்கம் :- 31/2003
தன்மை :- பணம்
தொகை :- ரூபா 500000/-

வழக்காளி :- காளிராசா வனஜா, 27/01 திருக்கடலூர், திருகோணமலை.

எதிர்

எதிராளி :- தியாகராசா நாகமுத்து (சம்மாட்) சி/ஒ. வள்ளிப்பிள்ளை முருகேசு, 536/22, வேளாங்கண்ணி கோவிலடி, மாந்தோட்டம், திருக்கடலூர், திருகோணமலை.

## பகிரங்க அறிவித்தல்

மேற்படி வழக்கு இலக்கம் 31/2003 பணம் என்னும் வழக்கு எதி ராளிக்கெதிராக தமிழ்ழ மாவட்ட நீதிமன்று, திருகோணமலை எனும், நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு எதிராளிக்கான அழைப்புக்கட்டளை பதிவுத்தபாலில் அனுப்பப்பட்டு குறித்த அழைப்புக்கட்டளை உரிய விலாசத்தில் எதிராளி இல்லை என திரும்பவந்துள்ளது. அத்துடன், எதிராளி தற்போது வெளிநாடு சென்றுவிட்டதாக வழக்காளி ஊடாக அறியமுடிகின்றது. எனவே, குறித்த வழக்கில் அக்கறையுடையோர் அல் லது உரித்துடையோர், பத்திரிகையில் விளம்பரம் செய்யும் நாளில் இருந்து 21 நாள்களுக்குள் எமது மன்றில் தோன்றி நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் குறித்த வழக்கானது ஒருமுக விளக்கத்துக்கு விடப்படும் என்பதனை இத்தால் அறியத் தருகின்றோம்.

வரைவு:-
வழக்காளி சட்டவாளர்
செல்வி எஸ். சுதர்சினி,
கட்டைபறிச்சான் - 7,
மூதூர்.

மன்றின் கட்டளைப்படி,
திருமதி நா.தேவதாஸ்,
பதிவாளர்,
தமிழ்ழ மாவட்ட நீதிமன்று,
திருகோணமலை.

(13-24) (ள்-31440)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

மலர்வு
02
௨
04
௨
1975



உதிர்வு
25
௨
10
௨
2003

## ஆறுமுகம் அருட்சோதி

எங்கள் அருளே!
உயிரின் உயிரே!
நீ மறைந்து விட்டாய்!
எம்மை விட்டுப் பிரிந்து விட்டாய்!
உன் செல்லப் புன்னகையை
எம்மிடமிருந்து பறித்து விட்டாய்!
கதறுகிறோம் ஐயா!
கண்ணீர் இருக்கும் வரை.

எங்கள் அருமைச் செல்வத்தின் சபிண்டீகரண, அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (24.11.2003) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்றன. இந்த நிகழ்வுகளில் பங்குகொள்வதோடு, நண் பகல் நடைபெறுகின்ற மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

*ஆறுமுகம் பேக்கரி, வதிரி, கரவெட்டி.* (25010) (26-13-24)

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

# உலகக் கிண்ண றக்பி தொடரில் இங்கிலாந்து அணி சம்பியன்

உலகக் கிண்ண றக்பி சுற்றுப் போட்டியில் இங்கிலாந்து அணி சம்பியனாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் மோதின. சிட்னி நகரில் மிக விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் இங்கிலாந்து அணி மேலதிக ஆட்ட நேரத்தின் பின் 20-17 புள்ளிகள் விகிதத்தில் வென்றது.

அவ்வணியின் உபதலைவரான ஜோனி வில்கின்ஸன். இப்போட்டியில் 15 புள்ளிகளைப் பெற்றார்.

ஏற்கனவே. நடைபெற்ற 4 உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆஸ்திரேலிய அணி இருதடவை சம்பியனாகியது. இதற்குமுன் 1999ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரும் அவற்றில் ஒன்றாகும்.

இந்நிலையில் மூன்றாவது தடவை சம்பியனாகி சாதனை படைப்பதற்கு ஆஸ்திரேலியா திட்டமிட்டிருந்தது.

எனினும், மார்ட்டின் ஜோன்ஸன் தலைமையிலான இங்கிலாந்து அணி, ஜோர்ஜ் கிரகன் தலைமையிலான ஆஸ்திரேலிய அணியின் கனவைக் கலைத்தது.

இப்போட்டியின் 6ஆவது நிமிடத்தில் ஆஸ்திரேலிய அணிவீரர் தக்ரி, ட்ரை ஒன்றின் மூலம் 5 புள்ளிகளைப பெற்று தனது அணியை முன்னிலைக்கு இட்டுச்சென்றார்.

எனினும், ஜொனி வில்கின்ஸன் அடுத்தடுத்து அடித்த 3 பெனால்டிகள் மூலம் இங்கிலாந்து 9-5 விகிதத்தில் முன்னிலை வகித்தது. 38 ஆவது நிமித்தில் அணித்தலைவர் மார்ட்டின் ஜோன்சன் பெற்ற ட்ரை மூலம் இங்கிலாந்து 14-4 விகிதத்திற்கு முன்னேறியது.

இடைவேளையின் பின்னர் கடுமையாகப் போராடியது ஆஸ்திரேலிய அணி. அந்த அணியின் மத்திய கள வீரரான எல்டன் பிளாட்லி இரு பெனால்டிகளைப் பெற்றார். இதனால் 3 புள்ளிகளால் மாத்திரமே பின்னடைவில் இருந்தது ஆஸ்திரேலியா.

நிர்ணயிக்கப்பட்ட ஆட்டம் முடிவதற்கு 2 நிமிடங்களுக்கு முன்னர் ஆஸ்திரேலிய அணிக்கு மற்றொரு தண்டனை உதை வாய்ப்பை வழங்கினார் ஆஸ்திரேலிய நடுவரான அந்ரே வட்ஸன்.

22 மீற்றர் தூரத்திலிருந்து வெற்றிகரமாக பெனால்டிகோலை அடித்தார் பிளாட்லி. இதனால், நிர்ணயிக்கப்பட்ட நேர முடிவில் இரு அணிகளும 14-14 விகிதத்தில் சமநிலையில் இருந்தன.

அதையடுத்து மேலதிக ஆட்ட நேரம் வழங்கப்பட்டது. அதன்பின் இரண்டாவது நிமிடத்தில் இங்கிலாந்தின் ஜொனி வில்கின்ஸன் 45 மீற்றர் தூரத்திலிருந்து தனது நான்காவது பெனால்டியை பெற்றார்.

4 நிமிடங்களின் பின்னர் ஆஸ்திரேலியாவுக்குக் கிடைத்த பெனால்டி வாய்ப்பை பயன்படுத்தி 4 புள்ளிகள் விகிதத்தை சமன் செய்தார் பிளாட்லி.

மேலதிக நேரம் ஆட்டம் முடிவடைவதற்கு 26 செக்கன்கள் மாத்திரம் இருந்தபோது ஜொனி வில்கின்ஸன், 'ட்ரொப்கோல்' முறையில் இங்கிலாந்து அணிக்கு 3 புள்ளிகளைப் பெற்றுக்கொடுத்தார்.

இதனால், 20-17 விகிதத்தில் இங்கிலாந்து அணி வென்று, முதல் தடவையாக உலகக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. இவ்வெற்றியின் மூலம் உலகக்கிண்ண றக்பி தொடரில் சம்பியனுக்கான 'வெப்லிஸ் கிண்ணத்தைப்' பெற்ற முதலாவது வட அரைக்கோள நாடு எனும் பெருமையை இங்கிலாந்து பெற்றது.

இதற்குமுன், தென் அரைக்கோளத்தைச் சேர்ந்த நியூஸிலாந்து (1987), ஆஸ்திரேலியா (1991,1999), தென்னாபிரிக்க (1995) ஆகியனவே றக்பி உலகக் கிண்ணத்தை வென்றன.

1966ஆம் ஆண்டில் இங்கிலாந்து அணி உலகக் கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் சம்பியனாகியது. அதன்பின் அணிகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் இங்கிலாந்து பெற்ற மிகப்பெரிய வெற்றி இதுவாகும்.

1991ஆம் ஆண்டு றக்பி உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஆஸ்திரேலிய அணியிடம் இங்கிலாந்து 12-6 விகிதத்தில் தோல்வியுற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை இறுதிப்போட்டியை 82,957 பேர் நேரில் பார்வையிட்டனர் தொலைக்காட்சி மூலம் சுமார் ஒருகோடி பேர் பார்வையிட்டிருப்பர் என கணிப்பிடப்பட்டுள்ளது.

இப்போட்டியை தொலைக்காட்சி மூலம் பார்வையிட்ட பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர், "இது இங்கிலாந்து முழுவதற்கும் மிகச் சிறந்ததொரு தினமாகும்" எனத் தெரிவித்துள்ளார்.

இப்போட்டி நடைபெறும் போது இங்கிலாந்தில் பல வீதிகள் வெறிச்சோடிக்கிடந்தன. பலரும் வீடுகளில் தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பார்வையிட்டுக்கொண்டிருந்தமையே இதற்குக்காரணம். வீதிகளில் போக்குவரத்து 60 சதவீதம் குறைந்திருந்தது. தற்போது தமது நாயகர்களை வரவேற்பதற்கு இங்கிலாந்து நாட்டினர் தயாராகி வருகின்றனர். (ஐ)

## உதைபந்தாட்டம்

எல்லைப்படை மாவீர் நினைவாக தமிழீழ விளையாட்டுத்துறையினர் யாழ் மாவட்ட உதைபந்தாட்ட அணிகளுக்கு இடையே நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3மணி முதல் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் கலந்துகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு-

கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் எதிர் யாழ்ப்பாணம் சென்பிலிப்ஸ் விளையாட்டுக்கழகம்.

மல்லாகம் மயிலணி ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகம் எதிர் நாவாந்துறை சென்நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம். (ஒ-5-86)

## கிரிக்கெட் பயிற்றுவிப்பாளருக்கு

யாழ்ப்பாணம்,நவ.24

யாழ் மாவட்டத்திலுள்ள கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர்களுக்கான இருநாள் பயிற்சிப்பட்டறை எதிர் வரும் 26, 27ஆம் திகதிகளில் தம்புல்ல ரன்கிரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலைகள் மற்றும் கழகங்கள் ஆகியவற்றிற்கான கிரிக்கெட் பயிற்றுவிப்பாளர்களும், பயிற்றுவிப்பாளர்களுக்கான தரம்1 பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் இப்பயிற்சிப் பட்டறையில் கலந்துகொள்ளலாம். என்றும்-

பங்குபற்ற விரும்புவோர் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4மணியளவில் இல. 253, ஸ்ரான்லி வீதியில் இயங்கும் அருணல்ஸ் ஸ்போட் ஸ்போட்டிற்கு வருமாறும்-

யாழ்.மாவட்ட துடுப்பாட்டச்சங்க உபதலைவர் கே. பூபாலசிங்கம் கேட்டுள்ளார். (ஒ-5)

## தேர்வாளர்கள் லஞ்சம் கேட்டனர்: — ஹைதராபாத் வீரர் புகார் —

அணிக்கு தேர்வுசெய்யப்படுவதற்காக தேர்வாளர்கள் தன்னிடம் லஞ்சம் கேட்டனர் என ஹைதராபாத் கிரிக்கெட் வீரர் வாங்கா பிரதாப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தொலைக்காட்சியொன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"தேர்வாளர்கள் சார்பில் சிலர் என்னை அணுகினர். யார் என்பதை நான் கூறமாட்டேன். ஆனால் ஹைதராபாத் கிரிக்கெட் சங்கத்தில் எல்லோருக்கும் அது தெரியும்.

தேசிய அணி மட்டுமல்ல மண்டல அளவிலான அணிகளில் இடம்பிடிபதற்கு கூட லஞ்சம் கொடுக்கப்படுகிறது.

1996-97 இல் மேற்கிந்தியத் தீவுகள் பயணத்துக்கு கன்வல்ஜித் சிங்கிற்குப் பதிலாக நோயல் டேவிட்டை இந்திய அணிக்கு தேர்வுகள் செய்தனர். இதுபோன்ற தேர்வுகள் லஞ்சம் கொடுக்கப்படுகிறது என்ற எண்ணத்தை தோற்றுவிக்கின்றன" என்றார் பிரதாப்.

நிரஞ்சனாஸ்
சங்கானை
இன்று மட்டும்
ராஜேஸ், ஸ்ருதிகா
நடித்த
சிம்பம் (ரீஸ்)
நாளை முதல்
விஜய், ஜோதிகா,
கிரண், விவேக் நடித்த
திருமலை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (ப.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 இரவு
Get carter
(C-31359)

நாகம்ஸ் சுன்னாகம்
அனேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க
இளைய தளபதி
விஜய், ஜோதிகா,
கிரண், விவேக்
நடித்த
திருமலை
நாளை முதல்
பார்த்திபன் கனவு



அலுவலக உதவியாளர் தேவை
(ஆண்)
நல்லூர் அறிவொளி கல்வி நிலையத்திற்கு
ஆண் அலுவலக உதவியாளர் தேவை.
வயதெல்லை:-
25-35 இற்கு இடையில்.
திங்கள், செவ்வாய்
(24-11, 25-11) பி. ப. 5 மணிக்கும் 6 மணிக்கும் இடையில்
நேரில் வரவும். (29036)

லஷ்சுமி சினிமா
இணுவில்
ரஜனி, மீனா,
கவுண்டமணி, செந்தில் நடித்த
எஜமான்
10.30, 2.30, 6.30. (பு.நே.)

லிபேட்டி அச்சுவேலி
இன்று முதல்
வியாழன் வரை
விஜய், ஜோதிகா
நடித்த
குஷி
தினசரி: 2.30, 7.00 (பு.நே.)



ராஜா யாழ்ப்பாணம்
அஜித், மீராஜஸ்மின்,
கபாலி
மற்றும் பலர் நடித்த
ஆஞ்சநேயா
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

## லஞ்சக் குற்றச்சாட்டுக்குள்ளான இந்திய வீரர் இடைநிறுத்தம்!

அணியில் சேர்ப்பதற்காக லஞ்சம் வழங்க முன்வந்தார் என குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள இந்திய கிரிக்கெட் வீரர் அபிஜித் காலே விசாரணை முடியும் வரை போட்டிகளில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் ஜக்மோகன் டாலமியா கடந்த வெள்ளியன்று இத்தீர்மானத்தை அறிவித்தார்.

இலங்கை 'ஏ' அணியுடனான போட்டிகளுக்கான இந்திய 'ஏ' அணியில் தம்மைச் சேர்ப்பதற்காக தேர்வுக் குழு அங்கத்தவர்களான கிரன் மோரே, பிரணாப் ராய் ஆகியோருக்கு தலா 10 லட்சம் இந்திய ரூபா வழங்க முன்வந்தார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

எனினும், இந்திய 'ஏ' அணிக்கு அல்ல இந்திய சிரேஷ்ட அணியில் தம்மை சேர்க்குமாறு காலே கூறினார் என்றே புகாரிடப்பட்டுள்ளது என டாலமியா தெரிவித்தார்.

"லஞ்சவிவகாரம் குறித்து தேர்வுக்குழு அங்கத்தவர்களில் இருவரான கிரன் மோரேயும் பிரணாப் ராயும் கடந்த 18ஆம் திகதி ரி.வி.எஸ். கிண்ண இறுதிப்போட்டியின்போது என்னிடம் தெரிவித்தனர்.

"நான் இப்புகாரை எழுத்து மூலம் தருமாறு கோரினேன். அவர்களிடம் 20 ஆம் திகதி எழுத்து மூலம் அறிக்கை சமர்ப்பித்தனர்."

-இவ்வாறு டால்மியா மேலும் கூறினார்.

காலே மீதான புகார் தொடர்பாக விசாரணை நடத்தும் பொறுப்பு இந்திய சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் டி.வி. சுப்பாராவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அவர் தனது விசாரணை அறிக்கையை 15 நாள்களுக்குள் பூர்த்தி செய்வார் என எதிர்பார்க்கப் படுகிறது.

அதன் பின்னர் அடுத்த நடவடிக்கை குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் ஒழுக்காற்றுக் குழு தீர்மானிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பரீட்சைக்காக அணியிலிருந்து விலகினார் பாக்.கிரிக்கெட் சபைத் தலைவரின் மகன்

நியூஸிலாந்துடனான போட்டிகளுக்கான பாகிஸ்தான் அணியில் சேர்க்கப்பட்ட ஜுனைட் ஸியா கல்லூரிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அவ்வணியிலிருந்து விலகினார்.

20 வயதான ஜுனைட் ஸியா, பாக்.கிரிக்கெட்சபைத் தலைவர் தாகிர் ஸியாவின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

நியூஸிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையேயான 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடருக்கான 15பேர் கொண்ட பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணியில பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவரான தாஹிர் ஸியாவின் மகன் ஜுனைட் ஸியா, சர்ச்சைக்குரிய விதமாக சேர்க்கப்பட்டார்.

இதற்கு முன்பு அறிவிக்கப்பட்டு இருந்த தேர்வு நிலை அணியில் ஜுனைட் ஸியா இடம்பெற்றிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உள்நாட்டுப் போட்டிகளில் சிறப்பாக விளையாடியதன் காரணமாக ஸியாவிற்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டிருப்பதாக தேர்வுக்குழுத் தலைவர் அமீர் சொஹைல் தெரிவித்தார்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு நடைபெற்ற பங்களாதேஷ் அணிக்கு எதிரான தொடரில் விளையாட ஸியா தேர்ந்தெடுக்கப்பட்டு இருந்தார். இது அப்போது கடும் விமர்சனத்திற்கு உள்ளானது. இந்த நிலையில் இது குறித்து பேட்டியளித்த அமீர் சொஹைல கூறுகையில், "இலங்கையில் நடைபெற்ற போட்டியில் எமர்ஜிங் சம்பியன் பட்டம் பாகிஸ்தான் அணியில் இடம்பெற்றிருந்த ஜுனைத் ஸியா தொடர் நாயகன் விருதைப் பெற்றிருந்தார்.

உள்ளூர் போட்டிகளிலும் அவர் சிறப்பாக விளையாடியுள்ளார். எல்லாவற்றிற்கும் மேலாக அணி நிர்வாகமும் ஸியாவை அணியில் சேர்க்குமாறு கேட்டுக்கொண்டது"- என்று கூறினார். அமீர் சொஹைல் கூறுகையில், "இலங்கையில் நடைபெற்ற போட்டிகளில் எமர்ஜிங் சம்பியன் பட்டம் பாகிஸ்தான் அணியில் இடம் பெற்றிருந்த ஜுனைத் ஷியா தொடர் நாயகன் விருதைப் பெற்றிருந்தார்.

"உள்ளூர் போட்டிகளிலும் அவர் சிறப்பாக விளையாடியுள்ளார். எல்லாவற்றிலும் மேலாக அணி நிர்வாகமும் ஸியாவை அணியில் சேர்க்குமாறு கேட்டுக்கொண்டது"-என்று கூறினார்.

எனினும் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக ஜுனைட்ஸியா அணியிலிருந்து விலகினார். ஜுனைட் ஸியாவுக்கு பதிலாக உமர்குல் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்

பாக்.அணியில் வேகப்பந்து வீச்சாளர் சொஹைப் அக்தாரும் இடம் பெற்றுள்ளார். ஆனால், முதல் இரண்டு போட்டிகளில் அக்தார் விளையாட முடியாது. தென்னாபிரிக்காவிற்கு எதிரான லாகூரில் நடைபெற்ற டெஸ்டில், மோசமான வார்த்தையால் திட்டியதற்காக அக்தாருக்கு 2போட்டிகளில் விளையாட தடைவிதிக்கப்பட்டமையே இதற்குக் காரணம். (ஐ)

## பாக். 'ஏ' அணிக்கு அவ்ரிடி தலைவர்

இந்தியாவில் நடைபெறவுள்ள முக்கோண கிரிக்கெட் சுற்றுப் போட்டிக்கான பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு அதிரடி வீரர் சஹிட் அவ்ரிடி தலைமை தாங்கவுள்ளார்.

கொல்கத்தாவில் டிசெம்பர் 13 முதல் 21 ஆம் திகதி வரை இப்போட்டிகள் நடைபெறவுள்ளன. இலங்கை. இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் அணிகள் இப்போட்டியில் பங்குபற்றவுள்ளன.

இப்போட்டிகளுக்கான பாகிஸ்தான் அணி விவரம்: சஹிட் அவ்ரிடி (தலைவர்), சல்மான் பட், மொஹமட் கலீல், மொஹமட் இர்ஷாத், மன்சூர் அம்ஜத், பைஸல் இக்பால், பிலால் அஸாத், இம்ரான் நஸீர், அப்துல் ரவூப்.

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் தர்மலிங்கம்
### (செல்லத்துரை)

துவாளி வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டியைச் சேர்ந்த வல்லிபுரம் தர்மலிங்கம் நேற்று (23.11.2003) ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - தெய்வானை தம்பதிகளின் அன்புமகனும், செல்லக்கண்டுவின் அன்புக் கணவரும், மனோராணி, மகேந்திரன்(கனடா), பவானி, தயாநிதி (கனடா), தவோநிதி (பிரான்ஸ்), மனோகரன் (ஹொலண்ட்), நிர்மலா, திபாகரன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (24.11.2003) திங்கட்கிழமை பிற்பகல் 2மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக வல்லை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*துவாளி வீதி,*
*இமையாணன் மேற்கு,*
*உடுப்பிட்டி.*

(31466)(31-12-17-32)

தகவல்:
த.மகேந்திரன்.
(மகன்)

## மரண அறிவித்தல்

### பாலசிங்கம் சர்வகுணானந்தன் (சர்வா)

**(இளைப்பாறிய தொலைத் தொடர்பு பரிசோதகர்)**

அல்வாயைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி தெற்கில் வசித்தவரும் தற்போது கொழும்பில் வசித்துவந்தவருமான பாலசிங்கம் சர்வகுணானந்தன் அவர்கள் 19.11.2003 புதன்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் தவமணி (கனடா) ஆகியோரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற சதாசிவம் - மனோன்மணி ஆகியோரின் மருமகனும் கமலாசினிதேவி (தேவி- இளைப்பாறிய உப அஞ்சல் அதிபர், திருநெல்வேலி) அவர்களின் அருமைக் கணவரும் நிவேதிகா (லண்டன்), பிரசாந்த் (லண்டன்), பிரவீன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் அரவிந்தன் (லண்டன்) அவர்களின் அன்பு மாமனாரும் கருணானந்தன் (கனடா), லோகானந்தன் (கனடா), காலஞ்சென்ற சத்யானந்தன் (கனடா), சிவசக்தி (கனடா), விவேகானந்தன் (கனடா), ஆகியோரின் அன்புச் சகோதரரும் திவ்வியநாயகம் (கனடா), சிவானந்தம் (லண்டன்), லோகநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*4A, ஐ.பி.சி.றோட்,*
*வெள்ளவத்தை,*
*T.P.: 360.217*

(25027)(31-12-17-32)

தகவல்:
கமலாசினிதேவி.
(மனைவி)

## தென்கொரிய நாட்டில்

# சட்டவிரோதமாகத் தொழில் செய்யும் இலங்கையரை வெளியேற உத்தரவு

தென்கொரியாவில் சட்டவிரோத மாகத் தொழில் புரியும் இலங்கையர் களை அங்கிருந்து உடன் வெளி யேறுமாறு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் கேட்டுள்ளது.

சுமார் இரண்டாயிரம் இலங்கையர் கள் தென்கொரியாவில் சட்டவிரோத மாகத் தங்கியுள்ளனர் என்றும் -

இவ்வாறு பல நாடுகளையும் சேர்ந்த ஒரு லட்சம் வெளிநாட்டவர்கள் அந்த நாட்டில் தங்கியுள்ளனர் என்றும் -

அந்த நாட்டு குடிவரவு, குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

தென்கொரியாவில் சட்டவிரோ தமாக தங்கியிருக்கும் வெளிநாட்ட வர்களை - தற்போது அறிவிக்கப்பட் டதன் பிரகாரம் - குடியகல்வு, குடிவர வுத் திணைக்களத்தில் சரணடைந்தால் அவர்களின் சொந்த நாட்டுக்கு அவர் கள் திரப்பியனுப்பப்படுவர் என தென் கொரிய அரசு தெரிவித்துள்ளது.

அங்கு தங்கியிருக்கும் இலங் கையர்கள் வெளியேறாவிட்டால், எதிர் காலத்தில் அந்த நாட்டில் இலங்கை யர்களுக்கு கிடைக்கும் உத்தியோக பூர்வத் தொழில் வாய்ப்புகள் கேள்விக் குறியாகிவிடும் என இலங்கை வெளி நாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

# தடுப்புக்காவலில் கைதி சித்திரவதை: பொலீஸ் அதிகாரிக்கு கைது உத்தரவு

கொழும்பு,நவ.24

தடுத்து வைக்கப்பட்டிருந்த நபரொருவரை சித்திரவதை செய்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் வெள்ளவத் தை பொலீஸ் நிலையத்தில் கடமை யாற்றும் பொலீஸ் அதிகாரியொருவ ரைக் கைதுசெய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிருலப்பனை பொலீஸ் நிலையத் துக்கு மேல் நீதிமன்றம் விடுத்த இந்த உத்தரவில், ஜனவரி 4ஆம் திகதி இந்த விவகாரம் தொடர்பாக அங்கு செய்யப்பட்ட முறைப்பாடு குறித்து அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கும் படியும் கேட்கப்பட்டுள்ளது.

கிருலப்பனை பொலீஸ் நிலையத் தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த நப ரொருவர் சித்திரவதைக்குள்ளாக் கப்பட்டது தொடர்பாகவே மேல் நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட் டதையடுத்து மேல் நீதிமன்றம் 'இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

# சங்கரியின் தலைமை...

(முதலாம் பக்கத் தொடர்சி)

1) கட்சியின் செயற்பாடுகள் தொடர் பாக ஆராய்தல்.

அ) தமிழர் விடுதலைக் கூட்டணி மாவட்டக் கிளைகளினாலும் ஆதரவாளர்களினாலும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலை வருக்கெதிராக அண்மைக் காலங்க ளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், முடிவுகள் குறித்து ஆராய்தல்.

ஆ) 2001ஆம் ஆண்டில் பொதுத் தேர்தலுக்கு முன்னர் தமிழர் விடு தலைக் கூட்டணி உட்பட மூன்று தமிழ்க் கட்சிகள் சேர்ந்து உருவாக்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொள்கை களுக்கும் செயற்பாடுகளுக்கும் விரோ தமாகத் தமிழர் விடுதலைக்கூட் டணித் தலைவரின் செயற்பாடுகள் அமைந்திருப்பது தொடர்பாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுத்தல்.

(2) கட்சியின் ஒழுங்கு நடவ டிக்கை குழு நியமித்தல்.

(3) கட்சியின் தேர்தல் நியமனக் குழு நியமித்தல்.

(4) மத்திய செயற்குழுவில் ஏற் பட்டுள்ள உறுப்பினர் வெற்றிடங்களை நிரப்புதல்.

(5) பொதுக்குழு மற்றும் மாநாட் டைக் கூட்டுவது சம்பந்தமாக ஆராய்ந்து முடிவெடுத்தல்.

(6) நேரமிருப்பின் இன்றைய அர சியல் சூழ்நிலை தொடர்பாகக் கலந்து ரையாடுதல்.

இவையே முக்கிய விடயங் களாக குறிப்பிடப்பட்டுள்ளன.

மத்திய குழுவில் இப்போது மொத்தம் 43 பேர் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களுள் ஆவரங்கால் சின்னத்துரை, முன்னாள் யாழ்.மேயர் செல்லையன் மற்றும் அரவிந்தன், முகுந்தன் போன்றோர் ஆனந்தசங் கரிக்கு ஆதரவாகக் குரல் எழுப்பு வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரா.சம்பந்தன், என்ரவிராஜ், மாவை சேனாதிராஜா, ஜோசப் பரராஜசிங் கம், அ.சந்திரநேரு போன்ற எம்.பிக்க ளும், அவர்களின் ஆதரவாளர்க ளும் ஆனந்தசங்கரியின் தலைமைக்கு எதிரான கடும் போக்கைக் கடைப் பிடிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படு வதால் இக்கூட்டத்திற்கும் கட்சியின் தலைவர் என்ற முறையில் தலைமை வகிக்கப்போகும் வீ.ஆனந்தசங்கரி பெரும் எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டி யவராக இருப்பார் எனக் கருதப்படு கின்றது.

கட்சி யாப்புக்கு அமைவாக இந்த மத்திய குழு தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதால், தன்னைத் தலைமைப் பதவியிலிருந்து அகற்றும் முடிவை அது எடுத்தாலும் அம்முடிவு செல்லு படியற்றது என்று ஆனந்த சங்க ரியோ அல்லது அவரது தரப்பி னரோ வாதிடலாம் என எதிர்பார்க்கப்படு கிறது.

எது, எப்படியோ கூட்டத்துக்கு வீ.ஆனந்தசங்கரியே தலைமைவ கிக்கப் போகின்றார் என்பதால் அது அவருக்கு ஒரு 'பிளஸ் பொயிண்ட்' என்று அவரது ஆதரவாளர்கள் கருது கின்றனர். (ஐ)

## படையினர்....

(முதலாம் பக்கத் தொடர்சி)

சற்று தொலைவில் புதிய இடத்தில் மாவீரர் அலங்கார வளைவை அமைப் பதற்கு அங்கு இணக்கம் காணப்பட்டது. எனினும், படையினருக்கும் பொதுமக் களுக்குமான முறுகல் அப்பகுதியில் நேற்று மாலைவரை நீடித்தது. இத னால், அங்கு, பதற்றம் நிலவியது. (ஐ-4-70)

# சைக்கிள் திருட்டு முறியடிப்பு!

வட்டுக்கோட்டை - மூளாய் வீதியிலுள்ள அரைக்கும் ஆலை ஒன்றின் அரு கில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிளை, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் திருடிச் செல்லமுற்பட்டபோது அத்திருட்டு வீதியால் வந்தோரால் முறி யடிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது. பூட்டப்பட்ட நிலையில் இருந்த சைக்கிளை ரி.வி.எஸ். மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் திருடிச் சென் றனர். அதனைக்கண்டு சைக்கிள் உரிமையாளர் கூக்குரல் இட்டபோது வீதி யால் வந்தோர் திருடர்களை விரட்டிச் சென்றதாகவும், அப்போது திரு டர்கள் சைக்கிளை வீசிவிட்டு தலைமறைவாகிவிட்டார்கள் எனவும் கூறப் பட்டது. (4-161)

# பிரபா மீது யாழ்....

(முதலாம் பக்கத் தொடர்சி)

நிதி ஜெஹான் பெரேரா ஆகியோரு டன் கூட்டுச் சேர்ந்து ஜப்பான் ஹிட்டோ கபாஷி பல்கலைக்கழகத் தின் பேராசிரியரான கலாநிதி யோசிகோ அஷிவாவினால் இக்கணிப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

இக்கருத்துக் கணிப்பில் நோர்வே மீது 63 சதவீத மக்கள் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றனர்.

இவற்றுக்கெல்லாம் மாறாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் எதிர்க்கட்சிகளும் மக்களின் அவநம் பிக்கை பட்டியலில் முன்னணி வகிக் கின்றனர்.

ஜனாதிபதியும் எதிர்க்கட்சியினரும் முறையே 71 சதவீத, 81 சதவீத அவ நம்பிக்கை வாக்குகளைப் பெற்றிருக் கின்றனர்.

ஜனாதிபதி அதிகாரப் போட்டியில் ஈடுபடுவதற்கு முன் கடந்த ஓகஸ்ட் மாதத்தில் இக்கணிப்பு நடத்தப்பட்டது.

ஏனைய தமிழ் குழுக்கள் அர சிடமிருந்து பணம்பெற்று தமிழ் சமூ கத்துக்கு எதிராகச் செயற்படுகின்றனர் என்று 73 சதவீத மக்கள் தெரிவித் திருக்கின்றனர்.

கருத்துக்கணிப்புக்கு உட்படுத்தப் பட்ட மக்களின் மூன்றில் ஒரு பங்கிற் கும் மேற்பட்டோர் அரசின் மீது நம் பிக்கை வைக்கவில்லை. தமிழ் மக்க ளுடன் அதிகாரத்தை பகிர்ந்துகொள்ள சிங்கள தலைமைத்துவம் விரும்ப வில்லை என்பதே அவர்களின் கருத் தாகும்.

13 சதவீதத்தினர் மட்டுமே தேர்தல் நீதியானது, நேர்மையானது என்று கருதுகின்றனர் எனவும் அந்தக் கருத் துக்கணிப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

## முரசொலிமாறன்...

(முதலாம் பக்கத் தொடர்சி)

மத்திய அமைச்சர் முரசொலிமாறன் 1934ஆம் ஆண்டு ஓகஸ்ட் 17ஆம் திகதி திருவாரூர் மாவட்டத்தில் உள்ள திருக்குவளை கிராமத்தில் பிறந்தார்.

1967, 1971, 1996, 1998, 1999 ஆகிய ஆண்டுகளில் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெற்றவர். மேலும், 1977முதல் 1995வரை ராஜ்ய சபை உறுப் பினராகவும் இருந்தவர்.

பத்திரிகையாளர், எழுத்தாளர், அரசி யல்வாதி, திரைக்கதை வசனகர்த்தா, திரைப்படத்தயாரிப்பாளர்- இயக்குநர் என்று பன்முகத்தன்மை உடையவராக விளங்கினார்.

இவர் எழுதிய 'மாநில தன்னாட்சி' மற்றும் 'திராவிட இயக்க வரலாறு' என்னும் புத்தகங்கள் அரசியல் மற்றும் வரலாற்றுத்துறையில் போற்றுதலுக் குரிய இடத்தைப் பிடித்துள்ளன. முப் பதுக்கும் மேற்பட்ட தமிழ்ப் படங் களுக்கு வசனகர்த்தாவாகவும், 5 படங் களின் தயாரிப்பாளராகவும், 2 படங் களின் இயக்குநராகவும் தனது திற மையை நிலைநாட்டியவர்.

சென்னை பத்திரிகையாளர் மன் றத்தை நிறுவியதில் பெரும்பங்கு ஆற்றியவர் என்ற சிறப்பும் இவருக்கு உண்டு.

முரசொலிமாறனின் மறைவுக்கு இந்தியத் தலைவர்கள் இரங்கல் தெரி வித்துள்ளனர்.

இவரது இறுதிச் சடங்குகள் இன்று நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக் கின்றது. (ஐ-4)

## ஜெயலலிதா....

(முதலாம் பக்கத் தொடர்சி)

இந்நிலையில் 11 மாத இடை வெளிக்குப் பிறகு இந்த வழக்கின் தீர்ப்பு இன்று வழங்கப்படுகிறது. இத் தீர்ப்பு ஜெயலலிதாவின் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை-

தமிழ்நாட்டின் மிக முக்கிய பிர முகர் ஒருவரின் வீட்டில் இருந்து 12 வாகனங்களில் பொலீஸ் பாதுகாப் புடன் கோடிக்கணக்கான ரூபா பணம் மற்றும் நகைகள் ஹைதராபாத் துக்கு கொண்டு செல்லப்படுகின்றன என நேற்றிரவு சன் தொலைக்காட்சி செய்தியில் அறிவிக்கப்பட்டது.

அது மேலும் தெரிவிக்கையில்:-

இந்த வாகன அணியின் பயணம் பற்றி அவ்வப்போது அந்த முக்கிய பிரமுகருக்கு பொலீஸ் அறிவித்துக் கொண்டிருப்பதாகவும்-

அந்த முக்கிய பிரமுகர் நேற்று விசேட கூட்டம் ஒன்றில் பங்குபற்ற இருந்தபோதும் அதில் கலந்துகொள் ளாமல் இந்த வாகன அணியின் நகர்வை வீட்டில் இருந்தே நேரடியாக அவர் நெறிப்படுத்துகிறார் என்றும் கூறியது.

இன்று வெளிவரவுள்ள டான்சி வழக்குத் தொடர்பான தீர்ப்பு முதல் வர் ஜெயலலிதாவுக்கு எதிராக அமைந் தால் அவரது நேரடிக் கட்டுப்பாட் டில் இருக்கும் அவரது சொத்துக்கள் குறித்தும் சிக்கல்கள் எழும் என்று தமிழகச் செய்திகள் தெரிவித்தன.

# அரவம் தீண்டி போராளி சாவு!

கிளிநொச்சி,நவ.24

பளைப்பகுதியில் புலிகள் இயக்கப் போராளி ஒருவர் நேற்று அரவம் தீண் டிச் சாவடைந்தார் என 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

2ஆம் லெப்டினன்ட் நாவேந்திரன் (சின்னத்தம்பி துஷிகாந்தன், முதலைக் குடா, கொக்கட்டிச்சோலை, மட்டக்க ளப்பு) என்ற போராளியே சாவடைந்த வராவார். (ஐ-4-ரி)

## வளைவு....

(முதலாம் பக்கத் தொடர்சி)

பல்கலைக்கழக மாணவர்களால் அப் பகுதியில் மீள அமைக்கப்பட்டது.

இதேவேளை-

யாழ். நகரில் மாவீரர் வளைவுகள் மற்றும் அலங்காரங்களை அவதா னிக்கும் ரோந்துப் பணியில் படையி னரும் பொலீஸாரும் நேற்றும் ஈடுபட் டிருந்தனர். (ஐ-4-5)

## மாங்குளம்....

(முதலாம் பக்கத் தொடர்சி)

தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப் பாளர் பொன். தியாகம் ஈகச்சுடர் ஏற்றி னார். திருவுருவச் சிலைக்கான மலர் மாலைகளை லெப். கேணல் போர்க்கின் தாயார், தளபதி மார்ஷல், மாவீரர் பணி மனை துணைப்பொறுப்பாளர் அர்ச்சனா, கவிஞர் நாவண்ணன் ஆகியோர் அணி வித்தனர்.

நினைவுரைகளை பொன். தியாகம், மாங்குளம் பங்குத்தந்தை அன்ரனி சுதா, அம்பகாமம் அ.த.க. பாடசாலை யின் அதிபர் நாகேந்திரம் ஆகியோர் நிகழ்த்தினர்.

மூத்த தளபதி கேணல் பால்ராஜ் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ஐ-4-ரி)

## எரிமலையாக...

(முதலாம் பக்கத் தொடர்சி)

முயற்சிகள் போதுமானவையாக இல்லை என்பதே எனது கருத்தாகும். நாட் டின் தற்போதைய பிரதான பிரச்சினை மலையகத்துக்கும் பரவியுள்ளது. இந்த நிலையில், நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். நாம் ஒரு குறுகிய வட்டத்திற்குள் எம்மை முடக்கிக்கொண்டு இருக்கக்கூடாது. எமது நாடு தற்போது எரிமலைக்கு மத்தியில் இருக்கின்றது. கொழும்பில் சில தலைவர்களும், மக்கள் ஆணையை நிறைவேற்ற வேண்டிய சிலரும், தொழில்சார் மற்றும் வர்த் தக பிரதிநிதிகளும் நாட்டில் ஏனைய பிரதேசங்களில் இடம்பெறும் பிரச்சி னைகள் தொடர்பாக ஒன்றும் அறியா தவர்களாக உள்ளனர். இவர்களுக்கு இந்த நாட்டில் 90 சதவீதமான பகுதி களில் என்ன நடக்கின்றது என்பதே தெரியாது.

- இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார். (ஐ)

பிரிவு III
A/L 2004
கணக்கீடு
திரு.பாலவாசன
B.B.A. (F.M.Spl.)
PAPER CLASS
Tue.,Thu.-2.45-4.00.p.m. (S.L.T.)
ஆரம்பம்: 25.11.2003 - Tue. 2.45
விக்னா கல்வி நிறுவனம்
(25021)

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Start on 29/11/03
Account Packages
- QuickBook
- Payroll
(பல்கலைக்கழக மாணவர்களுக்குரியது)
Auto CAD & Drawing
(A/L முடித்த மாணவர்களுக்குரியது)
மேலதிக தொடர்புகளுக்கு
Director : STP Computer World (pvt) ltd
73, Palaly Road, Kantharmadam, Jaffna.

நீங்கள் விண்ணை பறித்து விடலாம்!

கணனிக் கல்விக்கான புலமைப் பரிசில்திட்டம் -2004
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்பமுடிவு திகதி : 30/11/2003 வரை நீடிக்கப்பட்டுள்ளது.
டிசம்பரில் O/L பரீட்சையும் ஏப்ரலில் A/L பரீட்சையும் எடுக்கவிருக்கும் மாணவர்களே!
உங்கள் பரீட்சை முடிவுகள் வெளிவரும் வரையுள்ள காலத்தைப் பயனுள்ள தாக்குவதற்கு, IIS இன் புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் கணனி உலகில் இணைந்து கொள்ளுங்கள்.
மேலதிக விபரங்களுக்கு:
IIS, 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

இணைப்புக்களுடனான மேசைத்தொலைபேசி விசேட கழிவில் விற்பனைக்கு
பவர் செலூலர்
24 மணிநேரத்தில் பக்கேஜ் இணைப்புக்களுடனான மேசைத்தொலைபேசி எப்பிரதேசத்திற்கும் பொருத்தித்தரப்படும்.
உள்வரும் அழைப்பு முற்றிலும் இலவசம்
வாகன சேவை 0712 522889
உத்தரவாதம் உண்டு
IDD இணைப்புக்கள் சிறிலங்கா ரெலிகொம்முடன் இணைக்கப்பட்டுள்ளது.
எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை என அறியத்தருகின்றோம்.
அத்துடன் அன்ரனா மூலம் இயங்குகின்றது.
மேலதிக விவரங்களுக்கு:-
HAND PHONE UNLOCK செய்து தரப்படும்
HAND PHONE பழுதுபார்க்கப்படும்
பவர் செலூலர் T.P 021-2227070, 0712-399220, 0712-384624, 0777-242416
மாபெரும் சிறப்புத்தள்ளுபடி
185 (முதலாம் மாடி) கஸ்தூரியார் வீதி, (ராஜா தியேட்டருக்கு அருகில்) யாழ்ப்பாணம்.
(C31329. 22-13-17)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 24.11.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.